செயலகம் தீ
பக்கம் 8

விமானம்
பக்கம் 9

தீக்கிரை
பக்கம் 11

அமைச்சரின் ஆதரவாளருக்கே
பக்கம் 13




ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 28

# உதயன்

சுடர் 27
கதிர் 210

வள்ளுவர் ஆண்டு 2043 | ஆனி 09 சனிக்கிழமை (23/06/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily


## அடையாளம் காணப்பட்டார் அமரே

கொழும்பு,ஜூன் 23
கட்டுவன துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் பிரபல பாதாள உலக தலைவரான ஜூலம்பிட்டிய அமரே என்பவர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றில்நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது சாட்சியாளர்கள் நால்வரில் மூவர் ஜூலம்பிட்டிய அமரேயை அடையாளம் காண்பித்துள்ளனர்.

இந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் ஜூலம்பிட்டிய அமரே தொடர்புடையவர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (த)

# ஆஸி. கடலில் கவிழ்ந்த படகில் இலங்கையர் எவரும் இல்லை

### அறிவிப்பை வாபஸ் வாங்கியது ஆஸி. கடற்பாதுகாப்புச் சபை

ஜகார்த்தா,ஜூன் 23
சுமார் 200 அகதிகளை ஏற்றிச் சென்று ஆஸ்திரேலிய கிறிஸ்மஸ்தீவு கடல்பகுதியில் விபத்துக்குள்ளான படகில் இருந்து காப்பாற்றப்பட்ட 110 பேரில் இலங்கையர்கள் எவரும் இல்லை என இந்தோனேசியாவிலுள்ள இலங்கை தூதுவர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராய்ச்சி தெரிவித்துள்ளார். இந்தப் படகு விபத்தில் உயிரிழந்தவர்கள் இலங்கையர்கள் என முன்னர் அறிவித்த ஆஸ்திரேலிய கடற்பாதுகாப்பு அதிகார சபை பின்னர் அந்த அறிவிப்பை வாபஸ் வாங்கியதுடன் இலங்கையர்கள் எவரும் உயிரிழந்ததாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அறிவித்தது.

இலங்கையர்கள் என நம்பப்படும் 200 அகதிகளை ஏற்றிச் சென்ற படகொன்று நேற்றுமுன்தினம் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகே கடலில் விபத்துக்குள்ளானதாகவும் அதில் பயணித்த 75க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் ஏ.எப்.பி மற்றும் சிட்னி மோனிங்

04↘

# நில மீட்புப் போரில் மு.காவும் கூட்டமைப்புடன் குதிக்கிறது

### கட்சித் தலைமை அதிரடி முடிவு

கொழும்பு, ஜூன் 23
வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்துவரும் சாத்வீக வழியிலான ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிரடியான தீர்மானமொன்றை எடுத்துள்ளது என மிகவும் நம்பகரமாகத் தெரிகின்றது.

வடக்கைப் போன்று தற்போது கிழக்கிலும் அரசு திட்டமிட்ட அடிப்படையில் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதன் காரணமாகவே முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளது என அறியமுடிகின்றது.

கிழக்கில் எமது மக்களின் காணிகள் சுவீகரிப்பது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் அரசிடம் சுட்டிக்காட்டியும் உரிய தீர்வு கிடைக்காததன் காரணமாகவே போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என மு.காவின் முக்கிய பிரமுகரொருவர் நேற்றுமாலை 'உதயனி'டம் தெரிவித்தார்.

இதுவிடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் விரைவில் முக்கிய பேச்சுகளில் ஈடுபடவுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தக் கலந்துரையாடல்முடிவடைந்தபின்னர் இருகட்சிகளும்இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டங்களை வடக்கு – கிழக்கில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என எதிர்பார்க்

04↘

## பதற்றமின்றி நிம்மதியாக இருக்க முடியவில்லை

### புலம்புகிறார் வெளிவிவகாரச் செயலர்

கொழும்பு,ஜூன் 23
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை (நவநீதம்பிள்ளை)ஜெனிவாக் கூட்டத்தொடரின் ஆரம்ப உரையில் இலங்கையைப் பற்றிஎதுவும்குறிப்பிடவில்லை என்பதற்காகப் பதற்றப்படாமல் நிம்மதியாக இருந்து விடமுடி

04↘

## அத்துமீறும் தமிழக மீனவர் மீது சர்வதேசக் கடல் சட்டம் பாயும்

### றியோ மாநாட்டில் மஹிந்த எச்சரிக்கை

றியோடி ஜெனிரோ, ஜூன் 23
வடக்கே அமைந்துள்ள அயல்நாட்டு மீனவர்கள் வேண்டுமென்றே இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து, இழுவை மடி வலைகளைப் பயன்படுத்தி மீன்வளத்தையும், அரிய கடல் செல்வங்களையும் கொள்ளையிடுகின்

04↘

## திருமுறிகண்டி மக்களின் சம்மதமின்றி காணி பிரிப்பு

### மீளக்குடியமர்வதற்கு அவர்கள் கடும் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூன் 23
திருமுறிகண்டி மீள்குடியேற்றத்தின் போது ¼ ஏக்கர் காணிகள் தமக்கு வழங்கப்படுவதால் தமது சொந்தக் காணிகள் பிரிபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக அவர்கள்மேலும்

04↘

## ஐ.நா. குழுவையும் அரசு நாட்டுக்குள் அனுமதிக்கும்

### சர்வதேச அழுத்தங்களை அடுத்து இந்த முடிவு

கொழும்பு,ஜூன் 23
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தால் இலங்கைக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டிருந்த உண்மைகளைக் கண்டறியும் குழு இலங்கை வர அரசு எதிர்ப்புத் தெரிவிக்காது என இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன. அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை அடுத்தே இலங்கை அரசு இந்த முடிவை எடுத்திருக்கலாம் எனவும் மேலும் தெரி

04↘

## அரசியல் தீர்வு காண இன்னும் ஏன் தாமதம்?

### மஹிந்தவிடம் துருவினார் மன்மோகன் சிங்

றியோடி ஜெனிரோ, ஜூன் 23
இலங்கையில் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை வழங்குவதில் இன்னும் தாமதம் காட்டப்படுவது ஏன்? என இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பினார். தீர்வுக்கான முயற்சிகளைத் துரிதப்படுத்தி விரைவில் நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறும் அவர் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆலோசனை வழங்கினார்.

பிரேஸில் றியோடி ஜெனிரோவில் உள்ள வின்ட்ஸர் ஹோட்

04↘

## அரசியல் தேவைக்காக பயன்படுத்தப்படுகிறது நீதி

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 23
நாட்டில் அரசியல் இலாபங்களை ஈட்டும் நோக்கில் நீதி பயன்படுத்தப்படுகின்றது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியல் இலாபங்களை முதல்நிலைப்படுத்தி நாட்டின் நீதித்துறை இயங்கி வருவதாக

04↘

## அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இல்லை

### கிழக்குத் தேர்தலை கருத்தில் கொண்டு அரசு முடிவு

கொழும்பு, ஜூன் 23
இந்த மாதம் நடைபெறுமெனப் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவை மாற்றம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை முன்கூட்டிக் கலைக்கப்படுவதை அடுத்தே இந்த அமைச்சரவை மாற்றத்தை அரசு ஒத்திவைத்துள்ளது என அரசின் உயர்மட்ட அமைச்சர் ஒருவர் ''உதயனி''டம் தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றத்தின் போது முஸ்லிம் கட்சிகளுக்குள்ளும் சில மாற்றங்கள் ஏற்படலாமெனவும் அரசிலுள்ள முஸ்லிம் கட்சிகள் அமைச்

04↘

## நாடு முழுவதும் ஆயுதக் குழுக்கள்

### அச்சம் வெளியிடுகிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 23
ஆயுதக்குழுக்கள் நாடு முழுவதும் சுதந்திரமாக நடமாடுகின்றன. குற்றவாளிகள் விரும்பிய நேரம் சிறைக்குச் சென்று விரும்பிய நேரம் வெளியே வருகின்றனர். மிகவும் பயங்கரமானதொரு யுகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்

04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லரை விஞ்சும் அளவுக்கு மஹிந்த அரசின் செயல்கள்

## தமர அமில தேரர் குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூன் 23

தற்போதைய அரசின் ஏகாதிபத்தியப் பயணம் தொடர்பில் தேவைக்கு அதிகமான அளவு உதாரணங்களை கூற முடியும்.

ஹிட்லரையும் விஞ்சும் அளவுக்கு நாட்டில் தற்போதைய அரச ஹிட்லர்கள் செயலாற்றி வருவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் பிரதித் தலைவர் தமர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பு தேசிய நூலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கச் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரங்ஜித் தேவசிறிக்கு காணப்படும் மரண அச்சுறுத்தல் குறித்துத் தெளிவுபடுத்த இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த அச்சுறுத்தல் விரிவுரையாளர் ஒருவருக்கோ அல்லது சாதாரண பிரஜைக்கோ விடுக்கப்பட்டுள்ள ஒன்றென பாராது சமூகம் என்ற அடிப்படையில் அனைவரும் எதிர்கொண்டுள்ள ஜனநாயக சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல் என பார்ப்பதாக தமர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிணங்களைத் தொட்டுவிட்டுச் செல்லவோ வெள்ளைக் கொடி பறக்க விடவோ இனியும் இடமளிக்காது அதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தேரர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கச் சம்மேளனத்தால் மேற்கொள்ளப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையை குழப்பவும் சம்பந்தப்பட்ட நபர்களை பயமுறுத்தவுமே இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக தமர அமில தேரர் குறிப்பிட்டார்.

தனியே சம்பளப் பிரச்சினை மாத்திரம் வலியுறுத்துவது தமது தொழிற்சங்க நடவடிக்கையின் நோக்கம் அல்ல எனவும் முழுச் சுதந்திர கல்வி, ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கான ஒரு கட்ட நடவடிக்கை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் வெள்ளை வானை அனுப்பி, அவதூறு பரப்பி, பயமுறுத்தி நாட்டின் தேவைக்காக மேற்கொள்ளப்படும் தொழிற்சங்க நடவடிக்கையைத் தடுக்க முடியாது எனவும் தமர அமில தேரர் மேலும் தெரிவித்தார். (த)

## அட்டகாசம் செய்த சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்னவுக்குப் பிணை



கொழும்பு,ஜூன் 23

வரகாபொல - கொஹும்பதெனிய பகுதியில் குடிதண்ணீர் செயற்திட்டமொன்றை உடைத்து 10 லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் சரணடைந்த சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன கடும் எச்சரிக்கையுடன்பிணையில்விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வரகாபொல நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலையான சிரேஷ்ட அமைச்சர் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிரேஸ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்னவை 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து வரகாபொல நீதவான் அவந்த லக்மால் விக்ரமசூரிய உத்தரவிட்டார்.

மேலும் நேற்றைய தினம் வரகாபொல பொலிஸ் நிலையத்தில் சென்று வாக்குமூலம் அளிக்குமாறும் நீதிவான் சிரேஷ்ட அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினருக்கு அச்சுறுத்தல் எதுவும் விடுக்கக்கூடாதென நீதிவான் சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்னவை எச்சரித்துள்ளார்.

சிரேஷ்ட அமைச்சருடன் நீதிமன்றில் முன்னிலையான அவரது பாதுகாப்புப் பிரிவுப் பொலிஸாரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கைது செய்யப்பட்ட 18 சந்தேகநபர்கள் இதற்கு முன்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். (த)

## சங்கானைத் தாயாரின் இறப்பு கருக்கலைப்பால் நடந்ததல்ல

### வயிற்றில் ஏற்பட்ட கட்டியே இரத்தப்போக்குக்கு காரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

சங்கானையைச் சேர்ந்த சந்திரதாஸ் பேபி (வயது 42) என்ற இரு பிள்ளைகளின் தாயாரின் இறப்பு, அவரது வயிற்றிலிருந்த கட்டியினால் ஏற்பட்ட அதிக இரத்தப் போக்குக் காரணமாக ஏற்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

''வயிற்றில் ஏற்பட்ட கட்டியைக் கவனிக்காது விட்டதனால் அது சீழ்கட்டி வெடித்துள்ளது. அதனால் ஏற்பட்ட இரத்தப் போக்குக் காரணமாகவே அவர் உயிரிழந்தார்'' என்று யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இரத்தப் போக்குடன் தாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதால், சட்டவிரோத கருக்கலைப்பால் ஏற்பட்ட இரத்தப் பெருக்காக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் அவர் 18ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டார்.

அங்கு நடந்த மருத்துவ பரிசோதனைகளில் அவரது வயிற்றிலிருந்த கட்டியே வெடித்தது என்று தெரிய வந்தது. அதையடுத்து அவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் குறித்து நேற்றைய உதயன் பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தில் வெளியான செய்தியில், முற்கொண்டு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சட்டவிரோத கருக்கலைப்புக் காரணமாகவே இறப்புச் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தத் தகவல் தவறானது என்பதுடன் வயிற்றில் ஏற்பட்ட கட்டிகாரணமாகவே அவர் உயிரிழந்தார் என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தவறான செய்தியால் சந்திரதாஸ் பேபியின் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்துக்காகவும் அவரது குடும்ப கௌரவத்துக்கு ஏற்பட்ட இழப்புக்காவும் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட மன உளைச்சல்களுக்காவும் சந்திரதாஸ் பேபி குடும்பத்தினரிடம் உதயன் வருத்தம் தெரிவிப்பதுடன் பகிரங்க மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறது. (ஆ-ர்)

## வான் மரத்தில் மோதி பௌத்த பிக்கு சாவு

கொழும்பு,ஜூன் 23

மொனராகலை - தனமல்வில பிரதான வீதியின் 37ஆம் கட்ட பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பிக்கு ஒருவர் மரணமானதோடு மேலும் ஐந்து பிக்குகள் உள்ளிட்ட அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த வீதியில் பயணித்த வான் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் 52 வயதுடைய பிக்கு மரணமானதோடு படுகாயமடைந்த ஐந்து பிக்குகள் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வான் சாரதி தனமல்வில வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார். (த)

## நவநீதம்பிள்ளையும், மேனனும் இங்கு அவசரமாக வருவதன் நோக்கம் என்ன?

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேள்வி

கொழும்பு, ஜூன் 23

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனும் அவசரமாக இலங்கைக்கு வரவேண்டிய தேவை என்ன? என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கேள்வியெழுப்பியுள்ளது.

மேற்படி இருவரையும் நாட்டுக்குள் அனுமதிப்பது ஆபத்தானதாகும். எனவே அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எவ்வாறாயினும் நவநீதம்பிள்ளை மற்றும் சிவசங்கர் மேனனின் வருகையைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

**ஐ.நாவோ நவநீதம் பிள்ளையோ இலங்கைக்கு நன்மை ஏற்படும் வகையில் செயற்படவில்லை.**

சர்வதேசத்தின் தலையீடுகள் தொடர்பில் அரசு உறுதியான நிலைப்பாட்டுடன் செயற்பட வேண்டும். நவநீதம் பிள்ளையை நாட்டுக்கு வருமாறு அழைக்கின்றமையானது முட்டாள்தனமான செயற்பாடாகும். உள்நாட்டு யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் ஐ.நாவோ நவநீதம் பிள்ளையோ இலங்கைக்கு நன்மை ஏற்படும் வகையில் செயற்படவில்லை. மாறாக நாட்டுக்கும் இராணுவத்துக்கும் எதிரான நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர்.

எனவே ஐ.நா. பிரதி நிதி தொடர்பில் எவ்விதமான நம்பிக்கையினையும் வைக்க இயலாது. அதே போன்று தான் இந்தியாவும், வெளியில் நண்பனைப் போல் காட்டிக்கொண்டு உள்ளே அமெரிக்காவுடன் கூட்டணியினை அமைத்து இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்குகின்றது. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் திடீரென இலங்கை வருகின்றமையானது பல சந்தேகங்களையே தோற்றுவித்துள்ளது.

எனவே அரசு மேற்படி இருவரின் வருகை தொடர்பிலான உண்மையான நிகழ்ச்சி நிரலை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். பொது மக்கள் மிகவும் அவதானத்துடனேயே உள்ளனர். தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இவர்களின் வருகையினை வன்மையாக கண்டிக்கின்றது -என்றார். (த)

## வவுனியாவில் தற்கொலை அங்கி மீட்பு

வவுனியா,ஜூன் 23

வவுனியா, செட்டிக்குளம் வாவியொன்றுக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த தற்கொலை அங்கியொன்றைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து குறித்த பகுதியில் சோதனையிட்ட பொலிஸார் மேற்படி தற்கொலை அங்கியைக் கண்டெடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சொந்தமான சுமார் 7 கிலோகிராம் நிறையுடைய மேற்படி தற்கொலை அங்கி, சேதமாகாத நிலையில் காணப்பட்டதாகவும் அதனைச் செயலிழக்கச் செய்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (த)

## உள்ளூர் சந்தைகளில் சீனி விலை குறையாது

### அரசின் வரி அதிகரிப்பே காரணம்

கொழும்பு,ஜூன் 23

உலக சந்தையில் சீனி விலை குறைவாக உள்ளபோதிலும் இலங்கையில் சீனி இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால் இலங்கையில் விலையைக் குறைக்க முடியாதிருக்கும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் சீனி மீதான வரி கிலோவுக்கு 10 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் புதிய உற்பத்தி காரணமாக உலக சந்தையில் சீனி விலை குறைவடைந்துள்ளதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர். எனினும், இதன் பலனை இலங்கை நுகர்வோர் அனுபவிக்க முடியாதிருக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

''தற்போது ஒரு கிலோ சீனியின் மொத்தவிலை 95 ரூபாவாக உள்ளது. இதை 85 ரூபாவாகக் குறைக்க முடியும். ஆனால், புதிய வரி அதிகரிப்பு காரணமாக அது சாத்தியமில்லை'' என வர்த்தகர் ஒருவர் கூறினார். இல[illegible]யின் 80 சதவீதம் இறக்குமதி [illegible]லும் இந்தியா மற்றும் பிரேஸிலில் இருந்து சீனி இறக்குமதி செய்யப்படுகிறது. (த)



அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி முன்னிலை சோசலிசக் கட்சி நேற்றுமுன்தினம் [illegible] சுற்றுவட்டத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. ஒரு மாத காலத்தில் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக கடந்த மாதம் உறுதி வழங்கப்பட்டது. எனினும், அவர்களை விடுதலை செய்ய இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமைக்கும் ஆர்ப்பாட்டத்தின்போது எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பாட செயலமர்வில் 500இற்கு மேற்பட்ட மாணவர்கள்

இந்தச் செயலமர்வு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தமிழ் பாட பரீட்சையில் தோற்ற வுள்ள மாணவர்க ளுக்காக நடத் தப்பட்டது.

வவுனியா, ஜூன் 23

வவுனியா தெற்கு கல்வி வலயமும், ரெக்னோ வேல்ட் நிறுவனமும் இணைந்து நடத்திய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தமிழ்ப் பாட செயலமர்வில், 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற இச் செயலமர்வு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெற்றது. இதில் வவு னியா நகர சபையின் பதில் தலைவர் எம்.எம் ரதன். ஆசி ரிய ஆலோசகர் எஸ்.தேவ தாஸ் தமிழ் பாட உதவிக் கல் விப்பணிப்பாளர் எஸ்.உதய குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் சிறப்புரையாற்றிய கல்விப் பணிப்பாளர் ரெக்னோ வேல்ட் கல்வி நிலையம் மாண வர்களின் கல்வி வளர்ச்சி கருதி இவ்வாறான செயல மர்வுகளை நடத்துவது பாராட் டத்தக்கது. இவர்களுடைய பணி மேலும் தொடர வேண் டும் - என்றார்.

நன்றியுரையை ரெக்னோ வேல்ட் கணினிக் கல்வி நிலையத்தின் கிளை முகா மையாளர் செல்வி எஸ். ஜெய ரொக்சினி நிகழ்த்தினர்.

தமிழ்ப் பாட வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகியவற் றுக்கான இச் செயலமர்வில் மாதிரி வினாக்கள் அடங்கிய அச்சடித்த குறிப்புக்கள் வழங் கப்பட்டன. வளவாளர்களாக கோமரசங்குளம் தமிழ்ப் பாட ஆசிரியர் ஈ.எஸ். வரதன், பண் டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி ஆசிரியர் எஸ். கரு ணாகரன் ஆகியோர் கடமை யாற்றினர்.

இதில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த செட்டி குளம், வவுனியா நகர கோட் டப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும், வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த மாணவர்களும் எனச் சுமார் 500க்கும் மேற்பட்ட மாண வர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதேவேளை இந்து நாக ரிகத்துறைக்கான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி திங் கட்கிழமை இடம்பெறவுள் ளது. (க-400)

# மீன்பிடித்துறை தொடர்பாக பல்வேறு நெருக்கடிகள்

### மாந்தை மேற்கு பி.ச.உறுப்பினர் கடிதம்

மன்னார்,ஜூன் 23

மன்னார் தோட்டவெளியிலுள்ள ஜோசப்வாஸ் நகரில் வாழுகின்ற மக்கள் தற்போது பயன்படுத்தி வருகின்ற மீன்பிடித்துறை தொடர்பாகப் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்று மாந்தை மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினரான ஜேம்ஸ் சுதாகரன் மன்னார் அரச அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 1999ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக மன்னார் விடத்தல்தீவைப் பூர்வீக இட மாகக்கொண்டு மீன்பிடித் தொழிலைத் தமது சீவனோ பாயத் தொழிலாகக் கொண்ட சுமார் 350 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர் கள் மன்னாரில் உள்ள தோட்ட வெளி எனும் கிராமத்தில் மன்னார் மறைமாவட்டத் திருச்சபைக்குரிய காணியில் அதிவணக்கத்திற்குரிய ஆயர் அவர்களால் குடியமர்த்தப் பட்டனர்.

எமது ஆயரால் எமக்கு வழங்கப்பட்ட நிலப்பரப்பில் கம்புகளாலான நிரந்தர ஓலைக் குடிசைகளை அமைத்து எமது உறைவிட வசதியினை மன்னார் கிராம அபிவிருத்தி நிறுவனம் பூர்த்தி செய்து ஜொசப்வாஸ் நகர் என்ற பெயரில் எமது பகுதி நிரந்தர குடியேற்றக் கிராமமாக பிர தேச செயலகத்தில் பதியப் பட்டுள்ளது.

மேலும் எமது பகுதியில் நாம் எமக்கென்று தனியான தொரு பாடசாலையை அமைத் துள்ளோம். மற்றும் மீள் எழுச் சிக் கட்டடம், முன்பள்ளி, நற்கருணைநாதர் ஆலயம், விளையாட்டு மைதானம் போன்ற நிரந்தர பொதுக் கட்டடங்களையும் அமைத் துள்ளோம்.

இன்னும் எமது கிராமத் தில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கம், விளையாட்டுக்கழகம் போன் றனவும் அமைக்கப்பட்டுள்ளன.

மீன்பிடியைத் தொழி லாகக் கொண்ட எமது கிரா மத்தில் சுமார் 300க்கும் மேற் பட்டோர் மீனவர்களாகவே காணப்படுகின்றார்கள். நாம் எமது மீன்பிடித் துறையாக இலங்கைத் துறைமுக கூட் டுத்தாபனத்திற்கு சொந்த மான அரச நிலப்பரப்பிலேயே தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இவற்றுக்கு இலங்கை துறை முகக் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் அனுமதியையும் பெற்றிருப்பதை தங்களுக் குத் தெரியப்படுத்துகின்றேன்.

நாம் சமீப காலமாக எமது மீன்பிடித் துறை சம்பந்தமா கப் பலரின் இடையூறுகளுக் கும், நெருக்கடிகளுக்கும் ஆளாகியுள்ளோம். தற்போது நாம் தொழிலுக்குச் செல்லும் மேற்படி கூட்டுத்தாபனத் திற்கு சொந்தமான நிலப் பரப்பை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் அதற்கான காலக்கெடு ஓரிரு வாரங்கள் மட்டுமே என்றும் எமக்குக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஏனைய மீள் குடியமர்வுக் கிராமங் களுக்கு அமைந்துள்ளதைப் போன்று எமக்கும் ஒரு நிரந் தர மீன்பிடித் துறையை அமைத்துத் தருமாறு கேட் டுக்கொள்கின்றேன் - என் றுள்ளது. (க)

## 10 பொதுநோக்கு மண்டபங்கள் ஒரேநாளில் திறப்பு

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளில் ஒரே நாளில் 10 பொது நோக்கு மண்டபங்கள் நாளை திறந்து வைக்கப்படவுள்ளன.

பொருளாதார அபிவி ருத்தி அமைச்சின் மீள் எழுச் சித் திட்டத்தின் கீழ் கிராமிய அபிவிருத்தி அமைப்புகளி னால் உருவாக்கப்பட்ட அல் லது புனரமைப்புச் செய்யப் பட்ட 10 பொதுநோக்கு மண் டபங்களே திறந்து வைக் கப்படவுள்ளன. அம்பலப் பெருமாள்குளம், கோட்டை கட் டிய குளம், உயிலங்குளம், தேறாங் கண்டல், புகழேந்தி நகர் ஆகிய கிராமங்களில் உள்ள பொது மண்டபங்களே திறந்து வைக்கப்படவுள்ளன.(ங-க-18)

### கை கொடுக்கும் கரங்கள்....



மீளக்குடியமர்ந்துள்ள முள்ளிக்குளம் கிராம மக்களுக்கு 'பசி ஏன்?' திட்டத்தின் கீழ் தேசிய மீனவ ஒத்துழைப்புப் பேரவையால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் முதற்கட்டமாக ஒரு வார காலத்துக்கெனச் சுமார் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் இந்த உலர் உணவுப் பொதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. (ங-க-12)

## நெடுங்கேணியில் சமுர்த்தி நிவாரணம்

இதற்கென சமுர்த்தி அதிகார சபையால் 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா,ஜூன் 23

வவுனியா மாவட்டத் திலுள்ள நெடுங்கேணி பிர தேச செயலகப் பிரிவில் வறு மைக்கோட்டின் கீழ் வாழும் ஆயிரத்து 129 குடும்பங் களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்படு கின்றன.

கடந்த காலப் போர் அனர்த் தத்தின் போது இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் சமுர்த்தி முத் திரை பெறுவதற்குத் தகுதி யான குடும்பங்களின் விவ ரம் பிரதேச செயலகம் மூலம் திரட்டப்பட்டுள்ளது. இந்தச் சமுர்த்தி முத்திரைத் திட்டம் முதல் முதலாக நெடுங்கேணி பிரதேச செயலகத்திலுள்ள இருபது கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதற்கென சமுர்த்தி அதி கார சபையால் 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஒன்று தொடக்கம் இரண்டு அங்கத் தவர்களைக் கொண்ட 599 குடும்பங்களுக்கு 750 ரூபா பெறுமதியான முத்திரை களும், மூன்று தொடக்கம் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட 429 குடும்பங்களுக்கு 1200 ரூபா பெறுமதியான முத்திரை களும், 5 அங்கத்தவர்களுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட 101 குடும்பங்களுக்கு 1500 ரூபா முத்திரைகளும் வழங் கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட சமுர்த்தி அதிகார சபையின் உதவி ஆணை யாளர் எஸ்.சபாலிங்கம் தெரி வித்தார். (க-400)

## நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் நாயன்மார் குருபூசை

மன்னார், ஜூன் 23

மன்னாரில் அறுபத்து மூன்று நாயன்மார் பெரு விழாவும், மாணிக்க வாசகர் குரு பூசை நிகழ்வும் சிறப் பான முறையில் இடம்பெற வுள்ளன.

இந்த இரு நிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத் தில் மனோகரக் குருக்கள் நற்பணி மன்றத்தின் தலை வர் பிரம்மஸ்ரீ ஐங்கரசர்மா தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்த நிகழ்வின்போது சிறப்புச் சொற்பொழிவுகளும் பண்ணிசை, நடனம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன. தொடர்ந்து இந்த நிகழ்வின்போது மன்னாரில் இயங்கி வரும் அறநெறிப் பாடசாலைகள், இந்து நிறு வனங்கள் இந்துப் பாடசாலை கள் என்பனவற்றுக்கு 63 நாயன் மார்களினதும் திருவுருவப் படங்கள் கையளிக்கப்பட வுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் கலாநிதி மனோ கரக் குருக்கள் நற்பணி மன் றத்தின் மூலமாக 63 நாயன் மார்களுடைய குரு பூசைகளை யும் தொடர்ந்து நடத்தும் நோக்கில் இந்தப் பணியைத் தாம் முன்னெடுத்துள்ளதாக மன்றத்தின் செயலாளரான பிரம்மஸ்ரீ ம.ஸ்ரீ. தர்ம குமார சர்மா தெரிவித்துள்ளார். (க-12)

## அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் அருவிதோட்டம் சிவானந்தா வித்தி.

மெனிக்பாம் பகுதியில் உள்ள வவுனியா அருவி தோட் டம் சிவானந்தா வித்தியா லயம் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இயங்கி வருகின்றது.

நீண்டகாலமாக இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வி நட வடிக்கைகள் பாதிக்கப்பட் டுள்ளன. சில பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாததால் இந் தப் பாடவேளைகளில் மாண வர்களுக்குக் கற்பித்தல் இடம்பெறுவதில்லை.

இந்தப் பாடசாலையில் சுற்றிவரப் பாதுகாப்பான வேலி இல்லாததால் ஆடு, மாடுகள் உட்படப் பல்வேறு பிராணி கள் வகுப்பறைகளுக்குள் நுழைந்து பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துவதுடன் கால் நடைகளின் கழிவுகளால் வகுப்பறைகளும் அசுத்தமாக் கப்பட்டு வருகின்றன.

பாடசாலையை அடையா ளப்படுத்தக் கூடிய நுழை வாயில்கள் இன்மையால் மாணவர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். நவீன கற்பித்தல் சாதனங்கள் எது வும் இந்தப் பாடசாலையில் இல்லை. செய்முறை விளக் கங்களைப் பெற்றுக் கொள் வதற்கும், கணினி சம்பந்தப் பட்ட விடயங்களை அறிவ தற்கும் உபகரணங்கள் எது வுமே இந்தப் பாடசாலையில் இல்லை.

மேலும் தூர இடங்களில் இருந்து வரும் ஆசிரியர்கள் தங்கியிருந்து கல்வி கற்பிப் பதற்கான விடுதி வசதிகளும் இங்கில்லை. தினமும் நீண்ட தூரத்திலிருந்து பஸ்ஸில் பிர யாணம் செய்யும்போது குறித்த நேரத்துக்குப் பாடசாலைக் குச் சமுகம் அளிப்பதில் சிர மம் ஏற்படுவதாகவும் ஆசி ரியர்கள் தெரிவிக்கின்றனர்.

மின்சார வசதிகளோ, தொலைபேசி வசதிகளோ இல்லாமையால் தகவல்களை ஏனைய இடங்களுக்குப் பரி மாறுவதற்கு நீண்டதூரம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்குரிய அரங்க வசதி மற்றும் விளையாட்டு மைதான வசதிகள் எதுவும் இங்கு இன்மையால் இணை பாடவிதான செயற்பாடு களில் திறமையை வெளிப் படுத்த முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளனர்.(க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில மீட்புப் போரில்...

01↘ கப்படுகின்றது. இந்தியாவில் சிகிச்சை பெற்று வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடு திரும்பிய பின்னர் இரு கட்சிகளும் சந்தித்துப் பேசும் எனவும் அறியமுடிகின்றது.

## அமைச்சரவை மாற்றம்...

01↘ சரவை மாற்றத்துடன் அரசுடன் முரண்படும் சூழ்நிலை தோன்றலாம் எனவும் கருதப்படுவதாகத் தெரிகிறது.

இந்த முறுகல் நிலை, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு சில சங்கடங்களை தோற்றுவிக்கலாம் என்பதையடுத்தே அமைச்சரவை மாற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என மேற்படி அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரவையில் பெருமளவிலேயே மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. சில புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதியமைச்சர் பதவிக்காக ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் எம்.பிக்கள் இருவரும் பிரதியமைச்சர் பதவிப் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றனர் எனவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அமைச்சுகளுக்கான செயலாளர் பட்டியலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்த அந்த அரச உயர் மட்ட அமைச்சர் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பிற்பாடே அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார். (த-சி)

## நாடு முழுவதும் ஆயுதக்...

01↘ ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற பாரத லக்ஷ்மனுக்கான அனுதாபப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கூட்டங்கள் நடத்த முடியாத - இறந்தவர்களுக்குத் தானம் கொடுக்க முடியாத - வெள்ளைக் கொடிகளை ஏற்ற முடியாத யுகத்தில்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

பாரத லக்ஷ்மன் மரணிப்பதற்கு சில நாள்களுக்கு முன் அவரை நான் திருமண வீடொன்றில் சந்தித்தேன். அப்போது தனது கட்சி தனக்கு அநீதி இழைத்துவிட்டது என அவர் என்னிடம் மிகவும் கவலையுடன் கூறினார்.

இந்த நாட்டில் சட்டம் என்பது இல்லை. ஆயுதக் குழுக்கள் நாடு முழுவதும் சுதந்திரமாக நடமாடுகின்றன. இதன் விளைவாகவே பாரதவின் கொலை இடம்பெற்றது.

குற்றவாளிகள் நினைத்த நேரம் சிறைக்குச் செல்கின்றனர். நினைத்த நேரம் வெளியே வருகின்றனர். கொலைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதுமில்லை.

இன்று இந்த நாட்டில் வாழமுடியாத நிலை மாத்திரமன்றி மரணித்தும் வாழ முடியாத நிலையே காணப்படுகின்றது. நீதியற்ற ஆட்சியே இடம்பெறுகிறது - என்றார்.

## அரசியல் தேவைக்காக...

01↘ வும் அதற்கு எதிரான தமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை எனவும் அவர்சுட்டிக்காட்டியுள்ளார். அரச அதிகார துஷ்பிரயோகம் நாட்டின் நீதித்துறையை வெகுவாகப் பாதித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுவன துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இதற்கான சிறந்த உதாரணம் எனவும் அவர் கூறினார். தான் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்குச் சென்றிருந்ததாகவும், சம்பவம் இடம்பெற்று மூன்று நாள்கள் கடந்தும் பொலிஸார் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறே அரசு நாட்டின் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட முயற்சிக்கின்றது எனவும் நாட்டின் சட்டம் ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்டும் நீண்ட பயணத்தை ஆரம்பித்துள்ளோம் எனவும் அவர் கூறினார். (த)

## ஐ.நா. குழுவையும் அரசு...

01↘ விக்கப்படுகிறது. ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க முடியாது என இலங்கை அரசு முன்னர் கூறியிருந்த நிலையில், தற்போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. ஐ.நா. மற்றும் அதன் முகவர் அமைப்புகளுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவரும் இலங்கை, நவநீதம்பிள்ளை அனுப்பவுள்ள உண்மைகளைக் கண்டறியும் குழுவை வரவேற்கும் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் போருக்குப் பின்னரான தற்போதைய நிலைமைகளை நேரில் அறிந்து கொள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு வருமாறு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளது. ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதிகளால் நவநீதம்பிள்ளைக்கு விடுக்கப்பட்ட இந்த அழைப்பை அவர் ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்ப்பதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழு இலங்கைக்கு வருவதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் இந்த வாரம் அறிவிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு கூறியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தின்படி இலங்கைக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்பி வைத்தல் தொடர்பில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், தனது இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவின் பயணம் அமையும் எனவும் அவர் அரசுக்குத் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள உண்மைகளைக் கண்டறியும் குழுவுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்க மறுத்தால், நவநீதம்பிள்ளை கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை அடுத்தே இலங்கை அரசு இந்த முடிவை எடுத்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. (த)

## பதற்றமின்றி நிம்மதியாக...

01↘ யாதுஎன்றுஇலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தமுறை கனடா மாத்திரமே இலங்கை பற்றி சிறிது குறிப்பிட்டுக் கூறியதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனாலும் ஒவ்வொரு நாடுகளினாலும் முன்வைக்கப்படும் அறிக்கைகளை இலங்கை தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் அவர் கூறினார்.

'ஆணையாளர் எதனையும்குறிப்பிட்டுக்கூறவில்லை என்பதால் இலங்கையைச் சர்வதேச சமூகம் மறந்துவிட்டது அல்லது கைவிட்டுவிட்டது எனக் கருதக்கூடாது. நாங்கள் எச்சரிக்கையுடன் இருக்கின்றோம்' எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுத்த அழைப்பு இன்னமும் வலுவுள்ளதாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்படி இலங்கை தொடர்பான தனது அறிக்கையை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுக்குழு, இந்தக் கூட்டத்தொடரைப் பயன்படுத்தி இலங்கையில் கல்வித்துறையை அபிவிருத்தி செய்ய என மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றி பல்வேறு நாடுகளுக்கு விளக்கியுள்ளது. (த)

## அத்துமீறும் தமிழக மீனவர் மீது...

01↘ றனர் - என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார். பிரேஸிலின்றியோடிஜெனிரோ நகரில் நடைபெறும் - றியோ பிளஸ் 20 எனப்படும் தொடர் வளர்ச்சிக்கான இயற்கை ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கான ஐ.நா. மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு செய்பவர்கள் மீது சர்வதேச கடல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அனுமதி கோரும் வகையில் அவர் உரையாற்றியுள்ளார் என்றும் -

தமிழ்நாட்டு மீனவர்கள் என நேரடியாகக் கூறாமல் மறைமுகமாக இந்தியாவை வம்புக்கு இழுத்துள்ளார் என்றும் தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதாக தமிழ் நாட்டு மீனவர்களைக் கைது செய்தால்,-இந்தச் சட்டப்படி அவர்களைத் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்குச் சிறையில் அடைக்க இலங்கை முடிவு செய்துள்ளது என்பதையே மஹிந்த ராஜபக்ஷவின் இந்த உரை எடுத்துக் காட்டுகிறது என இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவின்பெயரையோ தமிழ்நாட்டின் பெயரையோ நேரடியாக ஜனாதிபதி கூறவில்லை. ஆனாலும், இலங்கைக்கு அருகில் வடக்கில் உள்ள அயல் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் என்று அவர் அடையாளப்படுத்தியிருக்கிறார்.

அத்துடன் பிரச்சினைக்குரிய பகுதி பாக்குநீரிணை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியல் தீர்வு காண இன்னும் ஏன்...

01↘ டலில் ஜனாதிபதி மஹிந்தவுக்கும், பிரதமர் மன்மோகனுக்குமிடையிலான சந்திப்பு நடைபெற்றது. சுமார் அரை மணி நேரம் இரு தலைவர்களும் தனியே பேச்சு நடத்தினர். பின்னர் உத்தியோகபூர்வ பேச்சு நடந்தது.

நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கை அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் இந்தியப் பிரதமர் விரிவாகக் கேட்டறிந்ததுடன் அதனைத் துரிதப்படுத்தி தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க எடுக்கப்படும் முயற்சிகளை இந்தியா உத்வேகத்துடன் வரவேற்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை துரிதமாக எட்டுவதன் மூலம் இலங்கை சர்வதேச ரீதியில் எதிர்கொண்டுவரும் அழுத்தங்களிலிருந்து விடுபட்டுக்கொள்ள முடியும் எனவும் மன்மோகன் சிங் மஹிந்தவிடம் கூறியுள்ளார். நிலையான - நிரந்தரமான தீர்வை எட்டும் விடயத்தில் இலங்கைக்கு இந்தியா எந்த நேரத்திலும் உதவிகள் வழங்க தயாராக இருக்கிறது எனவும் இந்தச் சந்திப்பில் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்ற நிலைமை குறித்து மன்மோகனுக்கு விளக்கிய ஜனாதிபதி ராஜபக்ஷ, அகதி முகாம்களில் இருந்தவர்களுள் சுமார் மூன்று லட்சம் பேர் வரையானோருக்குப் புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதத்திற்குள் ஆரம்பமாகிவிடுமென இந்தியப் பிரதமர், ஜனாதிபதி மஹிந்தவிடம் இதன்போது உறுதியளித்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

## திருமுறிகண்டி மக்களின்...

01↘ தெரிவித்ததாவது, எமது காணிகள் எமது விருப்பத்துக்கு மாறாக ¼ ஏக்கராக பிரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே காணி ஆவணங்கள் உள்ள எமது காணிகள் பல பிரிக்கப்பட்டு இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எமது காணிகள் பயன் தரு மரங்கள், மலசலகூடம், கிணறு என்பன இருக்கின்றன. தற்போது அவை பிரிக்கப்படுவதால் அந்த அடிப்படை வசதிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. - என்றனர்.

இதேவேளை

முல்லைத்தீவு திருமுறிகண்டிப்பகுதியில் ஏற்கனவே பொதுமக்கள் குடியிருந்த பகுதிகளிலேயே காணிகள் தெரிவு செய்யப்பட்டு இன்று மீளக்குடியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரீ.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட திருமுறிகண்டிப் பகுதியின் மீள்குடியேற்றம் தொடர்பாக மேற்படி பிரதேச செயலரைத் தொடர்புகொண்டபோது, இன்று திருமுறிகண்டிப்பகுதியைச் சேர்ந்த 79 குடும்பங்களைச் சேர்ந்த 181 பேர் மீளக்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். இதில் 46 குடும்பங்கள் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இருந்து அழைத்து வரப்படுவார்கள். இவர்கள் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மீளக்குடியேற்றும் நடவடிக்கை இடம்பெறும் என்று தெரிவித்தார்.

மக்கள் மீள்குடியேற்றத்துக்கு பொருத்தமில்லாத தாழ்வான பகுதிகளைத் தெரிவு செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறு. அதாவது மக்கள் ஏற்கனவே குடியிருந்த பகுதிகளே அதாவது ஏ-9 வீதியின் தபால் நிலையச் சந்தியில் இருந்து வவுனியா நோக்கி ஒரு கிலோ மீற்றர் நீளமும் 200 மீற்றர் அகலமும், அதேபோல் கிளிநொச்சி நோக்கி ஒரு கிலோ மீற்றர் நீளமும் 235 மீற்றர் அகலமும் கொண்ட கிட்டத்தட்ட 120 ஏக்கர் அளவில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. இந்தப் பகுதிகள் அனைத்திலும் மக்கள் ஏற்கனவே குடியிருந்துள்ளனர். இந்தப் பகுதியிலேயே இந்தக் குடும்பங்களுக்குரிய காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இதில் ஏற்கனவே அரச காணிகளில் அனுமதிப்பத்திரங்கள் இன்றி இருந்த 48 குடும்பங்களுக்கு புதிய காணிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (த-6)

# ஆஸி. கடலில் கவிழ்ந்த படகில்...

01↘ ஹரால்ட் ஆகியன செய்தி வெளியிட்டிருந்தன. இந்த படகு விபத்தில் சுமார் 90 பேர் உயிரிழந்திருக்கலாம் என ஆஸ்திரேலிய கடற்பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர், ஆப்கானிஸ்தான், இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அது கூறியுள்ளது. கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 110 பேரை இந்தோனேசியக் கடற்பாதுகாப்புப் பிரிவினர் காப்பாற்றியுள்ளனர். காப்பாற்றப்பட்ட 110 பேரில் 4 பேர் பின்னர் உயிரிழந்ததாகவும் இவர்களில் இலங்கையர்கள் எவரும் இல்லை எனவும் இந்தோனேஷியாவுக்கான இலங்கை தூதுவர் நந்த மல்லவராய்ச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை-

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரி வந்து விபத்துக்குள்ளான படகில் இலங்கையர்கள் இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அநேகமானோர் ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தோனேஷியாவைச் சேர்ந்தவர்கள் என ஆஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் ஜேசன் கிளயார் தெரிவித்துள்ளார்.

200 பேர் பயணித்ததாகக் கூறப்படும் படகு விபத்துக்குள்ளானதில் 110 பேர் தற்போது உயிருடன் இருப்பதாகவும் 90 பேர்வரை காணாமல் போயுள்ளதாகவும் ஆஸ்திரேலிய உள்விவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விமானத்தின் ஊடாக அவதானித்தபோது பலர் உயிர்காக்கும் அங்கிகளுடன் தத்தளித்துக் கொண்டிருந்ததாகவும் உயிர்காக்கும் அங்கிகள் கடலில் மிதந்துக் கொண்டிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

கவிழ்ந்த படகு இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றதா என்பது பற்றி நிச்சயமாக எதுவும் கூறமுடியாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச்சென்ற படகு இலங்கையிலிருந்து புறப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. [illegible] கள் தொடர்பில் முரண்பட்ட தகவல்கள் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். இலங்கையர்கள் இந்தப் படகில் இருந்தமை தொடர்பில் முரண்பட்ட தகவல்கள் வெளிவரும் நிலையில், எங்கிருந்து இந்தப் படகு புறப்பட்டுச் சென்றது என எங்களால் நிச்சயப்படுத்திக் கூறமுடியாதுள்ளது' எனவும் அவர் கூறினார்.

இந்த அனர்த்தத்திலிருந்து காப்பாற்றப்பட்டவர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எவரும் இருக்கவில்லை என இந்தோனேஷியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் [illegible] வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உலகத் தலைவர்களின் றியோ+20 மாநாடு

உலக நாடுகளை அவைகளின் மக்கள் செயல்பாடுகளில் இருந்து காப்பாற்றுவது எப்படி என்பதைப்பற்றி இப்பொழுது பிரஸல்ஸ் நாட்டின் றியோடிஜெனிரோ நகரில் உலகத் தலைவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

20 ஆண்டுகளுக்கு முன் இதே நகரில் நடைபெற்ற இதே விதமான மாநாட்டை நினைவுகூருவதற்காக அதற்கு றியோ+20 மாநாடு என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

உலகில் இருந்து வறுமையை முற்றுமுழுதாக ஒழித்துக் கட்டவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கவுமான செயற்றிட்டம் ஒன்றை விவாதித்து அங்கீகரிப்பதற்காக இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்கள் விவாதிக்கவிருக்கிறார்கள். 10 நாள்கள் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் சுமார் 92 உலகத் தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள். நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த மாநாட்டில் ஐ.நா.செயலாளர் நாயகம் பான்கீ-மூனும் கலந்துகொள்கிறார். இலங்கையின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷவுடன் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, அனுர பிரியதர்சன யாப்பா, பாட்டளி சம்பிக்க ரணவக்க, மஹிந்த சமரவீர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியவர்களும் கலந்துகொள்கின்றனர். கடந்த புதன்கிழமையன்று மாநாட்டில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுற்றுச்சூழல் நெருக்கடியானது வளரும் நாடுகளின் மீதான ஒரு பாரமாக அமைந்துவிடலாகாது என்றார். சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு பெரும்பாலும் காரணமாக இருந்துவரும் வளர்ந்த நாடுகள் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பை வளரும் நாடுகளிடம் விட்டுவிடலாகாது. அவை தமது பொருளாதார வளர்ச்சியை இதற்காக கைவிடமுடி யாது என்று எடுத்துரைத்தார்.

இந்தப் பூமியானது மனித முயற்சிகள், செயற்பாடுகளின் காரணமாக அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்துவது தொடர்பாகவே இந்த மாநாட்டில் தலைவர்கள் ஆராய இருக்கிறார்கள். மனிதனானவன் காடுகளை அழித்து நகரங்களை உருவாக்குவது பெற்றோலியப் பொருள்களைப் பயன்படுத்துவது போன்ற செயற்பாடுகளால் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் முன்னேற்றிக்கொள்ள விளைகிறானே தவிர இந்தச் செயற்பாடுகளால் கரும்புகையும் வாயுக்களும் வெளியாகி சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதைப்பற்றி கவலைகொள்வதில்லை. இதன் விளைவாக உலகில் காலநிலை மாற்றம் ஏற்படுகிறது. உரிய காலத்தில் மழை பெய்வதில்லை. உலகில் வெப்பநிலை அதிகரித்து வருகிறது. பூமியில் இருந்து மனித செயற்பாடுகளால் மேலே கிளம்பும் கரியமிலவாயுவானது பூமியை சூரிய கதிர்களில் இருந்து கவசமாக காப்பாற்றி வரும் ஓசோன் படலத்தில் ஓட்டையை ஏற்படுத்தி இருப்பதாக விஞ்ஞானிகள் கவலைப்படுகிறார்கள்.

தொழிற்சாலைகளாலும் இரசாயனச் செயற்பாடுகளாலும் மனிதன் அருந்தும் குடிதண்ணீர் நச்சுத் தன்மை பெற்று வருகிறது. சுவாசிக்கும் காற்றில் இரசாயன தூசிகளும் நச்சுப் புகைகளும் கலந்து மனித வாழ்வை சுருக்கிக்கொண்டு இருக்கின்றன. வீதிகளில் காணப்படும் பஸ்கள், லொறிகள், கனரக வாகனங்கள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள் இவைகளில் இருந்து வெளிப்படும் கரும் புகையும் அதனுடன் கூடிய இரசாயன நஞ்சும் எங்கே போகின்றன. உலகம் முழுவதும் இந்த நிலைமை என்றால், மனிதன் வாழ்வதற்கு மாசு மறுவற்ற சூழ்நிலை இன்னும் கொஞ்சக் காலத்தில் எங்குமே இல்லாமல் போய்விடலாம். இதுவே உலகத் தலைவர்களை இன்று கலக்கிக்கொண்டிருக்கும் முக்கிய விடயம். இவைகளுக்கு மத்தியில் குடிசனப் பெருக்கம் இன்னொருபுறம் உலகை அச்சுறுத்துகின்றது.

இந்தியாவில் 30 கோடி சனங்கள் என்று ஒரு காலத்தில் பாரதியார் பாடினார். இப்போது அங்கு சனப்பெருக்கம் 100கோடிக்கு மேல் ஆகி விட்டது. நம் இலங்கையில் இப்போது 2கோடி 8 லட்சத்து 59ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். இந்தத் தொகை பெருகுமானால் இந்த சிறுநாட்டில் மக்கள் குடியிருப்பதற்கே இடமில்லாமல் போகலாம்.

றியோடி ஜெனிரோ மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி வளரும் நாடுகளைக் கண்டித்திருப்பதும் அந்த நாடுகளுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதும் சரியாக இருக்கலாம். நாடு திரும்பியதும் இங்குள்ள சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப சில முக்கிய நடவடிக்கைகளில் மஹிந்த ராஜபக்ஷ இறங்குவார் என்று எதிர்பார்க்க வேண்டும். குறிப்பாக இங்குள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பது மக்கள் மத்தியில் நல்லிணக்க சுற்றுச்சூழல் மாசுபட்டு இருக்கிறது என்பதை அவர் அறியாதவர் அல்லர். உலக நாடுகளில் குறிப்பாக வளர்ந்த நாடுகளில் இனப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவை முன்னேறி இருப்பதை ஜனாதிபதியுடன் சென்றிருக்கும் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ போன்ற அமைச்சர்களும் அறிந்துகொண்டு வருவார்களானால், இந்த நாட்டில் நல்லிணக்கமும் தேசிய ஒற்றுமையும் விரைவாக ஏற்பட அவர்களால் உதவ முடியும். இந்த உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள அவர்களையும் ஜனாதிபதி அழைத்துச் சென்றதால் நாட்டுக்கு பயன் ஏற்பட்டதாகவும் இருக்கும்.

# வடக்கு கல்விப் புலத்தில் முறைகேடுகள் முடிவு காண்பதற்கு ஆளுநர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வடக்கு கல்விப் புலத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறு முறைகேடுகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க இணங்கியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி.

இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையிலான சங்கப் பிரதிநிதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வாரம் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது கல்வி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளர் எஸ்.சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாண கல்விப் புலத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியதை அடுத்து அவற்றுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

**வடக்கு மாகாண கல்விப் புலத்தில் இடம்பெற்றுவரும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியது.**

* அதிபர் நியமனத்தின் போது 2000/34, 2000/41, 1998/23 ஆகிய சுற்றறிக்கைகள் நடைமுறைப் படுத்துவது உறுதி செய்யப் படும்.
* ஆசிரியர் சேவையிலுள்ளவர்களை அதிபராக நியமிக்க முடியாது. அதிபர் இடமாற்றம், நியமனத்தின் போது உரிய முறைமை கடைப்பிடிக்கப்படும்.
* தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையின் மூலம் ஆசிரியர் இடமாற்றம் நடைமுறைப்படுத் தப்படும்.
* மன்னாரிலுள்ள 1 ஏ பி பாடசாலைகளில் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்.
* 2006/43 இலக்க சுற்றறிக்கையின்படி கஷ்டப் பிரதேச கொடுப்பனவு, ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும். அதனை யாரும் இடைநிறுத்த முடியாது.
* ஆசிரியர்களுக்கு 10 மாதக் கடன் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
* 2010/28 சுற்றறிக்கையின் படி ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
* 2011/30 இலக்க சுற்றறிக்கைப் படி பதவியுயர்வுகள் வழங்கப்படும்.
* பிரபல பாடசாலைகளில் அளவுக்கு அதிகமாக மாணவர்கள் உள்வாங்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படும்.
* வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் சேவையிலுள்ள யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்குப் போக்குவரத்துச் சேவைக்கான எரிபொருள் செலவை மாகாண கல்வித் திணைக்களம் வழங்கும்.
* கல்வி மட்டத்தை அதிகரிக்க செய்வதாகக் கூறி ஆசிரியர் மாணவர்கள் துன்புறுத்தப்படுவதை தவிர்த்தல். (ம-3)

# நீர்ப்பாசனத் துறைக்கு 36.50 மில்லியன் ரூபா விவசாய அமைச்சு கடந்த வருடம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 23

மாகாணத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு கடந்த வருடம் நீர்ப்பாசன துறைக்கென 36.50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண விவசாய கால் நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசனம் மற்றும் மீன் பிடி அமைச்சின் செயலாளர் யு.எல்.எம் ஹால்டின் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் உள்ள 15 வேலைத்திட்டங்களுக்கு 36.50 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 2 வேலைத் திட்டங்களில் புல்லுக்குளம் புனரமைப்புக்கு 5 மில்லியனும், அணைகள் அமைத்தல் புல்லுபதித்தலுக்கு 1.50 மில்லியனுமாக 6.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 வேலைத் திட்டங்களுக்கு 12.50 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இரணைமடு நீர்வழங்கி வாய்க்கால், பிரதம இடது கரை வாய்க்கால் புனரமைப்புக்கு 5 மில்லியனும், இரணைமடு வாய்க்கால் ஊடறுத்த கொங்கிறீற் வீதிக்கு 2 மில்லியனும், இரணைமடு கருத்திட்ட முகாமைக் குழுவுக்கான கட்டடத்துக்கு 0.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் 3 வேலைத் திட்டங்களுக்கு 3 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பம்மை மடுக்குளத்துக்கான வாய்க்கால் தொகுதிக்கு ஒரு மில்லியனும், வவுனிக் குளத்துக்கான அணை வேலையும் வாய்க்கால் தொகுதிக்கும் ஒரு மில்லியனும், மடுகந்தகுள வாய்க்கால் தொகுதிக்கு ஒரு மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 வேலைத் திட்டங்க்ளுக்கு 12.50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் முத்தையன்கட்டு இடது கரை வாய்க்காலுக்கு 2 மில்லியனும், முத்தையன்கட்டு வலது கரை வாய்க்காலுக்கு 4 மில்லியனும் முத்தையன் கட்டு றேடியல் கதவுக்கு 2 மில்லியனும், கருத்திட்ட முகாமைக் குழுவுக்கான கட்டடத்துக்கு 0.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஒரு வேலைத் திட்டத்துக்கு 2 மில்லியன் ஒதுக்கப்பட்டது. தட்சணமருத மடுக்குளத்துக்கான வாய்க்கால் தொகுதிக்கே இந்த நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. (ம-13)

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா ஜூலை 24 கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23


வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழா அடுத்த மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவர் உற்சவத்துடன் நிறைவடையும்.

27 தினங்கள் நடைபெறும் உற்சவத்தின் விசேட தினங்கள் வருமாறு:-

ஜூலை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றம் இடம் பெறும்.

ஓகஸ்ட் 2 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சம். மாலை 5 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழாவும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்தான கோபாலர் திருவிழாவும் அன்று மாலை கைலாச வாகனத் திருவிழாவும் இடம் பெறும்.

ஓகஸ்ட் 13 ஆம் திகதி காலை கஜவல்லி, மகாவல்லி திருவிழாவும் மாலை வேல் விமானமும் இடம்பெறும். 14 ஆம் திகதி தண்டாயுதபாணி திருவிழாவும் மாலை ஒரு முகத் திருவிழாவும் 15 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் இடம்பெறும்.



ஓகஸ்ட் 16 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறும். மறுநாள் 17 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா இடம்பெறும். 18 ஆம் திகதி பூங்காவனமும் 19 ஆம் திகதி வைரவர் திருவிழாவும் இடம்பெற்றுத் திருவிழா நிறைவடையும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீடுகளுக்கான நிதியை எம்மிடமே நேரில் வழங்குங்கள்

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் கோரிக்கை

அக்கராயன், ஜூன் 23

துணுக்காய்ப் பிரதேசத்தில் வீடுகளை அமைப்பதற்கென இந்திய அரசு வழங்கும் நிதியைத் தம்மிடம் கையளிக்குமாறு பயனாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது ஒப்பந்தகாரர்கள் மூலமாக அமைக்கப்பட்டு வரும் வீடுகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலேயே இவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

போரினால் இடம்பெயர்ந்து, தமது வீடுகளை இழந்த மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைக்கவென இந்திய அரசு பெரும்தொகை நிதியை வழங்கியுள்ளது. ஆனால் இந்த நிதியின் மூலமாக வீடுகளை அமைக்கும் ஒப்பந்தகாரர்கள் உரிய விதிகளைக் கடைப்பிடிக்காது தமது இலாபத்தைக் குறியாகக் கொண்டு மோசமான வகையில் வீடுகளை அமைத்து வருகின்றனர். இந்த வீடுகளின் நிலையைப் பார்த்த பயனாளிகள் பெரும் கவலையில் மூழ்கியுள்ளனர்.

**ஒப்பந்தகாரர்கள் உரிய விதிகளைக் கடைப்பிடிக்காது தமது இலாபத்தைக் குறியாகக் கொண்டு மோசமான வகையில் வீடுகளை அமைத்து வருகின்றனர்.**

அண்மையில் துணுக்காய் பாண்டியன்குளத்தில் ஒப்பந்தகாரர்களால் அமைக்கப்பட்டுப் பயனாளி ஒருவருக்குக் கையளிக்கப்பட்ட வீட்டின் யன்னல் உடைந்து வீழ்ந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் வீட்டின் உரிமையாளர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். இன்னமும் வேறு ஏதாவது இடிந்து தம் மீது வீழ்ந்து விடுமோ என்ற அச்சத்தில் இந்த வீட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

போரினால் இடம்பெயர்ந்து உள்ளதையெல்லாம் இழந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் இந்த மக்களைப் பலரும் பல்வேறு விதத்திலும் ஏமாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## வாக்குறுதிகள் காற்றில் பறந்ததால் இருளில் மூழ்கிய கிராமங்கள்

வடக்கின் வசந்தம் உறுதி மொழிகளுக்கு அமைவாக மின்சாரம் வழங்கப்படாததால் ஏ-35 வீதியிலுள்ள பல கிராமங்கள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் ஏ-35 வீதியை மையமாகக் கொண்ட பகுதிகளுக்கே மின்சாரம் வழங்கப் படாமல் கிராமங்கள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதத்துக்குள் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படுமெனக் கூட்டங்களில் உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால் இதுவரை எதுவுமே நிறைவேற வில்லை. ஏ-35 வீதியின் கோரக்கண்கட்டு, பரந்தன், முரசு மோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, தருமபுரம் ஆகிய இடங்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்கப் படுமென அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளபோதும் கண்டாவளைச் சந்தி, புளியம்பொக்கணைச் சந்தி, தருமபுரம் போன்ற பகுதிகளில் குறிப்பிட்ட ஓரிரு பகுதிகளுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கு முன்பாக மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டுப் பாடசாலைக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அங்குள்ள வர்த்தக நிலையங்களுக்கோ அல்லது அருகில் உள்ள வீடுகளுக்கோ மின்சாரம் வழங்கப்படவில்லை. வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் ஒளியூட்டுவோம் என உறுதிமொழிகள் வழங்கப்பட்ட போதிலும் கோரக்கண்கட்டு, முரசுமோட்டை, ஊரியான், பரந்தன் என ஏ-35 வீதியை மையமாகக் கொண்ட அனைத்துக் கிராமங்களும் இருளில் மூழ்கியே காணப் படுகின்றன. (க-6)

## செம்மண் வீதிகளால் பாதிப்பு

வவுனியா, ஜூன் 23

வவுனியா நகரின் சில வீதிகள் செம்மண் இட்டுப் புனரமைக்கப்பட்டதால் பாடசாலை செல்லும் மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இங்குள்ள முக்கிய வீதிகளான கந்தசாமி கோயில் வீதி, 1 ஆம், 2 ஆம் குறுக்கு வீதிகளில் இந்த நிலை காணப்படுகின்றது.

இந்த வீதிகளூடாகச் செல்லும் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் உடைகள் செம்மண்ணால் அழுக்கடைவதுடன் புழுதி காரணமாகச் சுவாசம் தொடர்பான பாதிப்புக்களுக்கும் ஆளாகி வருகின்றனர். (க-400)



துணுக்காய் கோட்டைகட்டியகுளம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நிரந்தர வீடு ஒன்றைத் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் மற்றும் அந்தப் பகுதிக்கான கிராம சேவகர் ஆகியோர் பார்வையிடுகின்றனர். (18)

## வவுனியா வலய ஏற்பாட்டில் வர்த்தகக் கண்காட்சி

வவுனியா, ஜூன் 23

வவுனியா தெற்குக் கல்வி வலயம் ஏற்பாடு செய்துள்ள வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் திகதிகளில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

'சீரான வர்த்தகக் கல்வியின் ஊடாகச் சீரிய வாழ்க்கைத் தரம்' என்னும் தொனிப் பொருளில் யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி, வவுனியா முறைசாராக் கல்விப் பிரிவு, வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி என்பனவற்றுடன் இணைந்து வவுனியா தெற்குக் கல்வி வலயம் இந்தக் கல்விக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுத்தல், பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிக்கச் செய்தல், மாணவர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்குவதுடன் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியை வட மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களை இக்கண்காட்சியின் ஏற்பாட்டாளரும், வணிக பாட ஆசிரிய ஆலோசகருமான எஸ். தேவதாஸ் தெரிவித்தார்.

வவுனியா தெற்குக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராசா தலைமையில் இடம்பெறும் முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர ஆகியோர் கலந்து கொள்வர். (க-400)

## புத்தகக் கண்காட்சி

வவுனியா, ஜூன் 23

தேசிய கலை இலக்கியப் பேரவையால் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சி இன்றும், நாளையும் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9மணியளவில் ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சியில் பாலர் முதல் பல்கலைக் கழக மாணவர்களுக்கான புத்தகங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் குமரன் புத்தக நிலையத்தினரின் வெளியீடுகள், தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகள், வவுனியா மாவட்ட எழுத்தாளர்களின் புத்தகங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (க-400)

## வருடாந்தப் பொங்கல் விழா திங்களன்று

நெளுக்குளம், ஜூன் 23

மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல், மூன்றுமுறிப்பு கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஏழு நாள்கள் பூசைகள் இடம்பெற்று இறுதி நாளன்று நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் உட்படப் பல்வேறு பாரம்பரியக் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. வழங்கம்போல இந்த ஆண்டும் பக்தர்கள் பெருமளவில் வருகை தருவர் என்று ஆலய நிர்வாகத்தினர் எதிர்பார்க்கின்றனர். (க-402)

## முசலி அருவியாறைக் கடக்க 450 மில். செலவில் புதிய பாலம்



மன்னார், ஜூன் 23

மன்னார் மாவட்டம் முசலிப் பகுதியில் அருவியாறு ஊடாக அமைக்கப்பட்டுள்ள புதிய பாலம் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இந்தப் பாலம் பேருதவியாக அமைந்துள்ளது. மேலும இவர்களின் வழக்கமான பயண தூரமும் பல கிலோ மீற்றரால் குறைவடைந்துள்ளது.

சுமார் 450 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஒருவருட காலத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாலம் அமைந்துள்ள வீதியைப் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பமாகவிருப்பதாகத் தெரிய வருகின்றது. (க-12)

# மன்னார் ஊடகவியலாளருக்கு அரச தரப்பால் தொடர்ந்து விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள்

## மன்னார் நகர சபையில் கண்டனத் தீர்மானம்

மன்னார், ஜூன் 23

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற ஊடகவியலாளர்களுக்கு அரச தரப்பினரால் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக மன்னார் நகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

[illegible] ஊடகவியலாளர்களின் பணி மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்று வருகின்றது.

எனினும் அவர்களுக்கான பாதுகாப்பு இன்றைய கால கட்டத்தில் கேள்விக் குறியான நிலையில் உள்ளது.

அவர்கள் செய்திகளை உடனுக்குடன் மிகவும் நீதியான முறையில் பக்கச்சார்பின்றி வெளியிடுகின்ற போதிலும் எதிர்த் தரப்பினரால் அவர்கள் தாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் தொடர்கதையாக இருந்து வருகின்றன.

அண்மையில் மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் மக்கள் காதர் அரச தரப்பு அமைச்சர் ஒருவரின் இணைப்பாளர் என கூறப் [illegible] தாக்கப்பட்டார். குறித்த ஊடகவியலாளர் ஒரு வயதானவராகக் காணப்படுகின்றார். அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எவ்விதத்தில் நியாயம் என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

அது மட்டுமின்றி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியில் புத்தர் சிலை விவகாரம் இடம் பெற்று வந்தது. அதன்போது அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் இணைப்பாளருமான ஒருவர் அங்கு சென்றிருந்தபோது அங்கு சென்ற 'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் எஸ்.ஆர்.லெம்பேட் மற்றும் ஊடகவியலாளரான ஜோசப் பெர்னாண்டோ ஆகியோர் அவரினால் கடுந் தொனியில் அச்சுறுத்தப்பட்டு அவர்களுடைய கடமையைச் செய்ய விடாத நிலையில் படைத் தரப்பினரின் உதவியுடன் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவங்கள் மிகவும் வேதனையளிக்கின்றன. இன்றைய சமாதான காலத்தில்கூட ஊடகவியலாளர்கள் தமது கடமைகளைச் சுதந்திரமாகச் செய்ய முடியாத நிலையே உள்ளது.

இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறக்கூடாது என்று தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக மன்னார் நகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் சமர்ப்பித்த கண்டனத் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு, குறிகாட்டுவான் துறைகளை மேம்படுத்துமாறு அவசர கோரிக்கை

### யாழ். அரச அதிபருக்கு வேலணைப் பிரதேச சபை கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

நயினாதீவு இறங்கு துறை, குறிகாட்டுவான் இறங்குதுறை ஆகிய இரண்டு இறங்கு துறைகளும் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விஸ்தரித்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டும்.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர், செயலாளர் இணைந்து அரச அதிபர் சு.அருமைநாயகத்துக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடனடி உட்கட்டுமானத்தின் கீழ் நயினாதீவு - குறிகாட்டுவான் துறைமுக வீதி அபிவிருத்தி தொடர்பாக எழுதிய கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**நயினாதீவு பிரதேச அபிவிருத்தி, நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி என்பவற்றுக்குப் பிரதானமாக குறிகாட்டுவான் இறங்குதுறையும் பெருப்பித்து – விஸ்தரித்து முன்னீட்டம் செய்யப்பட வேண்டும்.**

குறிகாட்டுவான் இறங்கு துறைமுகம், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது.

நயினாதீவு இறங்கு துறைமுகம், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமானது.

ஆனால் இந்த இரண்டு இறங்குதுறைகளும் மக்களின் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

இந்த இரண்டு இறங்கு துறைகளையும் அதிகரித்த அளவில் உல்லாச பயணிகள், யாத்திரிகள், பொது மக்கள், அரச அலுவலர்கள் என ஆயிரக் கணக்கான மக்கள் காலையில் இருந்து மாலைவரை பயன்படுத்துகின்றனர்.

நயினாதீவு பிரதேச அபிவிருத்தி, நெடுந்தீவு பிரதேச அபிவிருத்தி என்பவற்றுக்குப் பிரதானமாக குறிகாட்டுவான் இறங்கு துறையும் பெருப்பித்து - விஸ்தரித்து முன்னீட்டம் செய்யப்பட வேண்டும்.


நயினாதீவு இறங்கு துறைமுகப் பகுதியில் ஒரு பகுதி உடைந்து கடலுக்குள் அமிழ்ந்து கொண்டு வருகின்றது.

அத்துடன் 64 படகுகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் அவை பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

எனவே மேற்குறித்த அபிவிருத்தி தேவைப்பாடுகளை நிறைவேற்ற நவீன வடிவில் இரு இறங்கு துறைகளும் புனரமைக்கப்பட வேண்டிய அவசர தேவை எழுந்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர், பிரதம பொறியியலாளர்கள் உடன் இதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்து பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என்றுள்ளது. (ம-50)

# வட்டுக்கோட்டை தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும்



பண்டத்தரிப்பு, ஜூன் 23

வட்டுக்கோட்டை தெற்குப் பிரதேசத்தில் ஏற்படும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஜே-165 கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்டு வரும் தண்ணீர் தாங்கி மூலம் வட்டுக்கோட்டை தெற்குப் பகுதி மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வந்த தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் இந்த நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் நாற்பதாயிரம் லீற்றர் கொள்ளளவைக் கொண்டதாக இந்த நீர்த் தாங்கி அமையவுள்ளது. வேள்ட் விஷன் நிறுவனத்தின் பிரதேச புனர் நிர்மாண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்துக்குப் பிரதேச சபையும் தனது நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளது.

சுமார் 4 கிலோ மீற்றர் நீளத்தில் 40 இற்கும் அதிகமான தண்ணீர் குழாய்கள் அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென பெரிய கிணறு ஒன்றும் பிரதேச சபையால் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் செயற்படுத்தப்படுவதுடன் நீர்க் குழாய்கள் அமைப்பதற்கான வாய்க்கால் வெட்டும் வேலைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கோடை காலங்களில் இந்தப் பிரதேசத்தில் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டுக்கு இது தீர்வாக அமையும் என்று அந்தப் பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-130)

# உயர்தர மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சி

தென்மராட்சி, ஜூன் 23

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகர சபையின் ஏற்பாட்டில் யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தால் நடத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி வகுப்பில் 40 மாணவத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் இளைப்பாறிய மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன், மருதங்கேணி இளைப்பாறிய உதவி அரச அதிபர் வி.விமலேந்திரபிள்ளை, வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர் ரி.டபிள்யூ. விமலராஜன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

நகர சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி, யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவன செயலாளர் எஸ்.ஜெயராஜசிங்கம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பங்குபற்றிய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ம-9)

# சந்தை வரி பற்றுச்சீட்டில் திருத்தம் செய்து பணம் வசூல்

20/16

சாவகச்சேரி பிரதேச சபை
கொடிகாமம் பொதுச் சந்தை
சந்தை வரி கைப் பற்றுச்சீட்டு
இல. 14753
ரூபா 10.00
இப்பற்றுச்சீட்டை பரிசோதகர் கேட்கும்போது காட்ட வேண்டும்.

பிரதேச சபையால் அனுமதிக்கப்பட்ட சந்தை வரி பற்றுச் சீட்டில் திருத்தம் செய்து பொது மக்களுக்கு விநியோகித்து பணம் பெறப்படுகிறது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் பொதுச்சந்தையில் இந்தச் செயற்பாடு தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையின் வெளிச் சந்தைப் பாவனைக்கென பிரதேச சபையால் பத்து ரூபா பெறுமதியான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தப் பற்றுச்சீட்டில் தாம் நினைத்த தொகையைப் பேனாவால் திருத்தம் செய்து பொதுமக்களுக்கு வழங்கி பணம் பெறுவதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

ஏனைய சந்தைகளில் தேங்காய் விற்பனை செய்வோரிடம் விற்பனைத் தொகையின் நான்கு வீதம் வரியாக அறவிடப்படுகின்ற போதிலும் கொடிகாமம் சந்தையில் மட்டும் ஒரு தேங்காய்க்கு 2 ரூபா சந்தை வரியாக அறவிடப்படுவது குறித்தும் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ம-9)

# மூன்று மாடிக் கட்டடப் பணி 3 வருடங்களாகியும் கிடப்பில்

தென்மராட்சி, ஜூன் 23

தென்மராட்சி கல்வி வலயத்தில் இசுறு திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட வரணி மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிகள் கொண்ட வகுப்பறைத் தொகுதி வேலைகள் மூன்று வருடங்களாகியும் பூர்த்தியடையவில்லை.

இந்த நிலைமை குறித்து பெற்றோர் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இசுறு திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இந்த வித்தியாலயத்தில் மூன்று மாடிக் கட்டடம் அமைக்க 2010 ஆம் ஆண்டு அத்திபாரம் போடப்பட்டுப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது 3 வருடங்களாகியும் இந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்டடப் பணிகளை விரைவில் பூர்த்தி செய்து மாணவர்களுக்கு ஏற்படும் இடநெருக்கடியை தவிர்க்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)



*வடமராட்சிக் கல்வி வலயத்தின் விஞ்ஞான தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் விஞ்ஞான தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குகிறார். (ம-190)*

## பாடசாலை மாணவருக்கு பேரீச்சம் பழங்கள்

பாடசாலை மாணவர்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கப்பட்டு வருகின்றது. உலக உணவுத் திட்ட உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்துக்குள் உள்ளடங்கியுள்ள தரம் ஒன்று முதல் தரம் 9 வரையான மாணவர்களுக்கு இந்தப் பேரீச்சம் பழங்கள் தலா 2 கிலோ வீதம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களிடையே இரும்புச் சத்துக் குறைபாட்டை நீக்குவதற்காக சவூதி நாட்டு அரசின் உதவியின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்புரைக்கமைய இவை வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8-38)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடமை புரிவோர் 5 எஸ் போட்டியில் பங்குபற்ற ஆர்வம்

தென்மராட்சி, ஜூன் 23

ஜப்பானிய அரசால் மேற்கொள்ளப்படும் 5 எஸ் செயற்றிட்டப் போட்டியில் பங்குபற்ற சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றுவோர் முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் [illegible] ஆதார வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குதல், வைத்தியசாலை விடுதிகள் மற்றும் வளாகப் பகுதி பராமரிப்பு உட்பட்ட ஐந்து வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக ஆதார வைத்தியசாலைகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் 5 எஸ் [illegible] இணைத்துள்ளதை அடுத்து வைத்தியசாலையில் கடமைபுரியும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுகின்றனர்.

5 எஸ் போட்டியில் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்ற மந்திகை ஆதார வைத்தியசாலை, யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை ஆகியவற்றில் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றும் சகல தர உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பயிற்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து குழுக்களாகப் பிரிந்து இவர்களால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களால் வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளும் புதுப்பொலிவுடன் காணப்படுவதுடன் நோயாளர்களும் சிறந்த சேவையைப் பெற்று வருவதையும் காணமுடிகிறது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை தலைமைச் செயலகத்தில் பட்டப்பகல்வேளை பயங்கரத் தீ

## மூவர் சாவு; மேலும் 16 பேர் காயம்

மும்பை, ஜூன் 23

மும்பையில் உள்ள மகாராஷ்டிரா அரசதலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் பகல் வேளையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் அந்தக் கட்டடத்தில் இருந்த 3 பேர் உயிரிழந்ததுடன் 16 பேர் காயம் அடைந்தனர். மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த ஆதர்ஷ் ஊழல் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தீயில் எரிந்து நாசமாகின என்று கூறப்பட்டது. ஆனால் ஆவணங் கள் பத்திரமாக இருக்கின்றன என்று மகாராஷ்டிர அரசு தெரிவித்துள்ளது.





மும்பையில் உள்ள மகாராஷ்டிர அரசதலைமைச் செயலகமான மந்த்ராலயாவில் உள்ளஒரு கட்டடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணிக்கு திடீர் என்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அந்தக் கட்டடத்தின் 4ஆவது தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தளத்தில் தான் ஆதர்ஷ் குடியிருப்பு ஊழல் மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை சம்பந்தமான ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகின.

அந்தக் கட்டடத்தில் தான் முதல்வர், முக்கிய அமைச்சர்கள் மற்றும் முக்கிய அரச உயர் அதிகாரிகளின் அலுவலகங்கள் உள்ளன. கட்டடத்தின் 4ஆவது தளத்தில் உள்ள பழங்குடியின மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பாபன் ராவின் அறையில் தான் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து ஏற்பட்ட சிறிது நேரத்தில் தீ மள, மளவென ஏனைய அறைகள், மற்றும் 5ஆவது, 6ஆவது தளங்களுக்குப் பரவியது. தீ விபத்து ஏற்பட்டவுடன் 20 நிமிடங்களில் அந்தக் கட்டடத்தில் இருந்த 5 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டனர்.

இதுகுறித்து உடனே தீயணைப்புத்துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவல் அறிந்தவுடன் 25 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராடித் தீயை அணைத்தன. இந்த விபத்தால் அப்பகுதி கரும்புகை மண்டலமாகக் காட்சியளித்தது. இந்த விபத்தில் 5 பேரைக் காணவில்லை. அதில் 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. ஏனைய இருவரின் நிலை என்னவென்று தெரியவில்லை. மேலும் 16 பேர் காயம் அடைந்துள்ளனர்.

காயம் அடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்த விபத்தில் 4 ஆவது, 5ஆவது மற்றும் 6 ஆவது தளங்கள் எரிந்து நாசமாகின.

திடீர் என்று தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. தீ விபத்தில் முதல்வர் அசோக் சவான், துணை முதல்வர் ஆகியோரின் அறைகள் எரிந்து போய்விட்டன. அங்கிருந்த ஆவணங்களும் எரிந்து போய்விட்டன. அதேசமயம், ஆதர்ஷ் ஊழல் வழக்குத் தொடர்பான ஆவணங்கள் பத்திரமாக இருப்பதாக மகாராஷ்டிர அரசு தெரிவித்துள்ளது.(வ)

# மதுரை ஆதீனமாக செயற்பட முடியுமா?

## நீதிமன்றுக்கு நித்தி பதிலளிக்க வேண்டும்



மதுரை, ஜூன் 23

எந்தவித விதிமுறையையும் பின்பற்றாமல் மதுரை இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டுள்ள நித்தியானந்தா பதவியில் நீடிக்கத் தடை கோரி தாக்கல் செய்த மனு மீது அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்குள் ஆதீனம் மற்றும் நித்தியானந்தா பதிலளிக்க வேண்டும் என்று மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

மதுரை விசாலாட்சிபுரம் கே.எஸ். முத்து மற்றும் தெற்கு வாசல் மாரிசெல்வம் ஆகியோர் மதுரை முதன்மை கிளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாங்கள் இருவரும் சைவ மதத்தைச் சார்ந்தவர்கள். பல நூற்றாண்டாக சைவ சமய தத்துவங்கள், சித்தாந்தம், பன்னிரு திருமுறைகளை உலகம் முழுவதும் பரப்பி வந்த மதுரை ஆதீன மடத்தின் 293 ஆவது ஆதீனமாக கடந்த 27.4.12 இல் நித்தியானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். மீனாட்சியம்மன் கோயில் அருகே மதுரை ஆதீன மடத்துக்கு ஆயிரம் கோடிக்கு மேல் சொத்து உள்ளது. கஞ்சனூர், கச்சனெம், திருவரும்பியம், பன்னத்தெரு என 4 முக்கிய கோயில்கள் இதன் கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்த நிலையில் மதுரை ஆதீனம், சட்ட திட்டங்களை மதிக்காமல், தன்னிச்சையாக நித்தியானந்தாவை இளைய ஆதீனமாக நியமித்துள்ளார். ஆதினமாக நியமிக்கப்படுபவர் பெண்கள், சொத்துக்கள், உடைமைகள் என அனைத்தையும் துறந்து நல்லொழுக்கத்தையும், சைவ சித்தாந்த நெறிகளையும் கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும். இதில் எந்தத் தகுதியும் நித்தியானந்தாவுக்கு இல்லை. ஆதீன சொத்துக்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற குற்ற எண்ணத்துடனேயே நித்தியானந்தாவும் இந்தப் பொறுப்பை கைப்பற்றியுள்ளார்.

ஒருவரை ஆதீனமாக நியமிப்பதற்கு முன் ஏனைய ஆதீனகர்த்தாக்களிடம் ஆலோசனை செய்து பல்வேறு வழிகாட்டுதல் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அவசர கதியில் ஆதீனமாக நித்தியானந்தாவை நியமித்துள்ளதில் சந்தேகம் எழுந்துள்ளது. எனவே 293ஆவது ஆதீனமாக நித்தியாணந்தாவை நியமித்தது ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவிக்க வேண்டும் -என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

# சிரஞ்சீவியை கைது செய்ய உத்தரவு



நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக தெலுங்கு நடிகர் சீரஞ்சீவியைக் கைது செய்ய ஓசூர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2011ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தலில் காங்கிரஸ் சார்பில் கோபிநாத் என்பவர் போட்டியிட்டார்.

இவரை ஆதரித்து நடிகர் சிரஞ்சீவி பாகலூரில் பிரசாரம் செய்தார். அப்போது தேர்தல் விதி முறைகளை மீறி கூட்டம் கூட்டியதாகவும், அதிகமான வாகனங்களைப் பயன்படுத்தியதாகவும் சிரஞ்சீவி, கோபிநாத் உட்பட 6 பேர் மீது தேர்தல் அதிகாரிகள் வழக்குத் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் 4 பேர் அழைப்பாணை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகினர். சட்டசபை உறுப்பினர் கோபிநாத்தும், சிரஞ்சீவியும் அழைப்பாணையையும் வாங்கவில்லை. நீதிமன்றத்தில் முன்னிலையாகவுமில்லை.

இந்தநிலையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அழைப்பாணை வாங்காத குற்றத்திற்காக கோபிநாத்தும், சிரஞ்சீவியும் தேடப்படும் குற்றவாளிகள் என்று ஓசூர் நீதிமன்றம் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

# தி.மு.கவினரை கைது செய்வதே அ.தி.மு.க. ஆட்சியின் சாதனை

## சாடுகிறார் கனிமொழி



தி.மு.க. தலைவர்கள் மீது வழக்குப் போடுவது தான், அ.தி.மு.க ஆட்சியின் சாதனையாக உள்ளது என்று தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனி மொழி தெரிவித்தார்.

சேலம் அங்கம்மாள் காலனி குடிசை எரிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட தி.மு.க. முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள வீரபாண்டி ஆறுமுகத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, அவரது தாய் ராசாத்தி ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

சிறைவாசலில் கனிமொழி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், தி.மு.க. தலைவர்கள் மீது வழக்கு போட்டு கைது செய்வது தொடர்கிறது.

மூன்றாவது முறையாக வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட்டுள்ளார். வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட்டவுடன், கருணாநிதி பெரிதும் கவலைப்பட்டார். அவரது உடல் நிலை மோசம் என்று தெரிந்தும் கவலைப்படாமல் மனிதாபிமான மற்ற முறையில் கைது செய்து, சேலம், சென்னை என ஒவ்வொரு சிறையாக மாற்றி அலைக்கழித்து கடைசியில் வேலூர் சிறையில் அடைத்துள்ளனர்.

அவருடைய உடல் நிலையைப் பற்றி கவலைப்படாமல் மிக மோசமாக நடத்துகின்றனர். இதுபற்றி வீரபாண்டி ஆறுமுகம் கவலைப்படவில்லை. அவர் எதற்கும் அஞ்சாதவர். அஞ்சா நெஞ்சத்துடன் தைரியமாக, வீராதி, வீரனாக இருக்கிறார்.

தி.மு.க. தலைவர்கள் மீது வழக்குப் போடுவது குறித்து, சிந்தித்து வருவது தான், அ.தி.மு.க ஆட்சியின் சாதனையாக உள்ளது. மக்களை பற்றி சிந்திக்காமல் ஓய்வெடுப்பதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாடு சென்றுள்ளார் -என்றார். (வ)

# அமெ. பல்கலை துணைவேந்தராக இந்தியப் பெண் நியமனம்



இந்தியப் பெண் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அஸாமைச் சேர்ந்த திரேன் மற்றும் அருணா -தத்தா தம்பதியின் மகளான மித்ரா 1953இல் பிறந்தார். இயற்பியல் பாடப்பிரிவில் கவுகாத்தி பல்கலையில் பி.எஸ்.சி. பட்டமும், டில்லி பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி. பட்டமும் பெற்றவர். அமெரிக்காவின் ஒ[illegible] மாநிலத்தில் உள்ள சின்சினாட்டி ப[illegible] இயற்பியலில் கலாநிதிப் பட்டம் பெற்றார். பின்னர் அமெரிக்க இராணுவ ஆராய்ச்சிப் பிரிவில் பணியாற்றினார்.

அமெரிக்க அதிபராக ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இருந்த காலத்தில், அவரின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு ஆலோசகராகப் பணியாற்றினார். இதன்பின் கடந்த ஜனவரி மாதம் முதல் சிக்காக்கோ நகரில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தின், ஆராய்ச்சிப் பிரிவுக்கான இடைக்கால துணைவேந்தராகப் பணியாற்[illegible]ச்சிப்பிரி[illegible] கோடி ரூபாவாகும். தற்போது அதே பிரிவின் துணைவேந்தராகியுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி வேட்பாளர் பிரணாப்புக்கு

# மூவரின் தூக்கை ரத்து செய்தால் தி.மு.க. ஆதரவளிக்கலாம்

## சீமான் கருத்து



ராமநாதபுரம், ஜூன் 23

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனைக் கைதிகளாக சிறையில் உள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்வதாக உறுதி அளிக்கும் பட்சத்தில் தி.மு.க.வும், திருமாவளவனும் பிரணாப் ஜனாதிபதியாக ஆதரவு அளிக்கலாம் என்று நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் தெரிவித்தார்.

இதுகுறித்து நேற்று ராமநாதபுரத்தில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் தி.மு.கவும், திருமாவளவனும் பழங்குடி இனத்தவரான சங்மாவுக்கு ஆதரவு வழங்க வேண்டும். பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு அளிப்பது தமிழர்களுக்கு இழைக்கும் துரோகம். அப்படி இல்லாவிடில், முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்வேன் என்ற உறுதிமொழியின் பேரில் வேண்டுமானால் ஆதரவு அளிக்கட்டும். இதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை பிடித்தால் அவர்களுக்கு 20 வருடங்கள் வரை சிறை அளிக்கும் வகையில் ராஜபக்ஷ பேசியிருக்கிறார். அப்படி இந்திய எல்லைக்கு வந்து கைதாகும் இலங்கை மீனவர்களையும் 20 வருடங்கள் சிறையில் அடைக்கும்படி நாம் கூறினால் அது இந்திய இறையாண்மைக்கு எதிராகப்பேசியதாக வழக்குப் போடுவார்கள் - என்றார்.

இதேவேளை, முன்னதாக, ராமேஸ்வரம் பொதுக் கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாக சீமான், அமீர் ஆகியோர் மீது வழக்கு போடப்பட்டிருந்தது.

அது தொடர்பாக இன்று ராம நாதபுரம் நீதிமன்றத்தில் இருவரும் முன்னிலையாகினர். இந்த வழக்கில் மீண்டும் அடுத்தமாதம் 20 ஆம் திகதி இருவரும் முன்னிலையாகி விளக்கம் அளிக்க நீதிபதி உத்தரவிட்டார்.(வ)

# வீடுகளுக்கு மேல் விழுந்தது விமானம்

## 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்



ஜகார்த்தா, ஜூன் 23

இந்தோனேசிய விமானப்படை விமானம் ஒன்று குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொறுங்கியதில் 9 பேர் உயிரிழந்தனர். குடியிருப்புப் பகுதியில் விழுந்து தீப்பற்றியதில் அந்தப் பகுதி முழுவதும் நெருப்புக் கோளம் போலக் காட்சியளித்ததாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை நிகழ்ந்த இந்த விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர் என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

டர்போ புரோப்பல்லர் ரக விமானம் தரையில் விழுந்ததில் 8 வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. வீடுகளில் வசித்தவர்களில் 3 பேர் உயிரிழந்தனர் என இராணுவ செய்தித் தொடர்பாளர் இஸ்கந்தர் சிதோம்புல் தெரிவித்தார். பளுப்பு நிறத்திலான நெருப்புப் பந்து கிளம்பியது, பின்னர் கறுப்பான புகை சூழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காதைப் பிளக்கும் ஓசையைக் கேட்டவுடன் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தபோது, பக்கத்துவீடு தீப்பற்றி எரிந்தது தெரிய வந்தது. ஆனால் விமானப்படை விமானம் விழுந்ததால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது என்பதை நம்ப முடியவில்லை என்று விமானப்படை குடியிருப்புப் பகுதியில்வசிக்கும்ஹென்ட்ரா என்பவர் தெரிவித்தார்.

விமானத்தில் விமானி, துணை விமானி, பயிற்றுநர் மற்றும் பயிற்சி பெறுவோர் உட்பட 7 பேர் இருந்தனர் என்றும் இவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் 6 பேர் உயிரிழந்துவிட்டனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## முதல் 'டெஸ்ட் ரியூப்' தாய் மரணம்

லண்டன், ஜூன் 23

உலகின் முதல் சோதனைக் குழாய் குழந்தையைப் பெற்ற பிரிட்டன் பெண் மரணமடைந்தார். பிரிட்டனின் பிரிஸ்டல் நகரில் வசித்து வந்தவர் லெஸ்லி பிரவுன். இவருக்கும் ஜோன் என்பவருக்கும் 1969இல் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து 9 ஆண்டுகளாகக் குழந்தை இல்லை. அந்தச் சமயத்தில்தான், மருத்துவ விஞ்ஞானிகள் ரொபட் எட்வேட்ஸ் மற்றும் மகப்பேற்று நிபுணர் பேட்ரிக் ஸ்டெப்டோ ஆகியோர் செயற்கை கருவூட்டல் முறையை உருவாக்கி இருந்தனர். .

1978இல் ஓல்ட்ஹாம் மருத்துவமனையில் இரு ஆராய்ச்சியாளர்கள் அளித்த செயற்கை கருவூட்டல் சிகிச்சையில் லெஸ்லி பிரவுன் கருவுற்றார். செயற்கை முறையில் கருத்தரிப்பது சிசுவுக்கு நல்லதல்ல. குழந்தை ஊனத்துடன் பிறக்கலாம் என்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனர். அதைத் தவிடுபொடியாக்கும் வகையில், முழு ஆரோக்கியத்துடன் கொழுகொழுவென பெண் குழந்தை பிறந்தது. இது அப்போது உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இயற்கையாகக் குழந்தைப் பெற முடியாதவர்கள் சோதனைக் குழாய் முறையில் குழந்தை பெறலாம் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. முதல் சோதனைக் குழாய் குழந்தைக்கு லூயிஸ் பிரவுன் என்று பெயர் வைத்தார்கள். உலகிலேயே முதல் சோதனைக் குழாய் குழந்தையைப் பெற்றவர் என்ற பெருமை லெஸ்லிக்குக் கிடைத்தது. அதற்குப் பின்னர்நடேலியா என்ற இரண்டாவது குழந்தையையும் அவர் டெஸ்ட் ரியூப் முறையிலேயே பெற்றார். 64 வயதான லெஸ்லிக்கு சமீபத்தில் திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனின்றி மரணமடைந்தார்.

## ருமேனிய முன்னாள் பிரதமர் தற்கொலை முயற்சி

புக்காரெஸ்ட், ஜூன் 23

ஊழல் குற்றச்சாட்டில், ருமேனிய முன்னாள் பிரதமருக்கு, இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால், அவர் தன்னைத் தானே சுட்டு, தற்கொலை செய்து கொள்ள முயன்றுள்ளார்.

ருமேனியாவின் முன்னாள் பிரதமர் அட்ரியான் நாஸ்டேஸ். இவர் 2000ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை பிரதமராக இருந்தார். இவர் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சராகவும், நாடாளுமன்ற சபாநாயகராகவும் இருந்துள்ளார். உலகிலேயே அதிக ஊழல் நிறைந்த நாடுகளில் ருமேனியாவும் ஒன்று என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், அட்ரியான் தனது ஆட்சிக் காலத்தில் ஏராளமான ஊழல்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இதையடுத்து, அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் சமீபத்தில் அவருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறியது. இதையடுத்து, அட்ரியான் தனது வீட்டில் நேற்று முன்தினம், துப்பாக்கியால் கழுத்தில் சுட்டுத் தற்கொலைக்கு முயன்றுள்ளார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் சுய நினைவோடு இருக்கின்றார் எனவும், எனினும் பேசுவதற்கு சிரமப்படுகின்றார் எனவும் அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். ருமேனியாவின் தற்போதைய பிரதமர் விக்டர் பான்டா, புக்காரெஸ்ட்டில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று, அட்ரியானின் உடல் நிலை குறித்து விசாரித் தார்.



அமெரிக்காவில் வோல்ஸ்ரீட் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திவரும் மாணவர்கள் அந்த நாட்டுப் பொலிஸாரினால் கைது செய்யப்படுகின்றனர். இந்த ஆர்ப்பாட்டம் ஆறு மாதங்களைக் கடந்தும் நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## விலங்கு வேட்டையை கண்காணிக்கவும் ஆளில்லா விமானம்

காத்மாண்டு, ஜூன் 23:

வன விலங்குகளைக் காப்பதற்கு ஆளில்லா விமானம் மூலம் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள நேபாளம் திட்டமிட்டுள்ளது.

காடுகளில் மரங்கள் வெட்டப்படுவதைக் கண்காணிக்கவும் இத்தகைய ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்த முயற்சி எதிர்பார்த்த அளவுக்கு பலன் அளித்தது. இதைத் தொடர்ந்து இப்போது வன விலங்குகளை வேட்டையாடுவோரைக் கண்காணிக்க இத்தகைய விமானங்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் காண்டா மிருகம் மற்றும் புலிகளைப் பாதுகாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முதலில் சிதாவன் தேசிய பூங்காவில் கண்காணிப்புப் பணிகளுக்காக ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.

ஜூன் 12 முதல் இந்தப் பூங்காவில் ஆளில்லா விமானங்கள் மூலம் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இப்போது ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு வனப் பாதுகாவலர்களுக்குப் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய பிராந்தியத்தில் வன விலங்குகளைக் காக்க இத்தகைய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது நேபாளத்தில் மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றவாளிகள் பிரிட்டனில் தங்கியிருக்கத் தடை

வெளிநாட்டுபாலியல்வன்புணர்வுக் குற்றவாளிகளும், படுகொலையாளிகளும் பிரிட்டனில் தங்கியிருப்பதற்கான உரிமையை வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று நீதிபதிகளுக்கு உத்தரவிடும் முக்கிய தீர்மானமொன்று பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக இத்தகைய தீர்மானமொன்று பிரிட்டனில் நிறைவேற்றப் படுவது இதுவே முதல் தடவையாகும்.

தொழிற்கட்சியின் சர்ச்சைக்குரிய மனித உரிமைகள் சட்டத்தை வெளிநாட்டவர்கள் துஷ்பரயோகம் செய்து வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மேற்படி மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் 1888 வெளிநாட்டு குற்றவாளிகள் மேன்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளதாக அந்தநாட்டு உள்துறை அலுவலகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மேன்முறையீடு செய்தவர்களில் 409 பேருக்கு அந்த நாட்டில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அவர்களில் 185 பேர் பிரிட்டனில் குடும்பங்கள் உள்ள காரணத்தால் மேற்படி மனித உரிமைகளின் சட்டத்தின் கீழ் தங்கியிருப்பதற்கான அனுமதியைப் பெற்றார்கள்.

இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள சட்ட விதிகள் எதிர்வரும் வாரங்களுக்குள்நடைமுறைப் படுத்தப் படவுள்ளன.

இந்த சட்டவிதிகளின் படி ஐரோப்பிய வலயத்துக்கு வெளியேயுள்ள நாடுகளைச் சேர்ந்த யாரும் ஏதாவது குற்றத்துக்காக குறைந்தது 4 வருட சிறைவாசம் அனுபவித்திருக்கும் பட்சத்தில் அவர் பிரிட்டனிலிருந்து நாடு கடத்தப்பட நேரிடும்.

அதேசமயம் ஒரு வருடத்துக்கு குறைந்த சிறைத்தண்டனையை அனுபவித்தவர்கள், கடுமையான பிரமாணங்களுக்கு அவர்கள் அமைவாக இல்லாத பட்சத்தில் நாடு கடத்தப்படுவர்.

## விக்கிலீக்ஸ் நிறுவுநர் மீண்டும் கைது செய்யப்படுவார்

லண்டன், ஜூன் 23

லண்டனில் உள்ள ஈக்குவடோரின் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ள விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசேஞ், பிணை விதிகளை மீறிவிட்டார் என்று அவர் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதனால், அவரைக் கைது செய்ய பிரிட்டன் பொலிஸார் முயற்சி மேற்கொண்டுள்ளனர். ஈக்குவடோர் தூதரகம் ஜூலியன் அசேஞ்சுக்கு பாதுகாப்பு அளித்து வருவதால், அவரைக் கைது செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வீட்டுக்காவலில் 540 நாள்களாக இருந்து வந்த ஜூலியன் அசேஞ், தனக்கு அடைக்கலம் அளிக்கும்படி லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் முறையிட்டிருந்தார்.

இதற்காக, ஈக்குவடோர் தூதரகம் சென்ற ஜூலியன் அசேஞ், அங்கேயே தங்கி இருக்கின்றார் எனக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, பிரிட்டன் நீதிமன்ற உத்தரவுப்படி கடுமையான நிபந்தனைகளுடன் ஜூலியன் அசேஞ்சுக்கு பிணை வழங்கப்பட்ட நிலையில், அவர் நிபந்தனைகளை மீறிவிட்டார் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஜூலியன் அசேஞ்சுக்கு தங்கள் நாட்டில் அடைக்கலம் அளிப்பது பற்றித் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக ஈக்குவேடோர் ஜனாதிபதி ராபேல் கொரெயா தெரிவித்துள்ளார். மேலும், அவர் ஈக்குவடோரில் உள்ள ஊழல்வாதிகள் மற்றும் வங்கிகளை திவாலாக்கியவர்களுக்கு அமெரிக்காவில் அடைக்கலம் அளிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டு, ஜூலியன் அசேஞ்சுவுக்கு அடைக்கலம் அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## சகோதரனின் மனைவியை கொடுமைப்படுத்தியதற்கு 2 ஆண்டுகள் சிறை

நியூயோர்க், ஜூன் 23

தனது சகோதரன் மனைவியைக் கொடுமைப்படுத்திய நபருக்கு, அமெரிக்காவில் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ரொக் லேண்ட் பகுதியில் வசிப்பவர் ரஜனி ஜகோடா. இவரது சகோதரர் விஷால் ஜகோடா. 2008 ஆம் ஆண்டு விஷாலுக்குத் திருமணம் நடந்தது. 25 வயதுடைய இந்தியப் பெண்ணை அவர் திருமணம் செய்து, அந்தப் பெண்ணை அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றார். அவரின் அமெரிக்க வீட்டில் சகோதரரான ரஜனியும் தங்கியிருந்துள்ளார். திருமணம் முடித்து அமெரிக்காவுக்கு அழைத்து வரப்பட்ட சகோதரனின் மனைவியை, ரஜனி பல்வேறு கொடுமைகளுக்குள்ளாக்கியுள்ளார்.

விஷாலின் மனைவிக்கு சூடு வைத்துள்ளார். 24 மணி நேரமும் வேலை வாங்கியுள்ளார்.

இது தொடர்பாக ரொக் லேண்ட் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, ரஜனியைக் கைது செய்தனர்.

சகோதரனின் மனைவியை அடிமைபோல நடத்திய ரஜனிக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் 170 பேர் சாவு

## சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு தெரிவிப்பு



சிரியாவில் நேற்று முன் தினம் நடந்த கலவரத்தில் 170 பேர் உயிரிழந்துள்ளனர் எனச் சர்வதேச மனித உரிமைகள்அமைப்பு தெரிவித்துள்ளது.

கலவரத்தைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டபோதும் அது பயனளிக்க வில்லை. கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி அமைதி நிலவ நடவடிக்கை எடுக்கப் பட்டது. இது குறித்து மனித உரிமை இயக்குநர் ரொமி ஆப்டல் ரஹ்மான் தெரிவித்ததாவது:-

நேற்று முன்தினம் நடந்த கலவரத்தில் உயிரிழந்தவர்களில் பொதுமக்கள் 106 பேரும் இராணுவத்தினர் 54 பேரும் மற்றும் 10 கிளர்ச்சியாளர்களும் அடங்குவர். இவற்றில் மத்திய பகுதியான ஹோம்ஸில் 31 பொதுமக்களும் மற்றும் கிளர்ச்சியாளர் ஒருவரும் உயிரிழந்தனர் எனவும் டாமாஸ்கஸ் அருகே துமாவில் நடந்த கலவரத்தில் பொதுமக்கள் 30 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.மார்ச் 2011இலிருந்து 15 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த கலவரத்தில் உயிரிழந்தவர்களில் பொதுமக்கள் 106 பேரும் இராணுவத்தினர் 54 பேரும் மற்றும் 10 கிளர்ச்சியாளர்களும் அடங்குவர்.

## வாடிக்கையாளர்களை ஈர்க்க ஜேர்மன் நிறுவனத்தின் உத்தி

### ஆடைகளின்றி அணி வகுத்து வந்தனர்

*சுப்பர் மார்க்கெட் ஒன்றில் 100 வாடிக்கையாளர்கள் இணைந்து நிர்வாணமாகப் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்ட சம்பவமொன்று ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது. ஜேர்மனியிலுள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்று, நிர்வாணமாக முதலில் வரும் வாடிக்கையாளர்களுக்கு 220 ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான பொருள்களை இலவசமாக வழங்குவதாகக் கூறியதைத் தொடர்ந்து இவ்வாறு வாடிக்கையாளர்கள் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக நூற்றுக்கும் மேற்பட்டோர் குறித்த சுப்பர் மார்க்கெட்டின் முன்னால் முண்டியத்தனர்.*

*''100 வாடிக்கையாளர்கள் இதற்கு வருவார்களென நான் எதிர்பார்க்கவில்லை. 10 இற்கும் அதிகமானவர்களே வருவார்களென நான் நினைத்தேன்'' என இந்தத் திட்டத்தின் உரிமையாளரான ஸ்டோர்ன்டோர்ப் தெரிவித்துள்ளார்.*

## தற்காலிக போர் நிறுத்தத்துக்கு தயார்

ஜெருசலேம்,ஜூன் 23 இஸ்ரேலுடன் தற்காலிக போர் நிறுத்தத்தை ஏற்படுத்தத் தாம் தயாராகவுள்ளதாக பலஸ்தீனத்தின் விடுதலைப் போராட்ட இயக்கமான ஹமாஸ் தெரிவித்துள்ளது.

எகிப்தின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சின் போது மூன்று நாள் போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் இயக்கம் இணங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

18 ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதல்களில் எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். காஸா பகுதியில் இருந்து நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் பல இஸ்ரேலியர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த மாதங்களில் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற மிகவும் மோசமான வன்முறையாக இது பதிவாகியுள்ளது என சர்வதேசத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## பாகிஸ்தானின் புதிய பிரதமருக்குப் பிடியாணை

பாகிஸ்தானின் புதிய பிரதமராக மக்தூம் சஹாபுதீன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். நேற்று நடந்த பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கூட்டத்தில் சகாபுதீன் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த யூசுப்ரஸா கிலானி மீது நீதிமன்றால் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பாக மூன்று நீதிபதிகள் கொண்ட தீர்ப்பை நேற்றுமுன்தினம் நீதிபதி இப்திகார் சவுத்ரி வாசித்தார். அதில் சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்காத கிலானி, பிரதமர் பதவி வகிக்கத் தகுதியற்றவர் எனத் தீர்ப்பளித்தார்.

அதைத்தொடர்ந்து புதிய பிரதமரை அறிவிக்கப் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கூட்டம் நேற்று நடந்தது. இதில் மக்தூம் சஹாபுதீன் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், பாகிஸ்தானின் புதிய பிரதமரான மக்தூம் சகாபுதீனுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. சஹாபுதீன் சுகாதார அமைச்சராக இருந்தபோது தடைசெய்யப்பட்ட எப்டெரின் மருந்துகளை, அதிக அளவில் இறக்குமதி செய்ததில் முறைகேடு நடந்ததாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

இந்தக் குற்றஞ்சாட்டின் அடிப்படையில் போதை பொருள் தடுப்புப் பிரிவின் பரிந்துரையை நீதிமன்றம் ஏற்றது. இதனையடுத்து நீதிமன்றம் மக்தூம் சஹாபுதீனுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தது, ஒரு வாரத்துக்குள் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த உத்தரவிட்டுள்ளது.




கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
வருடாந்த மகோற்சவம்
23.06.2012 - 04.07.2012

23.06.2012 சனிக்கிழமை கொடியேற்றம், வசந்த மண்டபப் பூசை காலை 9.00 மணி கொடியேற்றம் மு.ப 10.30 மணி
25.06.2012 திங்கட்கிழமை மஞ்சம் வசந்த மண்டப பூசை மாலை 5.00மணி
29.06.2012 வெள்ளிக்கிழமை கைலாசவாகனம் வசந்த மண்டப பூசை மாலை 5.00 மணி
01.07.2012 ஞாயிற்றுக்கிழமை சப்பரம் வசந்த மண்டப பூசை மாலை 5.00 மணி
02.07.2012 திங்கட்கிழமை இரதோற்சவம் வசந்த மண்டப பூசை காலை 7.00 மணி
03.07.2012 செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் வசந்த மண்டப பூசை காலை 6.30 மணி
04.07.2012 புதன்கிழமை பூங்காவனம் வசந்த மண்டப பூசை மாலை 5.30 மணி

தினமும் காலை 7.45 மணி அபிஷேகம்
மு.ப. 10.00 மணி வசந்தமண்டப பூசை
மாலை 5.30 மணி வசந்தமண்டப பூசை நடைபெறும்.

நந்தாவில், கொக்குவில். ஆலய பரிபாலன சபை
(19668) (6,9,10)

பிரான்பற்றூர் பெரியவளவு ஆலம்பதி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மகோற்சவ கால சிறப்பு நிகழ்வு



பிரான்பற்றூர் ஆலம்பதி முத்துமாரி அம்மன் மீது பாடப்பட்ட
முத்தாரம் இறுவட்டு வெளியீட்டுவிழா
காலம்:- இன்று (23.06.2012) முற்பகல் 10.00 மணி
இடம்:- தேவஸ்தான அமுதீஸ்வரி மண்டபம்
★முத்தாரம் இறுவட்டின் ஆக்கக் கலைஞர்கள்★
பாடலாக்கம்: துரை கணேசமூர்த்தி
இசை: கோ.சத்தியன்
கலைத்துவ இணைப்பாக்கம்: நா.சிறிஸ்கந்தராஜா (வவுனியா)
பாடகர்கள்: இசைப்பேரரசு கலாநிதி – நா.வி.மு.நவரத்தினம்
இசை இளவரசு – த.றொபேட் மற்றும் சாந்தன், சுகுமார், திவாகர், ரகுநாதன், சிறி, மோகன், ஜெகனி, மேரி இவர்களுடன்
தென்னிந்தியப் பாடகர் T.M.S செல்வக்குமார்
அன்னையின் புகழ் அகில மெங்கும் பரவும் வகை செய்வோம்
அன்னையில் அருப்பணியில் ஆலய தர்மகர்த்தா செல்லையா இரத்தினம்
(19613)(2-6-9)

இறைச்சிக்கோழி விற்பனை
உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்
நல்லூர் பாம் சென்ரர்.
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
(19465)(6-8-9)

குடியிருப்புக்குரிய காணி விற்பனைக்கு
இராசாவின் தோட்டம் வீதியில் (கைலாச பிள்ளையார் கோயில், நல்லூர்) 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உள்ளது. இரண்டு, இரண்டு பரப்பாகவோ அல்லது 4 பரப்பாகவோ வாங்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 4450863
(19476)(6-8-9)

காணி விற்பனைக்கு
யாழ். பிரதான வீதியும் 4ஆம் குறுக்குத்தெருவும் சந்திக்கும் பகுதியில் (''வைற்கவுஸ்''ற்கு முன்பாக) பழைய வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 3126 637

விற்பனைக்கு
புடைவைக்கடையில் பாவிக்கப்பட்ட
10' x 8' x 1½' ராக்கை - முதிரை
10' x 8' x 1½' அலுமாரி - முதிரை
7' x 8' x 1½' அலுமாரி முதிரை
5' x 3¼' x 1½' கண்ணாடி அலுமாரி
4' x 3¼' x 1½' கண்ணாடி அலுமாரி
3½' x 3 ¼' x 1½' அலுவலக மேசை
உடன்விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 4525538
(18101)(6-8-9)

TV விற்பனைக்கு
Panasonic 14" Inches TV மற்றும் TV Stand என்பன விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 871 5616

சாவகச்சேரி - கல்வயல் - பெருங்குளம்
ஸ்ரீ அம்பலவாணவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
திவ்விய மகோற்சவ விஞ்ஞாபனம் -2012
24.06.2012 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றம்
01.07.2012 ஞாயிற்றுக்கிழமை
மாலை 8.00 மணிக்கு சப்பரம்
02.07.2012 திங்கட்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு இரதோற்சவம் (தேர்த் திருவிழா)
03.07.2012 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
– பரிபாலனசபை.
பெருங்குளம், கல்வயல், சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரைப் பறித்த வாகனம் பொதுமக்களால் தீக்கிரை



அம்பாறை,ஜூன்23

அம்பாறை, அக்கரைப்பற்று பிரதேசத்தில் கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அவ்விடத்திலேயே சாவடைந்தார்.

அதைத் தொடர்ந்து அந்த வாகனத்தை பொது மக்கள் தீயிட்டு எரித்துள்ளனர் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ஹைதர் அலி றமீஸ் (வயது 28) என்பவரே இந்த விபத்தில் இறந்தவராவார்.

அம்பாறையிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனமும் அக்கரைப்பற்றிலிருந்து குடியிருப்பு பிரதேசத்தை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே மோதி விபத்திற்குள்ளாகியது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் 'பிறேக்' பிடித்தபோது மோட்டார் சைக்கிளில் பின்னாலிருந்தவர் கீழே வீழ்ந்ததால் வாகனம் வீழ்ந்தவர் மீது மோதியதாக பொலிஸார் கூறினர்.

வாகனச் சாரதி பொலிஸில் சரணடைந்துள்ளார். விபத்தில் இறந்தவரின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கிழக்குப் பல்கலை மாணவரின் கோரிக்கைக்கு இணங்கியது அரசு

## கருணாவிடம் உறுதியளித்தார் எஸ்.பி.

அம்பாறை,ஜூன்23

கிழக்குப் பல்கலைக்கழக பேரவையின் அருட்தந்தை கலாநிதி சில்வெஸ்ரர் சிறிதரனின் இறப்பால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிய பாதிரியார் ஒருவரை நியமிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக எடுப்பதாக உயர்கல்வி அமைச்சர் மீள்குடியேற்ற பிரதி அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

பேரவை நியமனப் பிரச்சினை தொடர்பில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவுடன் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நடத்திய பேச்சில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் மேலும் தெரிவித்ததாவது:-





இந்தப் பிரச்சினை தொடர்பிலான விளக்கங்களை கேட்டறிந்து கொண்ட உயர் கல்வி அமைச்சர் உடனடியாக பேரவையில் ஏற்பட்ட பாதிரியார் ஒருவரின் இடத்திற்கு எங்களால் முன்மொழியப்பட்டுள்ள அருட்தந்தை கிறைஸ்டன் அவுட்ஸ்கோனை நியமிப்பதற்கு உறுதி வழங்கியுள்ளார்.

பேரவைக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்பட்டது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையில் மாணவர்களும் மட்டக்களப்பின் புத்திஜீவிகளும் தனது கவனத்துக்கு குறித்த விடயத்தைக் கொண்டு வந்ததையடுத்து இந்த உறுதி பெறப்பட்டுள்ளது.

பாதிரியார் ஒருவரை மீண்டும் பேரவையில் நியமனம் செய்ய வேண்டும் எனக் கோரி, வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், கல்லடியிலுள்ள விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனம், மற்றும் மட்டக்களப்பு நகரிலுள்ள சௌக்கிய பராமரிப்பு பீடம் என்பவற்றின் மாணவர்கள் விரிவுரைப் பகிஷ்கரிப்பில் கடந்த 3 வாரங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட பிரச்சினை தற்போது சுமுகமான முறையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.- என்றார். (ச)

## கொள்கலன் குடைசாய்ந்ததில் போக்குவரத்துக்குத் தடை

பதுளை,ஜூன்23

பதுளை - பண்டாரவளை பிரதான வீதியின் தந்திரிய பகுதியில் கொள்கலன் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு இந்தக் கொள்கலன் குடைசாய்ந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

விபத்தில் கொள்கலனில் பயணித்த மூவர் காயமடைந்துள்ளனர்.

அதில் ஒருவர் பண்டாரவளை வைத்திய சாலையிலும் ஏனைய இருவர் தியத்தலாவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொள்கலனை வீதியில் இருந்து அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ச)

## பஸ் விபத்தில் 5 பேர் காயம்

எருவில்,ஜூன்23

வாழைச்சேனை -மட்டக்களப்பு பிரதான வீதியில் கிண்ணயடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து வந்த பஸ்ஸும் வீதி வேலையில் ஈடுபடுவதற்காக வேலையாள்களை ஏற்றிவந்த டிராக்டரும் மோதியதில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூன்று பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மற்றைய இருவரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-31)

## முதல்வரின் ஆலோசகராக ரகுமான்

கல்முனை,ஜூன்23

கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீரா சாஹிப்பின் ஆலோசகராகச் செயற்பட்டு வந்த முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.பீர்முஹம்மது அப்பொறுப்பில் இருந்து விலகியதைத் தொடர்ந்து முதல்வரின் புதிய ஆலோசகராக ஆசிரியர் ஏ.ஏ.ரகுமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் கடந்த புதன்கிழமை கல்முனை மாநகர சபையில் வைத்து முதல்வரினால் வழங்கப்பட்டது. (ச)

## கல்விதான் மனித சமுதாயத்தின் நிரந்தர சொத்து

### இந்து மாமன்றத்தின் இணைச் செயலாளர் தெரிவிப்பு

ஆலையடிவேம்பு,ஜூன்23

கல்வி ஒன்றுதான் மனித சமுதாயத்தின் நிரந்தரமான சொத்து என்பதை நாம் மறந்து விடக்கூடாது என்று அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் இணைச் செயலாளர் எஸ்.செல்வரெத்தினம் தெரிவித்தார்.

அளிக்கம்பை அரசினர் பாடசாலையிலுள்ள 60 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆதிவாசிகளான வனக்குறவர்களுக்கு அளிக்கம்பை என்னும் இடத்தில் அப்போது இருந்த கத்தோலிக்க குருவான வண.குக் என்பவர் கல்வியை ஊக்குவித்தார்.

அதன் பயனாக இன்று வனக்குறவர்களில் பலர் ஆசிரியர்களாகவும், பல்கலைக்கழகப் பட்டம்பெற்றவர்களாகவும், வேறு பல தொழில்களில் ஈடுபடக்கூடிய நிலைமையில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். மாணவர்கள் பாதணிகள், சீருடைகள் இல்லாத நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் எதிர்காலத்தில் உதவ இந்து மாமன்றம் முன்வர வேண்டும் - என்றார். (ச)

## பொலிஸாருக்கு டிப்ளோமா

மட்டக்களப்பு,ஜூன்23

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலில் ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் தமிழ்மொழி கற்கை நெறியைப்பூர்த்தி செய்த 92 சிங்களப் பொலிஸார் டிப்ளோமா பட்டதாரிகளாக வெளியேறினர்.

இலங்கை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் மட்டக்களப்பு பிராந்திய தமிழ் கற்கை நிலையத்தில் 5 மாத தமிழ் பாடநெறியைப் பூர்த்தி செய்த நான்காவது பொலிஸ் அணியினர் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## வரட்சியால் வனவிலங்குகள் நகரை நாடிவரும் நிலை

### நுவரெலியா சரணாலயத்தில் அவலம்

நுவரெலியா,ஜூன்23

வரட்சியான காலநிலை காரணமாக நுவரெலியா நகரை அண்மித்துள்ள கெல்வே லேண்ட் சரணாலயத்தில் உள்ள விலங்குகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வரட்சியின் காரணமாக குடிதண்ணீரைத் தேடி நகரம் மற்றும் அருகில் உள்ள பயிர்ச் செய்கை நிலங்களை நாடிச் செல்கின்ற வன விலங்குகள் வேட்டையாடப்படுகின்றன என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜீ.குமாரசிறி தெரிவித்தார்.

மாநகர முதல்வர், வனவிலங்குகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் வரட்சியினால் வனவிலங்குகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் சரணாலயத்துக்கு உள்ளேயே வனவிலங்குகள் குடிப்பதற்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (ச)



கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரை கடல்-விமான சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான பரீட்சார்த்த சேவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடை பெற்றது. கொழும்பு, சீதுவைப் பிரதேசத்திலுள்ள தண்டன்ஓயா வாவியிலிருந்து புறப்பட்ட இந்த விமானம் மட்டக்களப்பு வாவியில் தரையிறங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 * 01 * 1942



விண்ணில் 04 * 07 * 2011

அமரர்

## கந்தையா கந்தசாமி

திதி: சதுர்த்தி (23.06.2012)

அன்பிற்கு ஓர் அடையாளமாய் - எம்மை
அரவணைத்த தெய்வமே
ஈராறு மாதங்கள் கடந்தும்
மீளவில்லை நாம் உங்கள் நினைவில்
நீங்கள் இல்லை என்பதையே
உணர மறுக்கிறது நம் இதயம்
உங்கள் மடியில் நாம் இளைப்பாற
வேண்டும் என்றோம். - ஆனால்
இறைவன் மடியில் இளைப்பாற நீங்கள்
சென்றதேனோ. ஆறவில்லை எம் இதயம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

இல. 01, அம்பாள் வீதி,
கொக்குவில்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(19681) (6,9,10)

### பொதுக்கூட்டம்

இலங்கை தென்னை வளர்ப்போர் சங்க வடபிராந்தியக் கிளையின் பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் குறுக்கு வீதியிலுள்ள விடுதியில் இடம்பெறவுள்ளது. இதில் தென்னை வளர்ப்போர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (16)

## சேவை நலன் பாராட்டு

(23.06.2012)



உயர் திரு. முத்தையா – உதயசங்கர்
(SLPS - I)

38 வருடமாக எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அரும் பணி யாற்றி 23.06.2012 ஆம் திகதி தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் திருவாளர் முத்தையா - உதயசங்கர் அவர்கள் எமது கிராமத்துக்காக அரும்பாடுபட்டவர். அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

முள்ளியவளை வாழ்மக்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி பிறேமதாஸ் பேபி



விக்கினேஸ்வரா வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிறேமதாஸ் பேபி கடந்த (20.06.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், செல்லமுத்து - சோதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், பிறேமதாஸின் அன்பு மனைவியும், டிலானி (A/L 2013 வர்த்தகப் பிரிவு - யாழ்ப்பாணக்கல்லூரி), ஜனாத் (தரம்: 10 - யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், இராசேந்திரம், தம்பித்துரை, சிவானந்தராஜா, அருளானந்த ராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராணி, தவமணி, ஆனந்தஜோதி, ஜெகதீஸ்வரி, குமணதாஸ், தேன்மொழி, ரகுலதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்கினேஸ்வரா வீதி,
சங்கானை. (19688)(45.6.9)

தகவல்:
குடும்பத்தினர்


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

veta
Experts in English Training

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 3000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட

Come, let's speak fluent English

Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | | நெல்லியடி | | சாவகச்சேரி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 8.00 a.m. | Sat, Sun | 1.30 a.m. | Sat, Sun | 9.30 p.m. |
| Mon, Wed, fri | 9.30. a.m. | Tue,Thu | 3.30 a.m. | Wed,Fri | 9.30 a.m. |
| Wed, Fri | 4.30 p.m. | | | | |

(தி/955) (6-9)

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

UK செல்வதற்கான
A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான)
B1-Exam (Student Visa மூலம் UKசெல்வதற்கான)
City & Guilds Approved Centre
IELTS • Unique Test Tips • Latest course Materials

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243



உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், லண்டன் பிரஜாவுரிமை உள்ளவரும் லண்டனில் சொந்தமாக வர்த்தக நிறுவனம் நடத்தி வருபவருமான 1981 இல் பிறந்த (கேட்டை 3 ஆம் பாதம் - கிரகபாவம் 36, 4 இல் செவ்வாய்) மணமகனுக்குப் பொருத்தமான அழகிய படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு:- 021 205 3052

(19684)(2-6-9)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கந்தப்பர்சேகரம் வீதி, இல.24 இல் அமைந்துள்ள நி.பர. (2) இரண்டு குளி (11) பதினொன்று விஸ்தீரணம் உடைய காணி உடனடி விற்பனைக்குண்டு. இக் காணி பகுதியாகவும் விற்கப்படும்.

தொடர்பு : 077 7283811

(19687)(6-7-8)

# மரண அறிவித்தல்

## எலியாஸ் மரியநாயகம் றொய்ஸ் கொண்ஸ்ரன்ரைன் (மதன்)



யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட றொய்ஸ் கொண்ஸ்ரன்ரைன் ( 09.06.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் எலியாஸ் மரியநாயகம் - ஜெயராணி(பிரான்ஸ்) தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன் தேவதாஸ் -ஹெலன்தம்பதியரின் பெறா மகனும், கியூமன் (பிரான்ஸ்), மேகலா(பிரான்ஸ்), றூபலா(பிரான்ஸ்), அல்பேட்(தயான்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், வெரோனிக்(பிரான்ஸ்), றிச்சாட் (கபூர்-ஜேர்மன்), குயின்ரன் (ரமேஸ்-பிரான்ஸ்), ஜனனி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, ஜெயரட்ணம் மற்றும் செபஸ்ரியான்(இலங்கை), அலோசியஸ் (பிரான்ஸ்), சாள்ஸ்(பிரான்ஸ்), பத்திமா (பிரான்ஸ்), ஜெயமணி(இலங்கை) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், காலஞ்சென்ற ஹெலன் மற்றும் லீலா(பிரான்ஸ்), ஞானமணி (லண்டன்), இந்திரா(பிரான்ஸ்), காலஞ்சென்ற சூரி மற்றும் ஜெயசீலன் (இலங்கை), குமார் (இலங்கை), ரஞ்சன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.06.2012) சனிக்கிழமை பிரான்ஸ் நேரப்படி மு.ப. 11.15 க்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/5, மத்தியகிழக்கு வீதி,
குருநகர். (19187)

தகவல்: றொபின்சன் (ரஞ்சன்)
(யோமன் குடும்பத்தினர்).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பத்தரமுல்லையிலுள்ள வன ஜீவராசிகள் மற்றும் கமநல சேவைகள் அமைச்சில் டெங்கு ஒழிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. அதிகாரிகள் டெங்கு ஒழிப்புச் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### அதிவேக நெடுஞ்சாலையில்

## தனியார் பஸ்களுக்கு ஒரு லட்சம் வருமானம்

கொழும்பு,ஜூன்.23

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் தினமும் சுமார் ஒரு லட்சம் ரூபாவை வருமானமாகப் பெறுகின்றன என்று போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க கூறினார். இந்தத் தொகையானது இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் பெறும் வருமானத்தைவிட இருமடங்கு அதிகமாகும். ஒழுங்குவிதிகளின்படி தனியார் பஸ்கள் செயற்படாமையே இதற்குக் காரணமாகும் என்று அவர் கூறினார்.

பஸ்நிலையத்தில் 20 நிமிடங்கள் தரித்து நிற்க வேண்டும் என போக்குவரத்து அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும் தனியார் பஸ்கள் இதைக் கடைப்பிடிப்பதில்லை. 10 நிமிடங்களுக்கு ஒரு தடவை தனியார் பஸ்கள் புறப்படுகின்றன. இதனால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 65,000 ரூபா இழப்பு ஏற்படும் அதேவேளை, தனியார் பஸ்களுக்கு 100,000 ரூபா வருமானம் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டார். (ச)

## ஊழியர் சேமலாப நிதி குறித்து எவரும் கவலைகொள்ள வேண்டாம்

### கோருகிறார் சரத் அமுனுகம

கொழும்பு,ஜூன்23

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளது என எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டிவரும் நிலையில், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவை தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று இலங்கைக்கான சர்வதேச நாணயநிதி விவகாரங்களைக் கையாளும் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

குறித்த நிதி ஒழுங்கான முறையில் பங்குச் சந்தைகள், வங்கிகள், திறைசேரி ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டு இலாபமீட்டப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழிய நம்பிக்கை நிதியம் ஆகியவை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் விசேட கூற்றொன்றை விடுத்து தெரிவித்த கருத்துகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை முதலீட்டுச் சட்டத்தின் கீழ் முதலீடு செய்யும் அதிகாரம் அரசுக்கு உள்ளது. இதற்கமையவே மேற்படியான நிதிகள் மூலம் பங்குகள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. பங்குச் சந்தையில் பிரதிபலன்கள் ஒரே நிலையில் இருக்காது. ஏற்றமும் இறக்கமும் மாறிமாறிவரும். இதனால் சிறியளவு பாதிப்பு ஏற்பட்டாலும் நீண்ட கால முதலீடுகள் என்பதால் சேமலாப நிதிக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது. - என்றார். (ச-சி)

# பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் நிதி அமைச்சர்களுக்கே தெரியாது

### நாடாளுமன்றில் எதிர்க்கட்சி தெரிவிப்பு

**பட்ஜெட் செயற்குழுவொன்றை அமைப்பது தொடர்பான பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டுவரத் திட்டமிட்டிருந்தது.**

கொழும்பு,ஜூன்23

வரவு - செலவுத் திட்டத்தில் அமைச்சுகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்பது அமைச்சர்கள் ஒருவருக்கும் தெரியாது.

ஜனாதிபதிக்கும் நிதி அமைச்சின் செயலாளருக்கும் மாத்திரமே அது தெரியும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார். பட்ஜெட் செயற்குழுவொன்றை அமைப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

பட்ஜெட் செயற்குழுவொன்றை அமைப்பது தொடர்பான பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டுவரத் திட்டமிட்டிருந்தது. ஆனால், அந்தப் பணியை திலங்க சுமதிபால செய்துள்ளார். அதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்தக் குழுவை அடுத்த வருடத்திற்கான வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அமைப்பது நல்லது. அனைத்து அமைச்சுக்களையும் நாம் இக்குழுவுக்கு முன் கொண்டுவர வேண்டும். ஒவ்வொரு அமைச்சினதும் வரவு- செலவுகள் மற்றும் மதிப்பீடுகள் போன்றவற்றை ஆராய்ந்து வரவு- செலவுத் திட்டத்துக்கு முன் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கலாம்.

உண்மையில், அமைச்சுக்களுக்கு எவ்வளவு தொகை வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கினாலும் அமைச்சர்களுக்கு அது தெரியாது. இவ்வாறானதொரு நிலையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த பட்ஜெட் செயற்குழுவை உடனடியாக அமைப்பது நாட்டுக்கு நன்மையளிப்பதாக அமையும் - என்றார். (ச-சி)

## இலங்கையில் 36 ஆயிரத்து 807 கிராமங்கள்; ஒரு கிராமத்தில் சராசரியாக 123 குடும்பங்கள்

### நாடாளுமன்றில் நிதி அமைச்சு தகவல்

இலங்கையில் 36 ஆயிரத்து 807 கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமத்தில் சராசரியாக 123 குடும்பங்கள் வாழ்கின்றன என்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு நேற்றுமுன்தினம் சபையில் தகவல் வெளியிட்டது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரிடம் நாட்டில் எத்தனை கிராமங்கள் உள்ளன, கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை ஆகியன உட்பட சனத் தொகை விவரங்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் குறித்த கேள்விகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் வந்தபோது ரவி கருணாநாயக்க சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. இதனால் குறித்த கேள்விகளுக்கான பதில்கள் சபையில் ஆற்றுப்படுத்தப்பட்டன.

கேள்விக்கான பதில்கள் வருமாறு:-

அண்மைய சனத்தொகைக் கணிப்பீட்டுக்கமைய இந்தநாட்டில் 36 ஆயிரத்து 807 கிராமங்கள் உள்ளன. அவற்றில் ஒரு கிராமத்தில் சராசரியாக 123 குடும்பங்கள் வாழ்கின்றன. நாட்டில் 14 ஆயிரத்து 22 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. கிராம சேவை உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 22 ஆகும். நாட்டில் 313 பிரதேசவலயங்கள் அமைந்துள்ளன. தற்போதுள்ள பிரதேச செயலாளர்களின் எண்ணிக்கை 309 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உதவி அரச அதிபர் அலுவலகங்களின் எண்ணிக்கை 19. தற்போதுள்ளஉதவி அரச அதிபர்களின் எண்ணிக்கை 17 என்று அந்தப் பதிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச-சி)

## டெங்கு ஒழிப்புக்கு ஆதரவு வழங்கவும்

நாட்டின் பல பாகங்களிலும் தொற்றுநோய் போன்று பரவி வரும் டெங்கை ஒழிக்க அனைத்து நிறுவனங்கள், பொது மக்கள் அரசுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட எந்தவோர் இடத்திலும் டெங்கு நுளம்பு பரவும் சூழல் காணப்பட்டால் தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி விசேட செயலணியுடன் இணைந்து சுகாதார அமைச்சு தற்போது டெங்கு ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. எனினும் [illegible] அதிகரித்துள்ளது. டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்க வேண்டிய சில முக்கிய அமைச்சுக்கள் கடமை தவறுவதால் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுக்க முடியாதுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இந்தியா வழங்கிய படகுகள் அமைச்சரின் ஆதரவாளருக்கே

### அநியாயத்தைச் சுட்டிக்காட்டியது கூட்டமைப்பு

கொழும்பு,ஜூன்23

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வழங்குவதற்காக இந்திய அரசால் வழங்கப்பட்ட படகுகள் உண்மையான பயனாளிகளுக்கு வழங்கப்படாமல், அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற பட்ஜெட் செயற்குழு அமைப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணைக்கு அரச தரப்பி[illegible]

இந்தப் பிரேரணைக்கு அமைவாக பட்ஜெட் செயற்குழுவை அமைப்பதில் சிக்கல்கள் ஏற்படப் போவதில்லை. ஏனைய நாடுகளில் இந்த முறைமை எப்படி செயற்படுகின்றது எனப் பார்த்து எமது நாட்டிலும் நடைமுறைப்படுத்தலாம்.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இடம் பெறுகின்றன.

அத்திட்டங்கள் அனைத்தும் உரிய பயனாளிகளுக்குச் சென்றடைகின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் வடக்கு, கிழக்கு மக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் எமது கருத்துக்கள் உள்வாங்கப்படுவதில்லை.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வழங்குவதற்காக இந்திய அரசால் அண்மையில் படகுகள் வழங்கப்பட்டன.

அப்படகுகளைப் பெறுபவர்களின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டன. இறுதியில் அவர்களின் பெயர்கள் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, அமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்களுக்கே படகுகள் வழங்கப்பட்டன.

இந்தமாதிரியானதொரு துரதிர்ஷ்டவசமான நிலைதான் வடக்கு, கிழக்கு முழுவதும் தொடர்கிறது - என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தடை, தாமதங்களுக்குப் பின்னர் வெற்றி காண்பீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரிடும். யாரிடமும் விதண்டாவாதமாகப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத்தொல்லைகளைச் சந்திப்பீர்கள். நன்றி மறந்த ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடும். சிலரிடம் கடனாக்க் கொடுத்த பணம் கிடைக்கும்.

**இடபம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும். என்றோ சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். பெண்கள் வகையில் பெருமைப் படும் வகையிலான உதவி கிடைக்கும். குடும்பத்தினரின் செயற்பாடுகளை நினைத்து பெருமைப்படுவீர்கள். திடீர் பணவரவுகள் வரும்.

**மிதுனம்:** ஒருவருக்கு உதவி செய்யப்போய் அது உபத்திரமாக மாறும். நண்பர்கள் சிலரின் விமர்சனங்களுக்கு ஆள்படுவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால், அல்லல்படுவீர்கள். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். தாய் அல்லது பிள்ளைகள் வழியில் செலவு ஏற்படும் .

**கடகம்:** மற்றவர்கள் செலவில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். உறவுப்பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.

**சிங்கம்:** வீட்டுக்கு வரும் சிலரை உபசரிக்கக்கூட நேரமில்லாமல், முக்கியமான வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கும். ஆரம்பித்த வேலை ஒன்றை இடையில் விட்டு விட்டு, மற்றொரு வேலையைச் செய்ய நேரிடலாம். எதிர்பாராத சம்பவங்கள் நடக்க வாய்ப்புகள் உண்டு.

**கன்னி:** சந்தோஷமான, மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறுவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பெண்கள் கணவரின் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சிலர் உங்களுக்கு முக்கியமான விடயங்களில், நல்ல ஆலோசனை கூறுவார்கள்.

**நாளை**

ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை 24.06.2012
திதி: திரயோதசி மா .05.31 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ 08.25 வரை
சுபநேரம்: 08.53- 10.23 வரை
ராகு காலம்: 04.23- 05.53 வரை

**துலாம்:** நண்பர்களுடன் சில பிரச்சினைகளுக்காக வாக்குவாதம் செய்வீர்கள். கடுமையாகப் பேசுவதன் மூலம் சிலரின் மனஸ்தாபத்திற்கு ஆளாகலாம். குறுக்கு வழிச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொள்வர்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். திட்டமிட்ட சில விடயங்கள் நடைபெறாமல் போனாலும், திட்டமிடாத காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள், உறவினர்களுக்கு மற்றவர்களை நம்பி வாக்குறுதிகளைக் கொடுக்க வேண்டாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அரசியல் தொடர்புடையவர்களுக்கு அலைச்சல்கள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவுகள் வரும்.

**மகரம்:** செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். இரண்டு நாள்களாக சந்திக்க முடியாத ஒருவரை இன்று சந்திப்பீர்கள். மற்றவர்கள் உங்களைப்பார்த்து பொறாமைப் படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்.

**கும்பம்:** வீண் பேச்சுக்களை, விவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள், எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில், சில பொருள்கள் கிடைக்காமல் கோபம் அடைவீர்கள். வாடகை வீட்டில் குடியிருப்போர் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். பெரியளவில் ஆதாயத்தை எதிர் பார்த்த விடயம் ஒன்றில், சிறியளவில் பலன் கிடைக்கும்.

**மீனம்:** கடின உழைப்புக்கு பலன் கிட்டும். தாராளமாகச் செலவு செய்வீர்கள். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்வார்கள். எதிலும் முன்னெச்சரிக்கை, புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 4 | 7 | | 5 | 3 | 1 | |
| | 7 | 2 | | 3 | 1 | 8 | | |
| | | 3 | 6 | | | 2 | | |
| | 3 | 7 | 5 | 4 | | | | |
| | | | | | | | | |
| | | | | 6 | 2 | 5 | 7 | |
| | | 6 | | | 4 | 1 | | |
| | | 9 | 1 | 5 | | 7 | 8 | |
| | 8 | 1 | 9 | | 3 | 4 | 5 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 9 | 7 | 1 | 8 | 2 | 6 | 3 |
| 8 | 1 | 3 | 9 | 2 | 6 | 4 | 7 | 5 |
| 6 | 7 | 2 | 3 | 5 | 4 | 9 | 1 | 8 |
| 7 | 9 | 8 | 6 | 4 | 5 | 3 | 2 | 1 |
| 4 | 6 | 1 | 2 | 3 | 9 | 8 | 5 | 7 |
| 3 | 2 | 5 | 8 | 7 | 1 | 6 | 9 | 4 |
| 1 | 3 | 4 | 5 | 9 | 2 | 7 | 8 | 6 |
| 9 | 8 | 7 | 1 | 6 | 3 | 5 | 4 | 2 |
| 2 | 5 | 6 | 4 | 8 | 7 | 1 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3 X 3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்
## சிவனடியார் சுவாமிநாதன்

(முன்னாள் சாரதியும், பிரபல வாகனத் தரகரும்)



சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனடியார் சுவாமிநாதன் கடந்த 18.06. 2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணி அளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.** (19620) (6,9,10) **தகவல்: குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு **19.08.1961** இறப்பு **24.05.2012**

அமரர்
## இரத்தினசபாபதி குணராசா

(தெ.மே.ப.நோ.கூ.ச.கிளை-மேற்பார்வையாளர்)

எத்தனை ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு அது ஈடாகுமா
எத்தனை ஆண்டுகள் உருண்டு சென்றாலும்
உங்கள் நினைவு தான் விட்டுப் போகுமா.

எமது குடும்பத் தலைவர் நோயுற்றிருந்த போது உதவி புரிந்தோர்க்கும் அமரத்துவமடைந்த செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள். இன்று *(23.06.2012)* சனிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சனசமூக நிலைய வீதி, நாவற்குழி, கைதடி.** (சி/932) (6,9,10) **குடும்பத்தினர்.**

### ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 25 ஆவது வருட நிறைவை முன்னிட்டு மரநடுகை

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 25 வருடகால சேவையை முன்னிட்டு மணியம்தோட்டப்பகுதியில் ஜெய்ப்பூர் நிறுவனத்துக்குச்சொந்தமான காணியில் பனை மரநாற்றுகள் நடப்படவுள்ளன.


பனை அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் 25 பனை மரநாற்றுகளை நிறுவனத்தின் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி நடவுள்ளனர். (வ-14)

### ஆங்கிலப் போட்டியில் முன்னிலையில் மானிப்பாய் ம.க.

சண்டிலிப்பாய் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட ஆங்கிலப் போட்டியில் 73 இடங்களைப் பெற்று மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்னிலையில் உள்ளது.

இவற்றில் 36 முதலாம் இடங்களையும் 26 இரண்டாம் இடங்களையும் 11 மூன்றாம் இடங்களையும் பெற்றுமொத்தமாக 73 இடங்களைப் பெற்றுள்ளது. (வ-14)

# மரண அறிவித்தல்
## செல்லப்பா இராமச்சந்திரன்



கணேசபுரம் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராமச்சந்திரன் கடந்த (20.06.2012) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - அரியமணி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், லீலாவதியின் அன்புக் கணவரும், திவாகரன் - நதாசா, டினேஸ்கரன் - அனுஜா, தனுஷ்கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி,புஸ்பராணி, பத்மநாதன் ஆகியோரின் சகோதரரும், நடராசா ஜெயபாலன், ஈஸ்வரிதேவி, தர்மராஜா, புஷ்பவதி, சண்முகதாஸ், அருமைராஜா, கமலாவதி, சிவதாஸ், விஜயராஜா, யோகராஜா ஆகியோரின் மைத்துனரும், நாகேஸ்வரனின் உடன் பிறவா சகோதரரும், விஜயதீபனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.06.2012) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிளிநொச்சி திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்தொள்ளவும்.

**கணேசபுரம், கிளிநொச்சி.** (சி/945)(45.6.9) **தகவல்: மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## அதிவேக பாதையின் அருகிலேயுள்ள ஆஸ்பத்திரிகளில் திடீர் விபத்து பிரிவுகள்

அதிவேகப் பாதையில் விபத்துக்குட்படுவோரின் நலன் கருதி அந்தப் பாதையின் அருகிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் திடீர் விபத்துப் பிரிவுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகிலுள்ள அனைத்து அதிவேகப் பாதைகளுக்கு அருகிலும் இதுபோன்று வைத்திய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய சுகாதார அமைச்சு, இந்த நிர்மாணப் பணிகளுக்கு சுகாதார அமைச்சு 45 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளது.

**இந்த நிர்மாணப் பணிகளுக்கு சுகாதார அமைச்சு 45 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. களுத்துறை, வேதர, எல்பிட்டிய மற்றும் பலபிட்டிய வைத்திய சாலைகளில் குறித்த திடீர் விபத்துப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.**

களுத்துறை, வேதர, எல்பிட்டிய மற்றும் பலபிட்டிய வைத்தியசாலைகளில் குறித்த திடீர் விபத்துப் பிரிவுகள் அமைக்கப் படவுள்ளன என்றும் எல்பிட்டிய, பலபிட்டிய மற்றும் ஹொரணை வைத்திய சாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ந)

### மாணிக்கவாசகர் குருபூசை

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இந்து மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. சு.அஜிந்தன் தலைமையில் வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். (ந)

### ஆலய சிரமதானத்தில் மாதர் சங்கத்தினர்

வடமராட்சி, ஜூன் 23

பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களான பெண்கள் குழுவினர் இன்று சனிக்கிழமை பருத்தித்துறை புனிததோமையர் தேவாலயத்தில் சிரமதானப் பணியை மேற்கொள்ள வுள்ளனர். தேவாலய வருடாந்த திருவிழா ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாவதை ஒட்டியே இந்தச் சிரமதானப் பணி மேற்கொள்ள ஏற்பாடாகியுள்ளது. (ந-8)

## பேச்சுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல் 3 இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கான இறுதிப்போட்டி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற வுள்ளது.

இதில் வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியிலும் நடைபெற வுள்ளது.

போட்டியில் பங்குபற்றத் தகுதியுடைய மாணவர்கள் அனைவரையும் இறுதிப் போட்டியில் பங்குபற்றுமாறு யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் டாக்டர் ஜெ. கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (ந-14)

### நிதி ஒதுக்கீடு

வலி. வடக்கு, ஜூன் 23

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனால் சங்கானை திருநாவுக்கரசு சனசமூக நிலையத்தின் மின்சாரஇணைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தில் இரவு நேரங்களில் பத்திரிகை களை பொதுமக்கள் வாசிக்கவும் ஏனைய வசதிகளைக் கருத்தில் கொண்டும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பன்முகப் படுத்திய வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் 20ஆயிரம் ரூபா இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. (ந-86)

## சமய சந்நிதிகளில்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஜூலை மாதம் 2 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.(ந)

* * *

ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு இன்று மாலை 6 மணியளவில் பிரமசாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள் "மானிட வாழ்வில் மகோற்சவம் என்னும்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ந)

* * *

கரவெட்டி, ஜூன் 23

கரவெட்டி செட்டித்துறை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ந-8)

* * *

தென்மராட்சி, ஜூன் 23

மட்டுவில் தெற்கு அக்கினி வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் ஆரம்பமாகி 12 நாள்கள் நடைபெறும். ஜூலை ஆறாம் திகதி சங்காபிஷேகத்துடன் திருவிழா நிறைவு பெறும். (ந-9)

* * *

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்னகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத் தேர்த்திருவிழா நாளைமறு தினம் திங்கட்கிழமை 3.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் நண்பகல் 12 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ந)

* * *

தென்மராட்சி, ஜூன் 23

சாவகச்சேரி வடக்கு மண்குவில் இலஞ்சாரணியம் கண்ணகை அம்பாள் (சோலை அம்மன்) ஆலயப் பெருந் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

ஜூலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

சிவமயம்

## ஆனி உத்தரப்பெருவிழா

கீரிமலை நகுலேஸ்வரி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த ஆனி உத்தர நடேசர் அபிஷேகப் பெருவிழா 26.06.2012 செவ்வாய்க்கிழமை இடம்பெறும். அத்தருணம் அடியவர்கள் வருகைதந்து இஸ்ட சித்திகளைப் பெற்று ஏகுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

உபயம்: ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா.

(சி/949)(45.6.9)



## முக்கிய அறிவித்தல்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் காம்யோற்சவம் நாளை (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 18.07.2012 ஆம் திகதி புதன்கிழமை ஆடி அமாவாசைத் திதியுடன் நிறைவுபெறும்.

இத்தருணம் ஆலயச் சூழலில் வியாபாரம் செய்ய விரும்புபவர்கள் ஆலயத்தின் ஆதீனகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் ஆலய வளாகத்தில் கடைபோட்டு வியாபாரம் செய்ய விரும்புபவர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக்கொள்ளவும். பிரதேச செயலகக் காரியாலயம் மாவைக்கந்தன் தெற்கு வீதியில் அமைந்துள்ளது.

- மஹாராஜஸ்ரீ

து.பு.இரத்தினசபாபதிக்குருக்கள்.

(சி/950)(2-9-6)

## காணி விற்பனைக்கு

வேம்படி வீதி, முதலாம் குறுக்குத்தெருவில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 8759401 (19623)(2.6.9)

## J.C.B வாடகைக்கு (பைக்கோ)



* போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது
* குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்

இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம், பளை (தபாற்கந்தோர் எதிரில்)

தொடர்புகளுக்கு: 077 7712482/ 0779847285

(19406) (8,9,10)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் நிர்மாண ஒப்பந்தவேலைகள், தச்சுவேலைகள், தளபாட உற்பத்திகள், சகல வித அரிவு மர விற்பனைகள், மர அரிவுபோன்ற வேலைகளை மேற்கொண்டு இயங்கிவரும் எமது L.M.R. Enterprises நிறுவனத்துக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.

(1) தச்சுத்தொழில்
(2) மரஅரிவு வேலையாள்கள்
(3) தச்சுவேலை பயிலுனர்கள்
(4) மேற்பார்வையாளர்கள்
(5) களஞ்சியக்காப்பாளர்கள்
(6) கணக்குப்பதிவாளர்கள்
(7) முகாமையாளர்

போன்ற பதவிகளுக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

முகாமைத்துவப் பணிப்பாளர் L.M.R. Enterprises 36, பலாலி வீதி, கோண்டாவில் எனும் முகவரிக்கு உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவும்

(19667)(6-8-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் களகூட்டு இணைப்பாளராக (விதாதா வள நிலையம்) கடமையாற்றும் காரைதீவு 10 ஆம் பிரிவைச் சேர்ந்த வடிவேல் பிரசாந் அவர்களின் அன்புச் சகோதரன்

### வடிவேல் கிருஷாந்

20.06.2012 புதன்கிழமையன்று அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிசங்கம், சங்கானை.

(c/948)(6-9-8)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 24.06.1930



உதிர்வு 24.05.2012

### அமரர் சின்னத்தம்பு சாந்தலிங்கம்

கடந்த (24.05.2012) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இன்று (23.06.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

4 ஆம் வட்டாரம், மண்கும்பான் கிழக்கு, வேலணை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருதங்க அரங்கேற்றம்

சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவின் மாணவனான பாலசுந்தரம் ஞானவேலின் மிருதங்க அரங்கேற்றம் இன்று மாலை 2 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாவித்தகர் சி.சிவஞானராசாவின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை, கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், முதுகலைமாணி கு.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர்.

த.றொபேட், அ.ஜெயராமன், நா.மாதவன், நா.சிவசுந்தரசர்மா, சி.செந்தூரன், க.ரஜீவன் ஆகியோர் அணிசெய்யும் இந்த அரங்கேற்றத்தின் மதிப்பீட்டுரையை ஆசிரியர் பகீரதி கணேசதுரை வழங்கவுள்ளார். (ம)

## 17ஆம் ஆண்டு நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்





### அமரர் நாகமுத்து துரைச்சாமி

அன்போடும் பாசத்தோடும் எமை வளர்த்து
அறிவூட்டி ஆளாக்கி வைத்தாய் அப்பா
இன்றோடு பதினேழு ஆண்டுகள் கழிந்தாலும்
இருக்கின்றீர் எங்கள் இதயமதில் என்றும் அப்பா
எங்களின் செயல்கள் ஒவ்வொன்றிலும் இருந்து
வழிகாட்டும் துணை நீதான் அப்பா!

### அமரர் துரைச்சாமி பூரணம்

பாலூட்டிச் சீராட்டி வளர்த்தாய் அம்மா
பாரினிலே சிறப்பாக வாழவைத்தாய் அம்மா
இடைநடுவில் எங்களைத் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றாயோ எங்கள் அம்மா
ஏங்கித் தவிக்கின்றோம் உமைப் பிரிந்து
இனி எமக்கு ஆறுதல் யார்தான் உளரோ!

வன்னிச்சியம்மன் கோவிலடி,
வல்வெட்டி.

(19692)(2-6-9)

எமது அன்னையின் மறைவுச்செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் வெளியூரிலுள்ள எமது உறவுகளோடு துயர் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் நன்றிகூறிக்கொள்வதுடன், இவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (23.06.2012) சனிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் இவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து இவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## சுஜானாஸ் ரெக்ஸ் ரைலஸ்

இல.544 B, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள "சுயவிருப்பத் தெரிவு" முறையிலான எமது ஆடையகத்தில் ஆண்களுக்கான கோட் சூட், ரவுசர், சேட், பெண்களுக்கான சல்வார், சாறிபிளவுஸ்,ஸ்கேட் ஆகியன சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- 021 222 5843, 0772365603

(19683) (2-6-9)

## இலவச கண் பரிசோதனை முகாம்

(விழிவெண்படலத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கானது)

கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் S.குகதாசன் அவர்களால் மேற்கொள்ளப்படும் கண் பரிசோதனை முகாமில் தெரிவு செய்யப்படும் விழிவெண்படலத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு லண்டன் மாநகரிலிருந்து வருகை தரும் கண் சத்திர சிகிச்சை நிபுணர்களால் முற்றிலும் இலவசமாகக் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும்.

காலம் : 24.06.2012 காலை 7.00 மணி

இடம் : தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் (காரைநகர் இந்துக்கல்லூரி)

திருநெல்வேலி வட்ட
லயன்ஸ் கழகம்

குறிப்பு: சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி 12.08.2012

மேற்படி கண் பரிசோதனை முகாம் 01.07.2012 அன்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.

(19625) (6,9,10)

## சரவணா ரெக்ஸ்



**வாடிக்கையாளருக்கான விசேட சலுகை**

இந்தியாவில் இருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட
Special OFFICE WARE
பஞ்சாபித்துணிகள் சாறிகள்
இந்தியா விலைக்கே

**இடம் - சரவணாரெக்ஸ் களஞ்சிய சாலை**
**சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்**





**கையிருப்பு உள்ளவரை**
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை
1 சில்க் சாறி- 500/=
1 கொட்டன் சாறி- 500/=

* இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள் - 1500/=
* இந்தியன் பட்டுச் சாறிகள் - (Full work) 3000/=
* இந்தியன் சூங்குடி வோயில் சாறிகள் - 1000/=
* ஜப்பான் சில்க் சாறிகள்
* இந்தியன் பன்சி சாறிகள் மற்றும் பாகிஸ்தான் பஞ்சாபித்துணிகள், சில்க் பஞ்சாபித் துணிகள், கொட்டன் பஞ்சாபித் துணிகள் மற்றும் ரெடிமேற் பஞ்சாபிகள்
* இந்தியன் ரெடிமேற் பஞ்சாபி - 2000/=

மற்றும் விதவிதமான சாறித் தெரிவுகள்

**விடுமுறை நாள்களிலும் வியாபாரம் நடைபெறும்**

(சி/955) (2-6-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
1940 * 10 * 21



மறைவு
2012 * 05 * 24

### திருமதி புவனேஸ்வரி கந்தசாமி

திதி: சதுர்த்தி

24.05.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த முருகேசு கந்தசாமி (ஓய்வுபெற்ற பிராந்திய மருந்தாளர் - RDHS) அவர்களின் அன்பு மனைவியும், எமது தாயாருமாகிய அமரர் திருமதி புவனேஸ்வரி கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 21ஆம் திகதி கீரிமலையில் நடைபெற்று இன்று (23.06.2012) சனிக்கிழமை வீட்டுக்கிருத்தியம் மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்தபோது அம்மாவுக்கு அன்புடனும் அக்கறையுடனும் சிகிச்சையளித்த அவசரசிகிச்சைப்பிரிவு மற்றும் விடுதி வைத்தியர்கள், தாதியர்கள், எமது தாயாரை எம்முடன் நின்று பராமரித்த நாகம்மா அம்மா, வைத்தியசாலை ஊழியர்கள், நண்பர்களுக்கும், பிரிவுச் செய்தி கேட்டு உடன் நேரில் வந்து உதவியோர், அஞ்சலி பிரசுரம், மலர்வளையங்கள் மூலம் மரியாதை செய்தோர், நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமக்கு ஆறுதல் கூறிய உள்ளூர், வெளியூர் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

96, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(19628) (6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் 1½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
(கோயிலுக்கு மிக அருகில்) தரகர் தேவையில்லை.

**T.P : 0044 7448841466**

(சி/874)(6-8-14)

## ஆனைமுகன் தேங்காய் எண்ணை ஆலை

தேங்காய் கொப்பறாக்கள் எண்ணெய் ஆக்கி கொடுக்கப்படும்.
தொடர்பு: ஆனைமுகன் ஆலை கே.கே.எஸ். வீதி, இணுவில்.
தொ.பே. 0776081693. தேங்காய் கொப்பறாக்கள் விலைக்கு வாங்கப்படும்.

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

வசந்தம் தொலைக்காட்சியின் சமூகப் பணியில் ஒன்றாக நாளை ஞாயிற்றுக்கிழமை முற்றிலும் இலவசமான மருத்துவ முகாம் ஒன்று நெல்லியடி மத்திய கல்லூரியில் காலை 8.30 முதல் மாலை 4.30 மணி வரை நடத்தப்படவுள்ளது.

அதில் இலவச கண் பரிசோதனை செய்யப்படுவதோடு மூக்குக் கண்ணாடியும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதன்போது அடையாளம் காணப்படும் நோயாளர்களுக்கு இலவச கண் சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்படும்.

பற்சோதனை மற்றும் சிகிச்சை, நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்றவற்றுக்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசந்தம் தொலைக்காட்சியின் சமூகப் பணியாக மேற்கொள்ளப்படும் இந்த இலவச மருத்துவ முகாமில் கலந்துகொண்டு அனைவரும் பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# கல்விச் சுற்றுலா

பருத்தித்துறை, ஜூன் 23

விசேட கல்வியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடமராட்சிக் கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவினரால் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கு கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கல்விச் சுற்றுலா இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது. விசேட தேவையுடைய மாணவர்களுடன் பாடசாலை ரீதியாக ஓர் ஆசிரியரும், பெற்றோரும் இந்தக் கல்விச் சுற்றுலாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(வ-190)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் **மகேந்திரன் நிரஞ்சன்** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சிவசுப்பிரமணியம் மகேந்திரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

நலன் புரிச்சங்கம் **பிரதேச செயலகம், உடுவில்.**

(இ/956) (45.6.9)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தியாகராஜா குமாரசாமி

**(இளைப்பாறிய தபால் அதிபர்)**



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தியாகராஜா குமாரசாமி (V.T.K.) கடந்த (16.06.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், மேரிரோஸின் அன்புக் கணவரும் கருணாநிதி, சாந்த குமார், கேசவன் மற்றும் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசானா, சந்தரேனு ஆகியோரின் அன்பு மாமனும், இராஜேஸ்வரி, இரத்தினசாமி மற்றும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி, கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/7, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (19637) (34-14)

தகவல்:
V.T. இரத்தினசாமி

## மகேஸ்வரியின் இதய அஞ்சலி



எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை திருமதி மேகலா இராஜேந்திரனின் அன்புத்தந்தை

**அருணாசலம் கோபாலரத்தினம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

(19695)(6-8-9)

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும் ரொட்விலர் ஆண்நாயும் பொமேரியன் ஆண், பெண், நாயும் 45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும் அல்சேசன் குட்டிகளும், பொக்கட்ஸ் பெனியர் ஆண்,பெண் குட்டிகளும் மணிதாரா, வண்டம், விற்பனைக்குண்டு.
தொடர்பு: லி.மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன் பாக பூதராயார் கோயிலடி, டயலொக் ரவர் அருகில்

(19636) (15-14)

## கட்டில்கள் விற்பனைக்கு

முதிரை, தேக்கு, இரும்பால் செய்யப் பட்ட 6/4, 6/3 கட்டில்கள் மெத்தைகள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0779361427

(19639) (15-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும் மன்ற சேமிப்புத் திட்ட கணக்கின் உறுப்பினருமான கு. தேவதாஸ் (உரிமையாளர்- சிறி நகை தொழிலகம், சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவி

திருமதி **தேவதாஸ் கோகுலராணி**

அவர்கள் கடந்த (21.06.2012) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் மறைவுக்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

(இ/9329) (45.6.9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## மணமகள் தேவை

32 வயதுடைய மணமகனுக்கு
25 - 28 வயதுக்குட்பட்ட வெளிநாட்டில் குடியுரிமை பெற்ற மணமகளைத் தேடுகிறார்.
சூ. கிருஸ்ணமேனன்
73, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(19691) (45.6.9)

## விற்பனைக்கு

அரிசி ஆலைக்குரிய இயந்திரங்கள், இசுசு (பிக்கப்) வாகனம், கண்ணாடி இணைப்புக்கள், கண்ணாடி அலுமாரி, மரத்தளபாடங்கள் பாவித்த CD க்கள், DVD பிளையர், கசற் றெக்கோடர் ஆகியவை விற்பனைக்குண்டு

பார்வையிடும் நேரம் 8.30 - 6.00

ஸ்ரீமின் 303, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி  தொடர்பு : 075 0428440

(19833)(6-8-14)

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

# SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## Administrative Assistant (Jaffna)

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is a federal enterprise with worldwide operations. It supports the German Government in international cooperation for sustainable development and in international education work. GIZ supports GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. GIZ ensures that its solutions are innovative, humanitarian and economically viable and sustainable in the long term.

The Performance Improvement Project (PIP) was set up in 2003 and supports public service, especially local government, in the Northern and Eastern Provinces. It improves their skills in good governance, planning, management, service delivery, coordination and communication.

GIZ-PIP invites applications from dynamic and committed professionals for the position of Administrative Assistant for immediate recruitment.

**Required qualifications, competences/skills and experience**

- Diploma from a secretarial school or higher;
- 2+ years of increasingly progressive responsibility in secretarial/administrative field preferably in the public sector, local government, non-Governmental sector or International Organizations;
- Work with a high degree of independence and excellent interpersonal skills and customer service skills;
- Organize own work, set priorities and meet critical deadlines, and communicate to interact effectively with co-workers, management and project colleagues;
- Strong computer Skills (Ms office);
- Excellent command of English and Tamil both verbally and in writing.

**Responsibilities:**

- Responsible for all secretarial work of the LG Advisor;
- Support the administrative work of the LG unit including preparation, printing and dissemination of documentation;
- Assist with planning and organization of LG events;
- Liaise with Office Administrator to collate and maintain LG records both print and electronic;
- Support LG International Consultant visits;

The detailed job description can be obtained from **thakshayani@pip.lk**

Qualified and eligible **female candidates** are strongly encouraged to apply.

Qualified applicants must submit a covering letter and an updated CV including email & telephone contacts of two professional referees to **thakshayani@pip.lk** or by mail to "The Office Manager, GIZ **Performance Improvement Project, 114A Temple Road, Nallur, Jaffna, before cob 29 June 2012.**

*We thank all applicants but only the short listed candidates will be contacted.*

(சி-875)

## பணிநிலை வெற்றிடம்

எழுதுவினைஞர் (Clerk)

நிர்வாக உதவியாளர்

சிற்றூழியர்

நேர்முகத்தேர்வு :
25.06.2012 திங்கள்
மு.ப 09.00 மணி - பி.ப 02.00 மணிவரை
(சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்)

ANDRA Digital Image
379/167, Kasthuriyar Road, Jaffna.
021 7201264 , 0776622981

(சி-960)

## கணினி மலிவு விற்பனை

**IBM 3.2 GHz Full Set (LCD Monitor)**
அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும்



**Free: Web Cam/4GB Pendrive / Head Phone** 24,750/=

ஒரு வருட உத்தரவாதம்

**St. Antony's.com**
**187, K.K.S. Road, Jaffna. 222 4865 / 0750698608**
(சத்திரசந்திக்கு அருகில்)
**Digital Camara, Computer Repair**

(சி/959)

## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்து



*23.06.2012*

### கந்தையா இந்திராணி

கைதடி வடக்கைச் சேர்ந்த கந்தையா இந்திராணி தனது 60 ஆவது பிறந்த தினத்தை இன்று (23.06.2012) சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:**

கணவர் : கந்தையா, மகன் : கிருபதாஸ் (கிருபன்), மகள் : டஸனி (சுபிதா)
மருமக்கள் : தயாநிதி (நிதி), முருகானந்தம் (ராஜன்),
பேரப்பிள்ளைகள் : டெனுசியா (டெனு), நிக்சொன் (நிக்), சனோஸ்
சகோதரர்கள் : வாமதேவன் குடும்பம் (சுவிஸ்),மணி குடும்பம் (டென்மார்க்),
சத்தி குடும்பம் (கைதடி),
பெறாமகள் : கவிதா குடும்பம் (சுவிஸ்)

(சி-958)(14.34)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சனத், முரளிகள் உருவாகுவர்

## அரவிந்த டி சில்வா நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணத்தில் இருந்து எதிர்காலத்தில் முத்தையா முரளிதரன், சனத் ஜெயசூரியா போன்ற சிறந்த வீரர்கள் உருவாகுவர். அதற்கு பயிற்சி முகாம்கள் சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் என்று நம்புகிறேன். - இவ்வாறு தெரிவித்தார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும், அரவிந்த டி சில்வா அறநிதியத்தின் பணிப்பாளருமான அரவிந்த டி சில்வா.

கொக்கோ கோலா நிறுவனமும், அரவிந்த டி சில்வா கிரிக்கெட் அறநிதியத்தினரும் இணைந்து இலங்கை முழுதும் கிரிக்கெட் பயிற்சி முகாம்களை நடத்தி வருகின்றனர். இதன் ஓர் அங்கமாக யாழ். மாவட்டத்தில் வடமாகாண வீரர்களுக்கான 3 நாள்களைக் கொண்ட பயிற்சி முகாம் நேற்று ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போதே அரவிந்த டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது அமைப்பினூடாக யாழ். மாவட்டத்தில் 2008ஆம் ஆண்டு பருவகாலத்தில் முதற்கட்டப் பயிற்சி முகாமை நடத்தி இருந்தோம். அதன்




பின்னர் யாழ்ப்பாணத்தில் அடுத்த கட்ட பயிற்சி முகாமை நடத்துவதில் நீண்டகாலமாக தடங்கல் நிலவியது. இந்த இடைப்பட்ட காலத்தில் ஏராளமான இளைய வீரர்களும், கிரிக்கெட் ஆர்வலர்களும் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தமது ஆற்றல்களை வளர்க்க அடுத்த பயிற்சி முகாமை எப்போது நடத்துவீர்கள் என்று கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

அவர்களின் கோரிக்கை நடைமுறைக்கு வர இப்போது தான் நேரம் கனிந்திருக்கிறது. இந்தப் பயிற்சி முகாம் சிறப்பாக நடத்துவதற்கு இராணுவத்தினரும் ஆதரவை வழங்கியுள்ளார்கள். பயிற்சி முகாமின்போது தமது ஆற்றல்களை வளர்த்து அடுத்த கட்டம் நோக்கி முன்னேறுவதற்கு யாழ். வீரர்கள் அர்ப்பணிப்புடன் கலந்துகொள்ள வேண்டும். இத்தகைய பண்பின் மூலம் பயிற்சி முகாமில் வழங்கப்படும் சகல பயிற்சிகளையும் கற்று உச்சப்பயனடைந்து தேசிய அணியில் கூட இடம் பிடிக்க முடியும்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து முத்தையா முரளிதரன், சனத்ஜெயசூரியா போன்ற திறமையான கிரிக்கெட் வீரர்கள் உருவாவது திண்ணம். சென்றமுறை நடைபெற்ற பயிற்சிமுகாமில் கலந்துகொண்ட இளம் வீரர்களின் கண்களில் தெரிந்த தன்னம்பிக்கை இதை எனக்கு உணர்த்தியது. இந்த மண்ணின் வீரர்கள் தேசிய ரீதியில் சாதிக்கும் அளவுக்கு உயர இது போன்ற பயிற்சி முகாம்கள் பேருதவியாக அமையும் - என்றார். (ங-5-23)

## தீவுகளுக்கான வெற்றிக் கிண்ணம் இறுதி இன்று

பண்டத்தரிப்பு, ஜூன் 23

வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் ஐயனார் சன சமூக நிலையம், ஐயனார் விளையாட்டுக் கழகம் என்பவற்றின் 64வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் ''தீவுகளுக்கான வெற்றிக் கிண்ணத்துக்கான'' மாபெரும் உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதிப்போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. பின்னர் அரையிறுதிப் போட்டிகளைத் தொடர்ந்து இன்று மாலை 4 மணிக்கு சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது. (ங-130-41)

## சமபோஷ உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், 'சமபோஷ'வின் அனுசரணையுடன் யாழ், மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே 13வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆட்டங்கள் இன்று காலை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (ங-23)

# வடமாகாண வலைப்பந்தாட்டம் நாளைமறுதினம் ஆரம்பம்

வலி. வடக்கு, ஜூன் 23

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15, 17, 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளைமறுதினம் 24ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.



இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா குளவிசுட்டான் மகா வித்தியாலயம்.

மன்னார் சென். யோசேப்வாச் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு ஐயன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி வித்தியாலயம் எதிர் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென். ஆன்ஸ் மகா வித்தியாலயம்.

யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து முல்லைத்தீவு மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

**17 வயதுப் பிரிவு**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம்.

மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி எதிர் மன்னார் சென். சேவியர் மகளிர் கல்லூரி.

முல்லைத்திவு ஐயன் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எதிர் வவுனியா தாரணிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

மன்னார் சென். யோசேப் வாஸ் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி.

கிளிநொச்சி அக்கராயன் குளம் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயம்.

யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து முல்லைத்தீவு முள்ளியவளை மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

**19 வயதுப் பிரிவு**

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் யாழ்ப்பாணம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி.

மன்னார் ஆண்டான் குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு ஐயன்குளம் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென். லூசியஸ் மகா வித்தியாலயம்.

வவுனியா தவசிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி எதிர் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி.

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயம் எதிர் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு உடையார் கட்டு மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து கடந்தாண்டு மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மோதவுள்ளது. (ங-86)

# ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரியில் நூற்றாண்டு விழா அஞ்சலோட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட 12 பாடசாலைகள் கலந்துகொள்ளும் அஞ்சலோட்ட நிகழ்வு இன்று காலை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளே இந்த அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. 17 வயது மற்றும் 19 வயது ஆகிய இரு பிரிவுகளாக இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (ங)

# வடமாகாண 15 வயதுப் பிரிவு கரப்பந்து; உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 23

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் கடந்த வருடம் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றிருந்தன. இந்த நிலையில் இந்த முறை இரு அணிகளும் சம்பியன் கிண்ணத்தை அடைவதற்காக கடுமையாக மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதிக் கொண்டதால் போட்டி மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி தன்வசமாக்கி, இலகுவான வெற்றியைப் பெற்று மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங-86)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அசத்துகிறது இலங்கை



பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்டின் முதலாவது நாளில் இலங்கை அணியின் சார்பில் சங்ககார, டில்ஷான் சதம் அடித்து அசத்த இலங்கை அணி ஆட்ட நேர நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. பாகிஸ்தானின் பந்து வீச்சும் எந்த வகையிலும் நேற்றைய தினம் சோபிக்கவில்லை.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் அணி விளையாடி வருகின்றது. மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் நேற்றைய தினம் ஆரம்பமானது. பாகிஸ்தான் அணி சார்பில் மிஷ்பா உல் ஹக் தடை காரணமாக விலக, ஹபீஸ் அணித்தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பரணவிதாரன, டில்ஷான் களமிறங்கினர். இந்த ஜோடி இலங்கை அணிக்கு சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. எந்தவொரு சந்தர்பத்தையும் பாகிஸ்தானுக்கு வழங்காமல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி முதலாவது இலக்குக்கு 50 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டது. தொடர்ந்து அஜ்மலின் பந்து வீச்சில் அதிரடியாக ஆட முற்பட்ட பரணவிதாரன பவுண்டரி விளாசினார். அடுத்த பந்திலேயே சுதாகரித்துப் பந்து வீசிய அஜ்மல், பரணவிதாரனவை 24 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்ப இலங்கை 63 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கைப் பறிகொடுத்தது.

தொடர்ந்து, டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பறிகொடுத்தவரும் அண்மைக்காலமாக டெஸ்ட் ஆட்டங்களில் பிரகாசிக்கத் தவறிவரும் சங்ககார களமிறங்கினார். சங்கா, டில்ஷான் ஜோடி இலங்கை அணியின் அடித்தளத்தை மேலும் பலமாக்கியது. இருவரும் பாகிஸ்தானிய பந்து வீச்சை பொறுமையாகக் கையாண்டு ஓட்டங்களைக் குவித்தனர். தொடர் சரிவுகளுக்குட்பட்ட சங்கா, ஒரு நாள் தொடரில் சாதித்ததைப் போல டெஸ்டிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி பாகிஸ்தானுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய டில்ஷான் 175 பந்துகளில் 13 ஆவது சதத்தைக் கடந்தார். சதம் கடந்த அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே அஜ்மலின் சுழலில் பவிலியன் திரும்பினார். இரண்டாவது இலக்குக்காக 124 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டில்ஷான் 101 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன களமிறங்கினார்.

மஹேல ஆரம்பத்தில் பொறுமையாக ஆடினார். பின்னர் அதிரடியாக பவுண்டரிகள் வெளுத்தார். மறு முனையில் சங்கா தனது வழமையான பாணியில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி 159 பந்துகளில் தனது 29 ஆவது சதத்தை விளாசினார். இதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கு எதிராக அதிக சதங்களைக் குவித்த அரவிந்த டி சில்வாவின் சாதனையை (8 சதங்கள்) சமப்படுத்தினார்.


இதன் பின்னர் இலங்கையின் அதிரடி அடங்கியது. ஓட்ட வேகம் மெதுவாகவே அதிகரித்தது. மஹேலவும் இவர்களுக்கு சளைக்காமல் 89 பந்துகளில் தனது 42 ஆவது அரைச் சதத்தைக் கடந்தார்.

முதலாவது நாளில் மிகச் சிறப்பாக விளையாடிய இலங்கை அணி 90 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் சங்ககார 111 ஓட்டங்களுடனும், மஹேல ஜெயவர்தன 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.

(5)



# அரையிறுதிக்குள் நுழைந்தது போர்த்துக்கல்



ஐரோப்பிய கிண்ணத் தொடரில் நேற்று நடந்த முதலாவது காலிறுதி ஆட்டத்தில் ரொனால்டோ அடித்த கோல் மூலம் 1-0 என்ற கோல்கணக்கில் செக்குடியரசு அணியை வீழ்த்திய போர்த்துக்கல் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.


ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் முதல் காலிறுதி ஆட்டம் வார்சா தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த செக்குடியரசு அணி 'பி' பிரிவில் இரண்டாம் இடம் பிடித்த போர்த்துக்கல் அணியுடன் மோதியது. முதல்பாதியில் போர்த்துக்கல் அணி வீரர்கள் மூன்று அருமையான கோல் வாய்ப்புகளை உருவாக்கினார்கள். ஆனால் கோல் அடிக்க முடியவில்லை. இதில் 44 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ அடித்த பந்து செக்குடியரசு கோல்கம்பத்தில் பட்டு வெளியேறியது போர்த்துக்கல் அணிக்கு துரதிருஷ்டவசமானது. முதல்பாதியில் 40 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் 'ஸ்டிரைக்கர்' ஹெல்டர் போஸ்டிங்கா தசைபிடிப்புக் காரணமாக வெளியேற அவருக்குப் பதிலாக அல்மிடியா களம் இறக்கப்பட்டார். கோல் எதுவும் விழாமல் முதல்பாதி முடிந்தது.

பிற்பாதியில் 79 ஆவது நிமிடத்தில் முட்டின் ஹோ மைதானத்தின் வலதுபுறத்தில் இருந்து 'கிராஸ்' செய்த பந்தை ரொனால்டோ தலையால் முட்ட மின்னல்வேகத்தில் பந்து கோல் கம்பத்துக்குள் புகுந்தது. இந்த யூரோ தொடரில் ரொனால்டோ அடித்த 3 ஆவது கோல் இதுவாகும். இதன் மூலம் போர்த்துக்கல் 1-0 என்று முன்னிலை பெற்றது. இதன்பிறகு வேறு கோல்கள் விழவில்லை. ஆட்ட நேரஇறுதியில் போர்த்துக்கல் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 12.15 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் கிரீஸ்-ஜேர்மனி மோதியது. இதில் வெற்றி பெறும் அணியுடன் போர்த்துக்கல் அரையிறுதியில் மோதும்.

(5)

# ஷாருக் மீது வழக்குப் பதிவு



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் இந்த ஆண்டு இடம்பெற்ற தொடரின் போது மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளரும், பொலிவுட் நடிகருமான ஷாருக்கான் குடித்து விட்டு ரகளை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குடிபோதையில் இருந்ததால் மைதானத்தின் வாசலில் நின்ற பாதுகாவலர் அவரைத் தடுத்தார். இதனால் பாதுகாவலரை கடுமையாகக் கண்டித்தார். இது சம்பந்தமான ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இதையடுத்து கிரிக்கெட் குழு அவசரமாகக் கூடி ஷாருக்கானை கண்டித்ததுடன், வான்கடே மைதானத்தில் நுழைய அவருக்கு 5 ஆண்டுகள் தடையும் விதித்தது.

ஐ.பி.எல். தொடர் முடிந்து பல நாட்கள் ஆகியும் இந்தப் பிரச்சினைகள் ஷாருக்கானை விட்டு விலகவில்லை. அவர் மீது தற்போது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வான்கடே மைதானத்தில் ஷாருக்கான் அவமரியாதையாக நடந்ததற்காக அவரை தண்டிக்க வேண்டும் என்று சட்டத்தரணியும், சமூக சேவகருமான இந்திரஜித் சிங் பாட்டியா மத்தியப்பிரதேச நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்துள்ளார்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடு பிடித்த ரென்னிஸ் முடிவுக்கு வருகிறது

ஒரு வாரத்துக்கும் மேலாக நீடித்து வந்த பிரச்சினைக்கு முடிவு கிடைத்துள்ளது. லண்டன் ஒலிம்பிக்கில் பயஸ்-விஷ்ணுவர்தன், பூபதி-போபண்ணா என்று, இரண்டு ஜோடி பங்கேற்கவுள்ளதாக அகில இந்திய ரென்னிஸ் சங்கம் (ஏ.ஐ.டி.ஏ.,) முடிவு செய்துள்ளது.

லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய ரென்னிஸ் வீரர்கள் தேர்வு, இந்த முறை பிரச்சினையாக போனது. லியண்டர் பயசுடன் இணைந்து மகேஷ் பூபதி விளையாடுவார் என்று, ஏ.ஐ.டி.ஏ., முதலில் அறிவித்தது. இதை ஏற்க முடியாது என்று பூபதி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பூபதி வேண்டாம் என்றால் ரோகன் போபண்ணாவுடன் விளையாடத் தயார், என்று பயஸ் தெரிவிக்க, போபண்ணாவும் மறுத்தார். பின்னர், மத்திய விளையாட்டு அமைச்சர் அஜய் மேகனைத் தலையிடுமாறு கேட்டுக்கொண்டார் பூபதி. வீரர்கள் தேர்வு விடயத்தில் தலையிட முடியாது, என்று அஜய் மேகனும் ஒதுங்கினார்.

தரவரிசையில் பின்தங்கிய விஷ்ணு வர்தன், யூகி பாம்ப்ரி போன்ற இளைய வீரர்களுடன் விளையாட முடியாது. தொடர்ந்து வற்புறுத்தினால் ஒலிம்பிக்கில் இருந்து விலகுவேன், என்று தன் பங்கிற்கு திடீரென மிரட்டினார் பயஸ்.

ரென்னிஸ் வீரர்களைத் தேர்வு செய்ய கடைசி நாள் நேற்று. பூபதி, போபண்ணாவை சமாதானப் படுத்தும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. வேறு வழியின்றி இரண்டு ஜோடி செல்லலாம் என்று அறிவித்துள்ளது. இதுகுறித்து ஏ.ஐ.டி.ஏ., தலைவர் அனில் கண்ணா கூறியதாவது:

அனைத்து சூழ்நிலைகளையும் ஆராய்ந்த பின், வேறு வழியின்றி லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு இரு ஜோடிகளை அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் படி பயஸ்-விஷ்ணுவர்தன், பூபதி-போபண்ணா என்று இரு ஜோடி ஒலிம்பிக் செல்கிறது. சோம்தேவ் தேவ்வர்மன் தோள்பட்டை காயத்தில் இருந்து முழுமையாக மீளவில்லை என்பதால் அவரை தேர்வு செய்யவில்லை.

### மதிப்பு உள்ளது

பயஸ் மீது நாங்கள் மதிப்பும், மரியாதையும் வைத்துள்ளோம். அவரது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க மாட்டோம். பூபதி, போபண்ணா பேசியதை, பயஸ் மன்னித்து விட வேண்டும். இவர், தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும். தவிர, முதன் முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ள போபண்ணா, விஷ்ணுவர்தனின் வெற்றிக்கு உதவுமாறும் கேட்டுள்ளோம்.

இந்தியாவின் முதல்தர வீரர் பயஸ். இந்தியாவுக்காக டேவிஸ் கிண்ண போட்டிகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பங்கேற்றுள்ள இவருக்கு, இது ஏற்றுக் கொள்ள முடியாத முடிவு என்பதில் சந்தேகம் இல்லை. இதனால், பயஸ் ஏமாற்றம் அடைய மாட்டார் என்று உறுதியாக நம்புகிறோம்.

### பாம்ப்ரி பாய்ச்சல்

இளைய வீரர்களுடன் விளையாட முடியாது என்ற லியண்டர் பயஸ் முடிவு குறித்து இந்திய இளம் வீரர் யூகி பாம்ப்ரி கூறுகையில், 1992 இல் பயஸ் வயது 19. அப்போதைய மூத்த வீரர் ரமேஷ் கிருஷ்ணன், பயசை சேர்த்துக் கொண்டு தான், பார்சிலோனா ஒலிம்பிக் இரட்டையர் போட்டியில் பங்கேற்றார். அப்படியென்றால் ரமேஷ் கிருஷ்ணன் செய்தது தவறா. இப்போது பயஸ் இப்படி கூறுவது துரதிர்ஷ்ட வசமானது, என்றார்.

### வரவேற்பும், எதிர்ப்பும்

ஏ.ஐ.டி.ஏ., முடிவு பயசுக்கு ஏமாற்றமாக இருக்கும். அதிக உணர்ச்சி வசப்படக் கூடிய பயஸ், அடுத்து என்ன செய்வார் என்று, கணிப்பது கடினம். நாட்டுக்காக விளையாடுவதில் பயஸ் எப்போதுமே சமரசம் செய்து கொண்டுள்ளார். ஆனால் இருவரது மிரட்டல் காரணமாக இந்த முடிவை எடுத்திருப்பது, மற்றவர்களுக்கும் மோசமான முன்னுதாரணம் ஆகிவிடும் என்றார் பயஸின் தந்தை.

இரண்டு அணி செல்வது என்ற ஏ.ஐ.டி.ஏ., முடிவால் நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. பூபதி, போபண்ணா ஜோடி எப்படியும் லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும். அதேநேரம், கலப்பு இரட்டையரில் பயஸுடன், சானியா ஜோடி சேர்வார் என்று அறிவித்து இருப்பது ஏமாற்றம் தருகிறது என்றார் மகேஷ் பூபதியின் தந்தை.

### பூபதி-போபண்ணா ஜோடி இணைந்து வெளியிட்ட அறிக்கை:

கடந்த நான்கு ஒலிம்பிக்கில் பயஸுடன் சேர்ந்து விளையாடியும், பதக்கம் வெல்ல முடியவில்லை. புதிதாக ஜோடி சேர்ந்தால் ஒருவேளை சாதிக்கலாம் என்று தான் போபண்ணாவுடன் இணைந்தேன். எங்களது முடிவில் உறுதியாக இருந்தோம். கடைசியில், 30 ஆவது ஒலிம்பிக் போட்டியில் எங்களையும் ஒரு ஜோடியாகத் தேர்வு செய்தது மகிழ்ச்சி. இனி, எங்களது கவனம் முழுவதும் பயிற்சியில் தான் இருக்கும். கலப்பு இரட்டையரில் சானியாவுடன் பயஸ் விளையாடுவார் என்ற அறிவிப்பு குறித்து இப்போது எதுவும் சொல்ல முடியாது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

(5)


**AAT கற்கை நெறியை பூர்த்தி செய்தோர்க்கு**

**AAT** கற்கை நெறியை பூர்த்தி செய்தோருக்கு **CIMA-UK CBA** கற்கை நெறியிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டணங்களும் 50% ஆல் குறைக்கப் பட்டுள்ளது. குறுகிய காலத்திற்கே இச் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளதால், உங்கள் **AAT** சான்றிதழ்களுடன் 324, பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள **MCS** .CIMA Listed College க்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

இணைப்பாளர்
(சி-961)(6.14.34) **CIMA@MCS** 772 395 895

**சிறுவர் கணினிக் கற்கை நெறிகள்**

Oxford University Press இனால் வெளியிடப்படும் சர்வதேச தரத்திலான கற்கை நெறிகள் தற்போது ESOFT இன் அனுசரணையுடன் புதிய நாவலர் கல்வி நிலையத்தில்.......
Special Offer!
தொடர்புகளுக்கு : 021 222 4142
(சி-957)

**தேவை**

நிறுவனம் ஒன்றில் டீசல் பார ஊர்திகள்
திருத்தனர்- 01
உதவியாளர்- 02
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0779451290, 0719301624

**Engineering-USA** 4,300.Rs Per Module (சி-915) **BIT Degree** 4,800.Rs Per Semester **Diploma** 1,000.Rs Per Course Discount **CIMA UK** 10,000.Rs Per Level Discount
A/L 2012 பரீட்சைக்கு தோற்றுவோரும் கட்டணம் இன்றி விண்ணப்பிக்கலாம்
SMS Your name & Course to 775520940 & Get Schol.
Qualified Lectures panel, 12 Years Experience
மேலதிக விபரங்களுக்கு நேரில் **MCAI CAMPUS** Supported by Jaffna Computer Society
கல்வியங்காட்டில் 243,Adiyapatham Road Bus Route 750 / 751

**BIT Degree** தொடர்ந்து 10 வருடங்களாக BIT பட்டக்கற்கை நெறியில் முன்னணியில்...
Earn IT Degree from University of Colombo
By R.Kumaran-B.Sc. TP: 0776577359 (19438)
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன
74, சபாபதி லேன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீதியிலிருந்து 200 m
**MIS BIT Academy**

**நீங்கள் ஓர் ஆங்கில ஆசிரியரா/ ஆங்கில ஆசிரியராக விரும்புபவரா?**

எமது நிறுவன ஆங்கில பேச்சுக்கலை (Elocution) நிகழ்ச்சித்திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து ஆர்வமுடையோரை வரவேற்கின்றோம்.
நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவாவோருக்கு 3 மாதகாலப் பயிற்சின் பின்னர் மதிப்பீட்டின் மூலம் வேலைக்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி : 30.06.2012
Spectra Skills
No:19, Stanley Road, (People's Bank 2nd Floor) Jaffna
T.P: 0212221422 / 1423
E-mail:jaffna@spectraskills.com
(19685)(6,14,10)

**பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்**
23.06.2012



உயர் திரு. முத்தையா - உதயசங்கர்
(SLPS - 2 - I)
ஆசிரியராய் அதிபராய் உதவிக் கல்விப் பணிப்பாளராய்
முல்லை புகழொடும் திகழ்ந்த உத்தமரே
தடம் பல பதித்த தனயரே
தங்களை வாழ்த்துகின்றோம்
நீடூழி வாழ்க வாழ்கவென
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/ உண்ணாப்புலவு த.வி.
பொன்னகர், முள்ளியவளை.

**UK Visas & Appeals**
Entry Clearance Visa
Student Visa
Student Visitors Visa
Settlement Visa
Business Visa
Entrepreneurs Visa
PBS Visa
And all Appeals
KILC
90 High Street, Colliers Wood, London SW19 2BT
Tel: +44 20 8542 8222
Fax: +44 20 8542 8666
Email: kilc_work@yahoo.co.uk
(19629)(6.14.34)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி-யாழ்ப்பாணம்
A/L 2013
வணிகக் கல்வியும் வணிகமுகாமையும்
வினாவிடை வகுப்பு
சனி, ஞாயிறு
7-9 A.M
V.முரளி
B.BA (FM.Spl)

**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா ஆலோசனை**

புதிய நிபந்தனைகளுக்கு அமைவாக மீண்டும் இன்று முதல் எம்மிடம் சட்டரீதியான உள்ளதை, உள்ளபடியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
திசைகாட்டி பிறைவேற் லிமிடெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக்காரியாலயம்
37,சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 2219016
22A, Frankfort Place, Bampalapiti
T.P. 0112508443,
504,Hampton Street,,
Melborn, Australia.
Land Line:- 0061390437100
(19689)(6.14.34)



**வெல்லுங்கள் பரிசு**
சண்மைக்ரோ சிஸ்ரம் நிறுவனத்தை வாங்கிய நிறுவனம்?
a.மைக்ரோசொப்ற் b.ஓராக்கிள் c.எச்.பி d.ஐ.பி.எம்.
விடைகளை MCAI12 a/b/c/d _<your Full name>, <address> <E mail> என்பவற்றை type செய்து 0775520940 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி வைக்கவும்.
1ம் பரிசு : Computer (Without Monitor)
2ம் பரிசு : 17" LCD Monitor
3ம் பரிசு : 20 பேருக்கு தலா ஒவ்வொருவருக்கும் ரூபா 1,000 கணினி பொருட்கள்.
மேலும் 1000 ஆறுதல் பரிசுகள். Click http://www.facebook.com/mcai.campus.3
வெல்லுங்கள் பரிசு போட்டிக்கு யாரும் பங்குபற்றலாம், சேர்த்துக்கொள்ளப்படுவோர் 31.07 2012 க்கு முன்னர் MCAI CAMPUS ல் ஏதாவது கற்கைநெறிக்கு பதிவுசெய்திருத்தல் வேண்டும். (சி-952)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பயத்தை வெளியே காட்டினால் அபாயத்தை எதிர்கொண்டு அழைப்பதாகும்.
-செஸ்டர்ஃபீல்டு-



வார வசந்தம் 01

உதயன் 23 ஜூன் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

■ வலையவன்

# போர்ஹேவின் விநோத விலங்குகள்

1

தத்துவத்தின் வரலாற்றிலிருந்து ஒரு காட்சிப் பொருளைப் பற்றி நான் விவாதிக்கவில்லை. போர்ஹேவின் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரையிலான உலக இலக்கிய வரலாற்றின் அகராதிகள் பெரும் ஈர்ப்பினை படைப்பாளிகளுக்கு அளித்து வந்திருக்கின்ற விஷயம் உறுதிப்படுகிறது. ஆங்கிலத்தின் முதல் அகராதித் தொகுப்பாளர் அல்லது லெக்ஸிகோகிராபர் (Lexicographer) டாக்டர் சாமுவெல் ஜான்சன். கவிஞர், விமர்சகர். கடும் சிரமங்களுக்கிடையே தனி ஆளாக அவர் ஆங்கிலத்தின் முதல் அகராதியைத் தொகுத்தார்.

அகராதியின் மூலம் இலக்கிய உலகில் பிரபலம் மட்டுமடையவில்லை, சர்சைக்குரியவராகவும் ஆனவர் டாக்டர் ஜான்சன். 21 ஆம் நூற்றாண்டில் ராபர்ட்டோ கலோஸோ (Roberto Calasso) என்கிற இத்தாலியர் ஏறத்தாழ அகராதி வடிவில் புனைகதை எழுதுபவராக இருக்கிறார். ஏற்கனவே மிலோரட் பாவிக் என்பவரின் காஸார்களின் அகராதி (Dictionary of the Kazars) வடிவ பின் நவீனத்துவ புதினம் பற்றிய சிறிய சலசலப்புகள் தமிழ் இலக்கிய உலகில் ஏற்பட்டிருக்கின்றன. ராபர்ட்டோ கலாஸோ இன்று கிரேக்கப் புராணிகத்தை புனைகதையளவுக்கு நிறைவு தரும்படி (The Marriage of Cadmus and Harmony) எழுதுவதற்கும் அவரது மிகச் சமீப நூலான கா (Ka)வில் இந்தியப் புராணிகத்தை புனையளவுக்கு எழுதியிருப்பதற்கும் ஆதர்ச முன்னோடி ஜோர்ஜ் லூயி போர்ஹேவாகத்தான் இருக்க முடியும்.

இந்தச் சமயத்தில் இதுவரை அதிகம் கவனிப்பற்கு உள்ளாகாதிருக்கும் போர்ஹேவின் புத்தகமான கற்பனை விலங்குகளின் நூல் (The Book of Imaginary Beings )பற்றி இங்கு விவாதிப்பது பொருந்தும். ஒரு புதின எழுத்தாளருக்கு அகராதியையோ அல்லது நிகண்டையோ தொகுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்படுகிறது என்ற கேள்வியை எழுப்பிக் கொள்வோமானால் போர்ஹேவின் காஸ்மாபொலிட்டன் கலாசாரம் நம் நினைவுக்கு வரும். அப்படி வந்தாலும் அது போதிய நிறைவளிப்பதாக இருப்பதில்லை. கட்டற்று விரியும் பல் உலகப் புராணிகக் கதைகளை ஒரு அமைவுக்குக் கொண்டுவரும் செயல்பாட்டில் அவர் தன் அறிவுச் சேகரத்திற்கே ஒரு தனிநபரின் கட்டுப்பாட்டினையும் ஒழுங்கினையும் கொண்டு வர முயலும் எத்தனம் தெரிகிறது. மேலும் The Universal History of Infamy என்ற சிறுகதைத் தொகுதியுமே கூட ஒரு விதமான அகராதித்தன்மை நிறைந்ததாய்த் தான் காணப்படுகிறது.

போர்ஹேவின் விலங்குப் பிரபஞ்சத்தில் நிஜ விலங்குகளை விட கற்பனை விலங்குகளுக்கே அதிகப் பிரதானம் தரப்பட்டிருக்கிறது. மேலும் இந்த விலங்குகள் பற்றிய அகராதிக் குறிப்புகள் பெரும்பாலும் கதைகளின் வடிவில் அமைந்திருக்கின்றன.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தின் அனுபந்தத்தைப் படிப்பது போலிருக்கிறது உலுப்பி பற்றிய குறிப்பு. மகாபாரதக் கதையில் அர்ஜுனன் தீர்த்த யாத்திரையின் போது கங்கையில் இறங்கி நீராடிக் கரையேறித் திரும்பும் பொழுது உலுப்பி என்ற நாக கன்னிகை அவனைப் பற்றி இழுத்து அவன் அவளைப் புணர்ந்து மகிழ்விக்க வேண்டுமென்கிறாள்.

பிரம்மச்சரிய விரதத்திலிருக்கும் தான் எப்படி அவ்வாறு செய்ய இயலுமென்று அர்ஜுனன் கேட்கிறான். அவனது விரதமும் கெடாமல் அவள் விருப்பமும் பழுது படாமல் காரியமாகும்படியான உபாயத்தைச் சொல்லச் சொல்லி கேட்கிறான் அர்ஜுனன். அவளைப் புணர்ந்து காமநோயிலிருந்து அவளை ரட்ஷிப்பதென்பதும் ஒரு தர்மம் ஆதலால் அவனது விரதம் கெடாது என்கிறாள் உலுப்பி. அதற்கிணங்கி அன்றிரவு அவளுடன் கழித்து இரவாந் என்கிற மகனையும் அவளிடத்தில் பிறப்பித்துச் செல்கிறான். (மகாபாரதம்-அத்தியாயம்.234). இதில் போர்ஹே கொடுக்காத ஒரே ஒரு தகவல் உலுப்பி மற்றும் அர்ஜுனன் ஆகிய இருவருக்குப் பிறந்த குழந்தையின் பெயர் மாத்திரம்தான்.

தனிமையில், ஒரு அத்தி மரத்தடியில் புத்தர் தியானத்திலிருந்த சமயம் அவரை புயலும் மழையும் வலுகொண்டு தாக்கின. அவரைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு நாகம்(ர்) தன் உடலைக் கொண்டு ஏழு மடக்கு அணைப்பின் மூலம் அவரைச் சுற்றி அரண் அமைத்ததையும் தன் ஏழு தலைகளைக் கொண்டு அவருக்கு குடையளித்ததையும் கண்ட புத்தர் அந்த நாகரைத் தன் நம்பிக்கையின் வழிக்கு மாற்றுகிறார். நாகர்கள் மேகங்களையொத்த பாம்புகள்.

அவர்கள் பாதாளலோகத்து அரண்மனைகளில் வசிப்பவர்கள். புத்தர் மனிதர்களுக்கு ஒரு வித அறங்களையும் இன்னொரு விதமான அறங்களை கடவுளர்களுக்கும் போதித்ததாக நம்பப்படுகிறது. இரண்டாவதாய்ச் சொல்லப்பட்ட ரகசியச் சட்டங்கள் சொர்க்கத்திலும் நாகர்களின் அரண்மனைகளிலும் பாதுகாக்கப்பட்டிருந்தன. நாகர் கள் பல நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு இவற்றை பின்னர் வந்த பிக்குவான நாகார்ஜுனனுக்கு வெளிப்படுத்தினர். அசோகர் கண்டு இடித்துக் கட்ட நினைத்த மற்றொரு நாகர் அரண்மனை பற்றியும் அங்கே அவர் சந்தித்த பிராமணனுடனான உரையாடலும் பதிவாக்கப்பட்டிருக்கிறது. நாகர்கள் பற்றிய இந்தக் கதைகளும் குறிப்புகளும் ஒரே ஒரு பக்கத்தில் போர்ஹேவால் சொல்லப்பட்டிருக்கிறது.

கீழை நாடுகள் போர்ஹேவின் கவனத்தில் ஒரு அகலாத ஆக்கிரமிப்பைச் செய்து வந்திருக்கின்றன. அவற்றில் எகிப்து, இந்தியா, மற்றும் சீனா ஆகிய நாடுகள் பிரத்தியேகமானவை. கீழை நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான உரையாடல் போர்ஹேவைப் பொருத்தவரை திருப்தியற்றதாய் இருக்கிறது. சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மஞ்சள் பட்டுத் துணியால் ஆன புத்தக வைண்டிங் ஒன்றினைத் தொட்டுணர்ந்த கவிஞர் வர்ஜில் அந்த விச்ராந்தியான சீன நாட்டினை கற்பனை மட்டுமே செய்தார். இது தவிர பிளினி எழுதிய இயற்கை விஞ்ஞானம் என்ற நூலில் சீனா பற்றியும், பாரசீகம் பற்றியும், போரஸ் மன்னன் ஆட்சி செய்த இந்தியாவைப் பற்றியும் குறிப்புகள் இருக்கின்றன. பிறகு சிலுவைப் போர்களில் பங்கேற்க வந்தவர்கள் தங்களின் நினைவுகளாக எடுத்துச் சென்ற கீழை நாடுகளின் மனப்பதிவுகள். இதற்கடுத்து மார்க்கோ போலோ. 1704 ஆம் ஆண்டில் ஆயிரத்து ஒரு இரவுகளின் முதல் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்ட பின், ஐரோப்பிய இலக்கியத்தின் ரொமாண்டிக் இலக்கிய கால கட்டத்தின் பொழுது மீண்டும் கீழை நாடுகள் மேற்கு நாடுகளின் பிரக்ஞையை ஆக்கிரமிக்கின்றன. இதில் குறிப்பிடப்பட வேண்டிய இரண்டு பிரதான இலக்கிய ஆசிரியர்கள் கவிஞர் பைரன் மற்றும் விக்டர் ஹியூகோ ஆவர்.



போர்ஹேவின் விலங்குப் பிரபஞ்சத்தில் நிஜ விலங்குகளை விட கற்பனை விலங்குகளுக்கே அதிகப் பிரதானம் தரப்பட்டிருக்கிறது. மேலும் இந்த விலங்குகள் பற்றிய அகராதிக் குறிப்புகள் பெரும்பாலும் கதைகளின் வடிவில் அமைந்திருக்கின்றன.

போர்ஹேவைப் பொருத்தவரை ஆயிரத்து ஒரு இரவுகள் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது எல்லா ஐரோப்பிய இலக்கியங்களுக்கும் ஒரு முக்கிய இலக்கிய நிகழ்வாகும். ஆயிரத்து ஒரு இரவுகள் எழுதியவர் ஒரே ஒரு ஆசிரியராக இருக்க முடியாது. அது பலருடைய கூட்டு இலக்கிய இணைவாகத்தான் இருக்க முடியும். ஆயினும் அந்தத் தனித்தனி ஆசிரியர் எவருமே தான் ஒரு உன்னதமான புத்தகத்தின் கட்டுமானத்தில் உதவுவதாக நினைத்திருக்க மாட்டார்கள்.

போர்ஹேவே குறிப்பிடுகிற மாதிரி ஆயிரத்து ஒரு இரவுகள் கீழைநாடுகளை விட மேற்கு நாடுகளிலேயே அதிகம் சிலாகிக்கப்பட்டு ஏற்கப்பட்டிருக்கிறது. ஆயிரத்து ஒரு இரவுகள் ஒரு எல்லையற்றதும் முடிவுற்றதுமான புத்தகம். அதில்தான் இருக்கிறது அதன் தீராத வசீகரம்.

வருட வரிசையியலும்,வரலாறும் முக்கியமான இரண்டு மேற்கத்திய கருத்துருவாக்கல்கள் அல்லது கண்டுபிடிப்புகளே, இந்தியத் தத்துவ வரலாறுகளையோ, சீன இலக்கிய வரலாறுகளையோ, பாரசீக இலக்கிய வரலாறுகளையோ நாம் பார்க்க முடியாதென்கிறார் போர்ஹே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்கள் கைரேகைகளின் பலன்கள்




**புத்திரேகை குறித்த விபரங்கள் தொடர்கின்றன.**

(புத்திரேகையின் குறைகளும் பலா பலன்களும் தொடர்ச்சி)

8.புத்திரேகை பதிந்தும் நீண்டும் இருப்பின் அகன்ற மனோ விலாசத்தை அது குறிக்கும். நீண்ட புத்தி ரேகையில் எந்தவிதக் குற்றங்குறை காணப்பட்டாலும்





களங்கமற்றே விளங்குவர். புத்திரேகை பதிந்திருக்குமானால் அதற்கு விசேட பலனுண்டு என்பது இதனால் விளங்குகிறது. நீண்ட ரேகை அகன்ற மனோ அளவைக் குறிக்கிறது.

அது நன்கு பதிந்திருக்கும் தன்மை குணத்தைக் காட்டுகிறது. இரேகை நன்கு பதிந்தும் நீளமாயுமிருந்தால் அது நிதானம், ஆழ்ந்த யோசனை இவைகளைக் குறிப்பதாகும். கட்டை விரல் பலத்தும் புத்திரேகை நன்கு பதிந்தும் இருந்தால், அவை அமைதி, நிதானம் முதலியவைகளைக் குறிக்கும். அகலமான கட்டை விரலுக்கு மற்றவர்களைத் தன்வசப்படுத்தும் சக்தியுமுள்ளது. இத்துடன் பதிந்த புத்தி ரேகையும் இருக்குமாயின் தன்னடக்கம் பெரிதும் உண்டாகும். இந்த இரண்டும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள் தாங்கள் எந்தக் காரியத்தில் புகுந்தாலும் அதைச் சரிவர நடத்தி முடித்திடுவர்.

அநேகர் கைகளில் புத்தி ரேகை மெல்லியதாய்க் காணப்படும். மெல்லிய புத்தி ரேகை ஒழுங்காய் அமைந்திராது. அதனால் மூளை பலமற்றது என்று அறியத் தக்கது. மூளையின் சக்தி துரிதமாய் வேலை செய்யாது. புத்திரேகை மெல்லியதாய் இருந்தாலும் அறிவாளியாய் இருப்பர். மனோ வலிமை இராது. நீண்ட நேரம் மூளையைக் கொண்டு வேலை செய்ய முடியாது. எதிலும் விருப்பம் உண்டாகாது. மெல்லிய புத்தி ரேகையைப் பல மெல்லிய ரேகைகள் சூழ்ந்திருந்தால், புத்தியின் வலிமை குன்றும். பெரிய கையில் மெல்லிய புத்தி ரேகை இருந்தால், அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இத்தகையோருக்கு எந்த விஷயமும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாகிவிடும்.

9.மெல்லிய புத்தி ரேகையில் அழுத்தமான ரேகை வெட்டுக் காணப்படில், அது நரம்பின் பலவீனத்தைக் குறிக்கும். இரண்டு கைகளிலும் குறிகள் இருந்தால் அவை நோய் உண்டாவதை ஊர்சிதப்படுத்தும்.

மெல்லிய அகன்ற ரேகை இருந்தால், எந்தக் காரியம் செய்தாலும் அதில் ஊக்கமுண்டாகாது. தன் காரியத்திலும் உறுதியிராது. ஞாபக சக்தியும் குறைவாய்




இருக்கும். சோம்பல் மிகுந்தவர். புத்தி ரேகை இரண்டு கைகளிலும் பரவியிருந்தால், ஆயுள் முழுவதும் பலவீனராகவே காலங்கழிப்பர். எல்லாக் கிரகங்களும் மேன்மையாய் இருந்து புத்தி ரேகை கெட்டிருக்குமானால், இந்த உலகில் இத்தகைய கையை உடையோருக்கு எந்தவித அனுகூலமும் உண்டாகாது.

10. சிலர் கையில் புத்தி ரேகை ஆரம்பத்தில் விரிந்து இலைபோல் படந்து கால அளவில் ஒழுங்காகி விடுகிறது. சீர்பெற்றுள்ள காலத்தில்தான் புத்தி ஊக்கமாகி இருக்கும்.

11. புத்தி ரேகை சங்கிலிபோலிருக்குமாயின், அது நல்லதன்று. அது எடுத்த காரியத்தில் அடுத்தடுத்து தடை ஏற்படுவதைக் குறிக்கும்.சஞ்சலம் இருக்கும்; ஆனால் அடிக்கடி மனம் மாறுதல் அடையும். இத்தகையோர் வாக்கை நம்புவதற்கில்லை. சொன்னபடி நடப்பவரல்லர். அவருக்கு திடுக்கிடும் செய்தி மனோ தடுமாற்றத்தைக் கொடுப்பதால் இன்னும் ஆபத்தானது. தன் நிலைக்குத் திரும்புவது மிகக் கடினம். போதுமான சக்தியுமில்லை.

12.புத்தி ரேகை ஆரம்பத்தில் சங்கிலி போலிருந்து பிறகு செம்மையாய் இருக்குமாயின், கால அளவில் மனத்தின் பலவீனம் நீங்கி வலிமையுடையதாகும். இது திடீரென மாறாது. படிப்படியாகவே புத்தி திடம் பெறும். **(தொடரும்)**

# இந்தியாவுக்கான போராட்டமாக மாற்றுங்கள்

■ எஸ்.வி.ராஜதுரை

சுதந்திர இந்தியாவில் மரண தண்டனைக்கு எதிராக மக்கள் பங்கேற்ற போராட்டங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். தெலுங்கானாப் போராளிகள் 11 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. இதேபோல, கம்யூனிஸ்ட் தலைவர் கே.பி.ஆர்.கோபாலன், பார்வதிபுரம் கொலை வழக்கில் நக்சலைட்டுகள் பூமையா, கிருஷ்ண கௌடா, நாகபூசண் பட்நாயக், காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் மக்பூல்பட் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது போராட்டங்கள் நடந்தன.


இந்தப் போராட்டங்கள் எல்லாவற்றையுமே ஒரு வட்டத்துக்குள் அடக்கிவிடலாம். கம்யூனிஸ்டுகள், நக்சல்கள் அல்லது மனித உரிமை ஆர்வலர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் இவை.

இந்தப் போராட்டங்களை எல்லாம் பட்டியலிடக் காரணம், முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட மூவர் தூக்குத் தண்டனைக்கு எதிராக தமிழகத்தில் நடைபெற்ற போராட்டங்களின் உண்மையான பலம், பலவீனம் என்ன என்பதைத் தமிழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். இந்தியா முழுவதும் மரண தண்டனைக்கு எதிராகப் பொதுமக்களிடையே இந்த அளவுக்கு ஓர் எழுச்சி இதற்கு முன் ஏற்பட்டது இல்லை. ஆனால் அதை நாம் எப்படிப் பயன்படுத்திக்கொண்டோம்? மோசமாகப் பயன்படுத்திக்கொண்டோம்.

**போராட்டங்களை எல்லாம் நான் பட்டியலிடக் காரணம், முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்குத் தூக்குத்தண்டனைக்கு எதிராக தமிழகத்தில் நடைபெற்ற போராட்டங்களின் உண்மையான பலம்.**

எத்தனை நியாயங்களை அடுக்கினாலும் ஓர் உயிரைப் பறிப்பது நியாயமாகாது. நாம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய முதல் செய்தி இதுதான்! அடுத்த செய்தி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு இருக்கும் மூவரும் அப்பாவிகள் என்பதே! எப்படி? அவர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்க அடிப்படையாக இருந்தது அவர்களுடைய வாக்குமூலம். விசாரணை அதிகாரிகளால் சித்திரவதைகளின் மூலம் பெறப்பட்ட இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்திய தண்டனைச் சட்டப்படி யாருக்கும் மரண தண்டனை அளிக்க முடியாது.

அதேசமயம், தடா சட்டத்தின் அடிப்படையில் [illegible] நிலை இருந்தது. [illegible] டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள்.


பேரறிவாளன் முருகன் சாந்தன்

அந்தக் காலகட்டத்தில் பெறப்பட்டதே இந்த வாக்கு மூலம். ஆனால் அதற்குப் பின் தடாசட்டமே செல்லாததாகி விட்டது. ஆக, செல்லாத ஒரு சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாக்குமூலத்தை, அந்த வாக்குமூலம் செல்லுபடியாகாத இன்னொரு சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப் பயன்படுத்தி இருக்கிறார்கள். நாம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டியது இந்தச் செய்திகளைத்தான்.

ஈழத் தமிழர் போராட்டம். அமைதிப் படை நடத்திய அத்துமீறல்கள், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.... இவற்றை அல்ல. ஆனால் இங்கு நடந்ததோ தலைகீழ். தமிழக அரசின் ஏமாற்றுக்கூட சாதனையாக் காட்டப்படும் வேதனை அரங்கேறியது!

மரண தண்டனையை ரத்து செய்யும் அதிகாரமானது குடியரசுத் தலைவருக்கு மட்டுமானது அல்ல, ஆளுநருக்கும் அதில் இணை அதிகாரம் உண்டு. அதாவது ஒரு மாநிலத்தின் அமைச்சரவை நினைத்தால் -தமிழக முதல்வர் ஜெயலலிதா நினைத்தால் மரண தண்டனையை ரத்து செய்ய முடியும் என்பதே இதன் பொருள். ஆனால் ஜெயலலிதாவோ அப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. குடியரசுத் தலைவர் மீண்டும் மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித் தன் பொறுப்பைக் கை கழுவி இருக்கிறார். இது சாதனையா, வேதனையா?

மூவர் மரண தண்டனைக்கு எதிரான போராட்டங்களைத் தேசிய அளவில் மரண தண்டனையை முடிவுக்குக் கொண்டுவரும் போராட்டத்தின் தொடக்கமாக மாற்ற வேண்டும். அதுதான் ஏக இந்தியாவுக்குமான போராட்டமாக இதை மாற்றும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை



திருவெண்ணெய் நல்லூரில் பார்த்தசாரதி எனும் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்த பொருளைப் பார்த்தாலும் அதைத் தான் அடைய வேண்டும் என நினைப்பான். ஒருநாள் அவன் வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கி அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக் கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கத் தொடங்கினான். கிணற்றுக்குள் இருந்து ''யார் இங்கே தண்ணீர் எடுப்பது?'' என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், ''ஐயா! நான் ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

''விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் தெரியமாட்டேன்,'' என்றது அந்தக் குரல்.

''மந்திரக் கிணறா! விரும்பியதை எல்லாம் தருமா?'' என்று வியப்புடன் கேட்டான் அவன்.

''உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்,'' என்றது அந்தக் குரல்.

''என்னதான் நடக்கிறது பார்ப்போமே'' என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான். ''விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்...'' என்றான் அவன். ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

''ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான் தான்,'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

''ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே! என்ன செய்வது?'' என்று சிந்தித்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று உள்ளிருந்து குரல் கேட்டது. ''வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது,'' என்று கேட்டான்.

''அப்படியே ஆகட்டும்,'' என்று குரல் வந்தது. வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான். வீட்டுக்குள் ஓடினான். ''இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசனைப் போலச் செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!'' என்று மனைவியிடம் மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். ''என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே,'' என்றாள். அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, ''வண்டியை நன்றாகப் பார்,'' என்றான். ''நன்றாகப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன்'' என்றாள் அவள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலை மதிப்பற்ற பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டுக்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை; ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருள்களும் கீழே கொட்டிச் சிதறின. என்ன பிரயோஜனம். அவை இவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன.

தன்னுடைய பேராசை குணத்துக்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.




# கிழக்குப் பல்கலைக்கழகம்



கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறு மூலையில் அமைந்துள்ளது. இதன் ஒரு வளாகம் திருகோணமலையில் அமைந்துள்ளது.




இப்பல்கலைக்கழகத்திற்கான மருத்துவபீடத்தை ஆரம்பிக்கும் அனுமதி 2005 இல் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது, தற்போது இதன் கிளையாக மட்டக்களப்பு நகரில் கிழக்குப் பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றது.

இப்பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் பாடங்கள் நடத்தப்படுகின்றன. 2001 ஆம் ஆண்டில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியும் இதன் ஒருபாகமாக்கப்பட்டது.



இப்பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகம் செங்கலடி நகரத்துக்கு அருகே வந்தாறுமூலையில் அமைந்துள்ளது. இது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பாசிக்குடாப் பகுதிக்கு சுமார் 17 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. அறிவியல் பீடம் மட்டக்களப்பு நகரில் இயங்கி வருகின்றது.

இப்பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் [illegible] லிருந்து 15.6 [illegible] வெளி எனும் கிராமத்தில் அமைந்துள்ளது.

# சிலி





தென் அமெரிக்கக் கண்டத்தின் தென்பாகத்தில் மேற்குக் கரையிலுள்ள குடியரசு நாடு சிலியாகும். இதன் தலைநகர் சாண்டியாகோ, இங்கு ஸ்பானிஷ் மொழி பேசப்படுகிறது. இந்த நாட்டின் நாணயம் பெஸோ.

1818 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 இல் சிலி சுதந்திரம் பெற்றுள்ளது. 1949 இல் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகச் சேர்ந்தது. வடக்கில் பெருவும், கிழக்கில் பொலீவியாவும் ஆர்ஜென்டினாவும் உள்ளன. ஆண்டீஸ் மலைத் தொடருக்கும் பசுபிக் கடலுக்கும் இடையிலுள்ள மிகக் குறுகிய, மிக நீளமான நாடு இதுவாகும்.

உலகத்தின் தாமிர சேமிப்பில் மூன்றில் ஒரு பாகத்துக்குமேல் சிலியில்தான் உள்ளது. இவை தவிர, நிலக்கரி, இரும்பு, பொன், வெள்ளி, மாங்கனீஸ் போன்றவையும் கிடைக்கின்றன. இந்த நாட்டின் வனப்பொருள்கள், மீன், கனிம ஏற்றுமதி ஆகியன முக்கியப் பொருளாதார மூலங்களாக உள்ளன. உலகின் ஒயின் ஏற்றுமதியில் 5 ஆவது இடத்தையும், உற்பத்தியில் 8 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.



இலவசக் கல்வி போதிக்கப்படுகிறது. 7 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி முறை உள்ளது. இங்கு 53 பல்கலைக்கழகங்கள் உள்ளன. தென் சிலியில் ஏரிகள் பல இருக்கின்றன. இங்குள்ள சுற்றுலாத் தலங்களாக [illegible] ஹெண்ட்ஸ், புரிதமா ஹாட் ஸ்பரிங்ஸ், டோரிடெல் பைநெ [illegible] டேசியோ கெய்சர்ஸ், பெட்ரோகுயு நீர் வீழ்ச்சி என்பன விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்சன்



## 1828—1906

[கடந்தவாரத் தொடர்ச்சி...]

நோர்வேஜிய இலக்கிய வரலாற்றில் முதன் முதலாக இவருடைய என் அக்தரன் கம்பான்ஜ எனும் நாடகம் கிறிஸ்தி யாணியாவில் உள்ள நாடக அரங்கொன்றில் அரங்கேறியது.

1852 ஆம் ஆண்டு பேகன் எனும் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்த நாடக அரங்கொன்றில் நாடக இயக்குநராகப் பொறுப் பேற்றார். இதே ஆண்டில் கல்விச் சுற்றுலாவுக்காக டென்மார்க் சென்றார்.

1853 இல் இருந்து 1857 வரையிலான காலப் பகுதிகளில் இவருடைய சாங்தான்ஸ் ஆப்ரன், மீண்டும் என் அக்தரன் கம்பான்ஜ சில மாற் றங்களோடும், உலாப் லில்யகிறான்ஸ், ஆகிய சிறந்த நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

கலையுலகில் தன்னை முழுமையாக அர்ப் பணித்த இப்சன் 1856 ஆம் ஆண்டு சுசானா துரசன் எனும் பெண்மணியைப் பதிவுத் திருமணம் செய்தார்.

மீண்டும் தலைநகருக்குத் திரும்பியவருக்குக் கலை நிர்வாக இயக்குநராக, கிறிஸ்தியாணியா நொஸ்க் நாடக அரங்கிலேயே வேலையும் கிடைத்தது.

1858 ஆனி 18 இல் சுசானா துரசன் அவர்களைச் சம்பிரதாய பூர்வமாகத் திருமணம் செய்து தனது இல் வாழ்க்கையை இனிதே தொடர்ந்தார். நாடக உலகில் புகழ்பெற்று வந்த இப்சன், தமது கவிதை எழுதும் பணியை 1859 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்.

பொ வித்தர்ன், ஓவியக் களஞ்சியத்தில் கவிதைச் சுழற்சி ஆகிய கவிதைகள் இவரால் எழுதப்படுகிறது.

இவரது வாழ்வில் கவிதைகள் மலர்ந்த இந்தப் பருவத்தில்தான் சிகுர் எனும் மகவு அரும்புகிறான். சிவானகில்ட் எனும் நகைச்சுவையான காதல் நாடகம் ஒன்றையும் இக்காலக் கட்டத்தில் தான் எழுதுகிறார்.

(தொடரும்)



நன்றி : தை மாத இதழ்

# தூங்காத பணத்தின் இர

[கடந்தவாரத் தொடர்ச்சி...]

அமோக விற்பனை அடைந்ததையொட்டி சில விஷமிகள் அதை மேலும் பல பிரதிகள் திருட்டுத்தனமாக வெளியிட்டு சம்பாதித்தார்கள். அவரிடம் அதைப்பற்றிக் கேட்ட போது, அவர் அதைப் பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக, அது அவருக்கு மேலும் உற்சாகத்தை அளித்தது. அதை மேலும் பல புதிய விதங்களில் அவர் விற்க ஆரம்பித்தார். மொபைல் போன் மூலமாகவும், இணையத்தளம் மூலமாகவும் அவற்றை விற்க ஆரம்பித்து விட்டார். இப்படி அவரது மாத வருமானம் கூடிக் கொண்டே போனது.

இன்றும் அவரது பாடல் ஒன்றை ஏராளமான கிறிஸ்தவர்கள் தங்கள் மொபைல் போனின் ரிங் டோனாக வைத்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். இது தான் பணம் சம்பாதிப்பதன் அடிப்படை இரகசியம். பணம் சம்பாதிப்பதற்காக நீங்கள் உழைக்காதீர்கள்!

உங்களுக்காக பணத்தை வேலை செய்ய வையுங்கள்!

ஒரு முறை பணத்தை, அது வருகின்ற விதத்தை நீங்கள் கண்டு பிடித்து விட்டால் தொடர்ந்து அதை எப்படி உங்கள் வசம் ஆக்குவது என்பதை நீங்கள் கண்டுபிடித்து விடுவீர்கள்.

அப்படி நீங்கள் உருவாக்கியுள்ள முறைகள் உங்களுடைய பிக்ஸ்ட் டிப்பொசிட் மாதிரி ஒவ்வொரு மாதமும் அல்லது ஆண்டும் உங்களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும். இப்படி நீங்கள் உருவாக்கி வைத்துள்ள வருமான வழிவகைகளை 'இலாபம் உருவாக்கும் அசையா சொத்து' [Profit Generating assets] என்பார்கள். இலாபம் உருவாக்கும் அசையாச் சொத்து என்பது நீங்கள் உழைக்கிறீர்களோ இல்லையோ அது தானாகவே உங்களுக்கான வருமானத்தைக் கொடுத்துக் கொண்டேயிருப்பதாலேயே அதை நாம் அப்படி அழைக்கிறோம்.

செல்வச் சிந்தனையுடையவர்கள் தங்களுக்கான அசையாது சொத்துக்களை உருவாக்கி வைத்து, தங்கள் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்திக் கொள்கிறார்கள்.

# பதினொருவகையான தேசி வகை ஆடல்கள்

■ உமா மகேஸ்வரி

ஆடல் கலை பண்பாட்டில் இரண்டு வகையான கூறுகள் உள்ளன. ஒன்று வேத்தியல் மரபு. மற்றையது பொதுவியல் மரபு. அரசசபை, தெய்வ சன்னிதானம், புலமையாளர் முன்னிலை போன்ற இடங்களில் ஆடப்படுகின்ற ஆடல்களை வேத்தியல் மரபு சார்ந்தவையாகக் கொள்வர். எல்லா நிலையுள்ளும் அடங்குகின்ற பொதுமக்கள் யாவரும் காணும்படியாக பொது மன்றத்தில் ஆடப்படும் ஆடல்கள் பொதுவியல் சார்ந்தவையாக அமைகின்றன. இவை பெரும்பாலும் தேசி (கிராமிய) வகை ஆடல்களாக விளங்கும். இந்த தேசிவகை ஆடல்களுக்குள் உள்ளடங்கும் பண்பு கொண்டவை பதினொருவகை ஆடல்கள். இந்தப் பதினொரு வகை ஆடல்கள் பற்றிய செய்திகளை புராணங்கள், இதிஹாசங்கள், தேவார திருப்பதிகங்கள், தமிழ் இலக்கியங்கள் என்பவற்றில் காணக் கூடியதாக இருப்பினும், இந்தப் பதினொருவகை ஆடல்களையும் ஒருசேர தொகுத்து இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலேயே காணமுடிகிறது.

இளங்கோவடிகளின் மூலத்திற்கு உரை செய்த அரும்பத உரையாசிரியர் மற்றும் அடியார்க்கு நல்லாரின் விளக்கங்களின் படி-முற்கால தமிழகத்திலே காவிரிப்பூம் பட்டினத்திலே வருடா வருடம் நிகழ்த்தப்படுகின்ற இந்திர விழா சிறப்பானது. இத்தகைய ஓர் இந்திரவிழாவின் போது, சோழன் கரிகாலன் முன்னிலையில் பலரும் காணும்படியாக 'மாதவி' என்னும் நடனமங்கையால் இந்தப் பதினொரு வகை ஆடல்களும் ஆடப்படுகின்றன. இவ்வாறு ஆடத்தொடங்குகின்ற மாதவி ஆட்டத்தின் முன்னர் மாயோனை வாழ்த்தி-மாயோன் பாணியினையும், [illegible]களையும் வாழ்த்திப் பாடியும் சந்திரனை வாழ்த்திப் பாடியும் தொடங்குகிறாள்.

'பாணி' என்பது தேவர்களைப் போற்றிப் பாடுகின்ற பாடல்களாகும். இந்தப் பாணி அமைப்பானது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் கலைகளுக்கும் சிறப்பானதாகும். இதனை இரண்டு வகையாகப் பிரிப்பர்.

பெருந்தேவபாணி
சிறுதேவபாணி

இங்கு பெருந்தேவபாணி என்பது பல தேவர்களையும், சிறுதேவபாணி என்பது நால் வகைவருண பூதரையும்மூவடி முக்கால் வெண்பாவில் போற்றிப் பாடுவது என மதிவாணர் நாடகத் தமிழ் நூல் கூறுகிறது. அந்த வகையில் மாதவி பதினொருவகை ஆடலையும் ஆடத்தொடங்கும் முன்னர் கௌசிக பண்ணும், இரண்டொத்துடைத் தாளமும் கூடி மாயவனின் சிறப்புக்களைப் பாடுகிறாள். பின்னர் அந்தணர், வேந்தர், வணிகர் மற்றும் அரங்கக் கூத்துக்களையும் போற்றிப்பாடி பின்னர் சந்திரனையும் போற்றிப் பணிந்து கடவுளர் ஆடிய கொடுகொட்டி, பண்டாரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக்கூத்து, குடைக் கூத்து, குடக்கூத்து, பேடியாடல், மரக்கால் ஆடல், பாவைக்கூத்து, கடையம் என்னும் பதினொரு வகை கூத்துக்களையும் சிறப்புற அபிநயம் விளங்க ஆடத் தொடங்குகிறாள்.



கொடுகொட்டி

தாரகாட்சன், கமலாட்சன், விமலாட்சன் என்னும் மூன்று அசுரர்களும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களை முப்புரங்களாகக் கொண்டு தேவர்களைத் துன்புறுத்தி வருகின்ற வேளையில் தேவர்கள் இதனை சிவபெருமானிடம் முறையிடவே அவர்களின் முறையீட்டுக்கு இணங்கி தனது புன் சிரிப்பால் அந்த முப்புரங்களையும் எரித்து அந்த வெற்றியின் மகிழ்ச்சியால் கைகொட்டி நின்றாடியது 'கொடுகொட்டி' ஆடல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியம் தெரியுமா?

பல பிரதிகள்
ட்ட போது,
க்கு மேலும்
ஆரம்பித்தார்.
ஆரம்பித்து

ல் போனின்
ன்று அவர்
தான் பணம்
க்காதீர்கள்!

விட்டால்
ண்டுபிடித்து

சிட் மாதிரி
ம். இப்படி
ம் அசையா
ச் சொத்து
க்கான வரு
க்கிறோம்.
உருவாக்கி



ஒரு முறை பணத்தை, அது வருகின்ற விதத்தை நீங்கள் கண்டு பிடித்து விட்டால் தொடர்ந்து அதைத் எப்படி உங்கள் வசம் ஆக்குவது என்பதை நீங்கள் கண்டு பிடித்துவிடுவீர்கள்.

ஏழ்மைச் சிந்தனையுடையவர்கள் செலவினங்களையும் தொடர்ந்து பிரச்சி னைகளை உருவாக்கும் இடர் நிலைகளையுமே தங்களுக்காக சேமித்துக் கொள்கிறார்கள். ஒரு வேலையைச் செய்து பணம் சம்பாதிப்பதற்கும், ஒரு சொத்தை உரு வாக்கி வைத்துவிட்டு அதன் மூலம் தங்களுடைய எதிர்காலத்தைச் செழுமைப் படுத்திக் கொள்வதற்கும் மடுவுக்கும், கடலுக்குமான வித்தியாசம். [தொடரும்]



# சைக்கிளின் பரிணாம வளர்ச்சியும் பயன்பாடும்

மின்சாரம், எரிபொருள் என்பவற்றால் உண்டாகும் வலுவைப் பயன்படுத்தாமல் மனிதசக்தியை மட்டும் உபயோகித்து வீதிகளில் விரைவாகச் செலுத்தக் கூடிய வாகனமாகத் திகழ்வது சைக்கிள் ஆகும். இவற்றைக் கிராமப்புறங்களிலோ, நகரங்களிலோ உள்ள வீதிகளில் செலுத்துவதற்கு ஆண்டுதோறும் உள்ளூராட்சி சபைகளுக்கு குறிப்பிட்ட ஒரு சிறு தொகையினை வரிப்பணமாகச் செலுத்த வேண்டும்.

பொதுவாக இலக்கத்தகடுகளுடன் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற ஊர்தி களைப் போன்று காப்புறுதி வாகன அனுமதிப்பத்திரம் என்பன இதற்கு அவசிய மில்லை. இதனால் 'சைக்கிள்' பாவனையாளர் பெரும் நன்மை அடைகின்றனர் என்று கூறினாலும் மிகையாகாது.



சைக்கிளைக், குறிப்பாக பாடசாலை மாணவர்கள், அலுவலகம் செல்வோர், தினமும் பத்திரிகை, அஞ்சல், பால், விறகு, மீன், மரக்கறி போன்ற இன்னோரன்ன அத்தியாவசிய பொருள்களை வீடு வீடாகக் கொண்டு சென்று விநியோகிப்போர் உபயோ கிப்பதனை நாம் காண்கின்றோம்.

இனி இந்த உலகில் சைக்கிள் தோன்றிய வரலாற்றைப் பார்ப்போம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அதாவது 1779 ஆம் ஆண்டு பிளான்ஷார் என்ற பிரெஞ்சுக்காரர்தான் முதன் முதல் சைக்கிளை வடிவமைத்தார். பலதரப்பட்ட குறைபாடுகளுடன் கூடிய இது ஒரு மரச்சட்டத்தில் உரு வாக்கப்பட்டது.

சட்டத்தின் இரு முனைகளிலும் இப்போதுள்ள துவிச்சக்கர வண்டியைப் போல் ஒன்றன் பின் ஒன்றாக இரு சக்கரங்களை இணைத்தார். இதில் சவாரி செய்பவர்கள் பலகையில் உட்கார்ந்து கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்கு கால்களி னால் உந்திச் செல்ல வேண்டும்.

பின்னர் 1816ஆம் ஆண்டு கார்ல்டிரெய் என்ற ஜேர்மனியர் தாம் விரும்பியவாறு திருப்பக்கூடிய ஹாண்டிலுடன் கூடிய சைக்கிளை உருவாக்கினார். அதேவேளை எர்னஸ்ட் மீஷோ என்ற பிரெஞ்சுக்காரர் முன் சக்கரத்துடன் மிதிபடிகளை இணைத்து புதிய வடிவமைப்பை உருவாக்கினார். 1865 ஆம் ஆண்டு எலும்பு குலக்கி என்னும் ரகம் பாவனைக்கு வந்தது.

1870 இல் சுமார் ஒன்றறை மீற்றர் உயரமுள்ள முன் சக்கரமும், சிறிய அளவிலான பின்சக்கரமும் முன் சில்லுக்கு மேல் அமைந்த இருக்கையும் கொண்ட சைக்கிள் உருவாக் கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டது.

[தொடரும்]



அருணா

[தொடரும்]

# காக்க! காக்க! தலையைக் காக்க!!

ஜனநாயக நாட்டில் கேள்வி கேட்க யாருக்கும் உரிமையுண்டு. கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்று எல்லாவகையான சுதந்திரங்களும் உண்டு. யாரும் பயப்படத் தேவையில்லை. யாரும் நெற்றிக் கண்ணை [அப்போதும் நெற்றிக் கண்ணைக் காட்டித்தான் பயப்பட வைத்துள்ளார்கள்] காட்டினாலும் பயப்படாமல், தயங்காமல் தமது கருத்துக்களை வெளியிடலாம். இது ஜனநாயக நாட்டில் நடக்கக்கூடிய விடயம், மறுபடியும் சொல்கிறேன் இது ஜனநாயக நாட்டில் நடக்கக் கூடிய விடயம். நாம் வாழும் நாடு எப்படியானது என்பது உங்களுக்குத் தெரியும்.

எல்லாவற்றையும் தட்டிக் கேட்க முடியாது. கண்முன்னே நடக்கும் அக்கிரமங்களை நேரடியாக அல்லாமல் புனைபெயரிலோ, மாறுவேடம் பூண்டோ அதனை எழுதி வெளிக் கொணர முடியும், எமது தலைகளைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். கண்ணால் கண்டதை, கேட்டதை அப்படியே சுய முகவரியோடு போட்டவர்கள் மிகவும் துன்பத்துக்கு ஆளாகி உள்ளார்கள் இன்றும் அநீதிகளைக் கண்டு கோபம் கொண்டு, உண்மை வெளிவர வேண்டும் என்ற நோக்கில் பத்திரிகைத்துறையில் சமூக நலனில் அக்கறை உள்ளவர்கள், எழுத்தாளர்கள், தங்களது மனக்குமுறல்களை, பேச்சிலும் எழுத்திலும் வெளியே கொண்டு வந்து செய்திகளை வெளியிடுகின்றனர்.

இதன் மூலம் உடனேயே நீதி கிடைக்காவிடினும், வெளி உலகத்திற்கு நடந்த பிரச்சினை தெரிய ஆரம்பிக்கின்றது. இதன் மூலம் பல பிரச்சி னைக்குரிய "தலைகள்" இனங்காணப்படுகின்றன. பிரச்சினையை வெளிக் கொண்டு வருபவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகின்றனர். அவர்களை நம்பி பெரிய குடும்பமே உள்ளது. நடந்த அநீதிகள் உண்மை என்பதற்கு பல தகுந்த ஆதாரங்களை எழுதுபவர்கள் சமூகத்துக்குக் காட்ட வேணும். ஆதாரங்களைக் காட்டும்போது பல அரசியல் பெரும் தலைகள், புள்ளிகளின் வாழ்க்கைச் சரித்திரங்கள் வெளியே தெரிய வருகின்றன. பிரச்சினை எழுத்தில் வரும்போது அச்சுறுத்தல்களும், எச்சரிக்கைகளும் விடுக்கப்படுகின்றன. பிறகு முடிவு.. தலை கொய்யப்பட்டுவிடும்.

இப்படி எழுதும்போது பல தலைகள் உருட்டப்படுகின்றன. ஒரு ஊழல் சம்பந்தமான விடயத்தை எடுத்துக் கொண்டால் அதனோடு தொடர்பான பல பெரிய தலைகள் தலைமறைவாகவும் செய்கின்றன. பிரச்சினைகள் வரும் போது மனிதர்கள் எல்லோரும் தமது சொந்தத் "தலைகளை" முதலில் காப்பாற்ற முடிவுசெய்வர். இந்த நிலையில் 'தலை' முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இப்போதும் நாம் உயிரோடு நடமாடிக் கொண்டு இருந்தாலும் கண்ணால் பார்க்கவும், வாயால் பேசவும், காதால் கேட்கவும் செயற்பட முடிந்தாலும், அனைத்து தகுதிகளும் இருந்தாலும்,

ஓர் அதிகாரியுடன், நேர்காணல், விசாரணை என்று வரும் போது தலையுடன் கூடிய அடையாள அட்டை அவசியமானதாகும். 2 நிமிடங்கள் தன்னும் அடையாள அட்டையையும், எம்மையும் மாறி மாறி பார்த்து திருப்திப்பட்ட பின்னரே அதிகாரி அடுத்த கட்டத்துக்கு தாவுவார். ஒருவர் இயல்பான நிலையில் உள்ளாரா அல்லது சற்று இயல்பு நிலைக்கு மாறாக உள்ளாரா என்பதைச் சாதாரண மக்கள், மற்றவருக்கு விளக்குவதற்கு "தலையை" பிரதானப்படுத்தி கையினால் சைகை காட்டி தெரியப் படுத்துவார்கள்.

வாகனங்கள் செலுத்துபவர்களுக்கு 'தலைக்கவசம்' முக்கியமானதென எவ்வளவு தடவை எச்சரிக்கை செய்கின்றார்கள், காரணம் விபத்து ஏற்படும்போது தலை அடிபடாது பாதுகாப்பதற்காகும். மனிதர்கள் பிரச்சினைகளில் சிக்கி தவிக்கும் போது என்ன செய்கிறார்கள்? "ஐயா தலைக்குள்ள பாரமாய் கிடக்கு" "தலைக்குள்ள அம்மிக் கொண்டு நிக்குது" என்கிறார்கள். மதுவுக்கு அடிமைப்பட்டவர்கள் என்ன சொல்கிறார்கள்? காலையில் எழும்பினால் தலைவலிக்குது. உயிரினங்கள் கூட சில ஆபத்து நேரங்களில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தலைகளை உள்ளே இழுத்து மறைத்து வைத்துக் கொள்கின்றன. யார் சொல்லிக் கொடுத்து இருப்பார்கள்? நாங்களும் லேசுப்பட்டவர்களா? கடன் வாங்கியவர்களும் வேறு விதமான சமூகச் செயல்களில் ஈடுபட்டவர்களும் கடைசியில் 'தலை' மறைவு வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள், வெளியில் 'தலை' காட்ட மாட்டார்கள்.


இப்படி "தலை" போகிற காலத்தில் ஒருவர் கேட்டார் "ஏன் கோயிலில இருக்கிற சாமியின்ரை வாகனங்களின்ரை 'தலை'களை கொண்டு போறார் கள்?" சரி நல்ல கேள்விதான், சாமி வாகனங்களான இடபம், மயில், குதிரை, சிங்கம், பெருச்சாலி என்பவற்றோடு காமதேனு, சூரன் போன்ற வாகனங்களின் தலைகளையும் கொண்டு போய் விடுகிறார்கள். சரி வெறும் தலைகளைக் கொண்டு போய் என்ன செய்யப் போகிறார்கள்? மரத்தினால் செய்யப்பட்ட 'உயிரற்ற' வாகனங்கள் அவை, திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்து வீதி வலம் வரும் வேலையைத் தவிர வேறு எந்தக் குற்றங்களையும் அவை செய்யவில்லையே? அப்பேர்ப்பட்ட வாகனங்களின் தலைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டதா? கொய்யப்பட்ட தலைகளைக் கொண்டு போய் என்ன செய்கிறார்கள்? விக்கிறார்களா? இதனை 'மொடலாக' வைத்து வேறு தலை செய்கிறார்களா? அல்லது 'பாஸ்போர்ட்'டில் தலை மாற்றுவது போல் வேறு தலை மாற்றுகிறார்களா? யாருக்குத் தெரியும்?

எமது நாட்டில் உயிர் உள்ளன, உயிர் அற்றன எல்லாவற்றுக்கும் ஆபத்துதான். இன்னமும் எத்தனை பேர் தேவையில்லாமல் உயிர் இழந்து கொண்டு இருக்கிறார்கள். உயிர் எடுப்பவர் எமதர்மராஜன் என்று சொல்வார்கள். அவர் உயிர் எடுப்பதற்கு பாசக்கயிற்றோடு எருமை வாகனத்தில் வருவதாகச் சொல்வார்கள். தயவு செய்து அவர் வரும் எருமை வாகனத்தின் தலையை இனிமேல் கொய்து விடுவீர்கள் ஆயின் பல உயிர்கள் காப்பாற்றப்படும்.

■ தொல்புரம் சி.கதிர்காமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாது பெய்யும் துயர்



## அதனையும் கடந்தவர்கள்

பிறேமினி

இன்று சர்வதேச விதவைகள் தினமாகும். 2009 ஆண்டு ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானத்தின்படி ஜூன் 23 ஆம் திகதி சர்வதேச விதவைகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

உலகெங்கும் 245 மில்லியனுக்கு அதிகமான விதவைகள் இருப்பதாக ஐ.நா. சபையின் அறிக்கை ஒன்று குறிப்பிடுகின்றது. வல்லாதிக்க நோக்கோடு நாடுகளுக்கிடையே ஏற்படும் போர்கள், நாடுகளுக்குள்ளே இடம்பெறும் இன, மத, மொழிக்கான போர்கள், கலவரங்கள் போன்ற நெருக்கடிகளினால் பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

வாழத்துடிக்கும் வயதில் ஆண்வழிப் பாதுகாப்பை இழந்து விடும் இந்த விதவைகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு தங்களுக்கான பாதுகாப்பு இன்மையாலும், வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு தவிப்பதாலும், சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆனால் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின்படி விதவைப் பெண்கள் எந்தவொரு பாகுபாடுமின்றி பாதுகாக்கப்பட வேண்டும் என ஐ.நா.சபை அறிவித்திருக்கின்றது.

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதியில் மட்டும் போரின் போது கணவன்மாரை இழந்த 90 ஆயிரம் வரையான விதவைப் பெண்கள் வாழ்வதாக பிரிட்டன் வெளியுறவு மற்றும் பொதுநலவாயப் பணியகத்தால் வெளியிடப்பட்ட இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் பெரும்பகுதிக் கணிப்பீட்டை இளவயதினராக இருக்கும் விதவைகள் பிடித்திருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இவர்கள் கணவனை இழந்து தம் பிள்ளைகளோடு வாழத் தொடங்கும்போது ஏற்படும் பிரச்சினைகளால், மனமுடைந்து போகின்றனர். வறுமை மிக மோசமான சீரழிவு வேலைகளிலும் இவர்களை ஈடுபட வைக்கின்றது. இப்போதும் வன்னியில் இடம்பெறும் துர்சம்பவங்களுக்கு இதுபோன்ற காரணிகள் பின்புலமாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதையும் தாண்டி விதவைகளுக்கு முன்னுதாரணமாய் இருக்கின்ற பெண்கள் அதே வன்னியில் இருக்கத்தான் செய்கின்றனர்.

விசுவமடுவில் 37 வயதுடைய லீலாவதி எனும் ஒரு விதவைத் தாயை அண்மையில் சந்திக்க முடிந்தது. இவருக்கு 3 பிள்ளைகள். 16 வயதில் பாடசாலைக்குச் செல்லும் மூத்தமகள் மற்றும் 10 வயதும், 8 வயதுமாய் இரண்டு மகன்கள். காதலித்து கணவனையே துணையாக நம்பி வந்து, அழகாகக் குடும்பம் நடத்திக்கொண்டு இருந்தவருக்கு 2006 ஆம் ஆண்டு வான் தாக்குதல் கணவனைப் பறித்தெடுத்தது. அத்தோடு, இடப்பெயர்வு எனும் பேரிடரையும் அவர் சந்திக்க நேர்ந்தது. அப்போது எதற்கும் தயங்காமல் கூலி வேலைக்குச் சென்று, பிறகு பொறுக்கி விற்று, வீடு வீடாகச் சென்று பங்கர் வெட்டிக் கொடுத்து, உயிரைப் பணயம் வைத்துப் பிள்ளைகளைக் காப்பாற்றி, இன்று தனது சொந்த வீட்டில் மீளக்குடியேறி இருக்கின்றார் லீலாவதி.

வீடு சிறியதாக இருந்தாலும் அழகாக இருந்தது. முன் அறையில் ஒரு தையல் மெசின், அதைச்சுற்றி தைத்தும், தைப்பதற்காகவும் துணிகள் நிறைந்து கிடந்தன. ''இரவு முழுக்க தையல் வேலை செய்வன், பகலில தோட்டத்தோடும், கோழி, மாடுகளோடும் என்ர பொழுது போயிடும். பள்ளிக்கூடத்தால வந்தா பிள்ளையளும் எனக்கு உதவி செய்வினம். 'இஞ்சே... பின்னால வந்து பாருங்க..'' அவர் அழைக்க அவருக்குப் பின்னால் சென்றேன். பசுமை பூத்திருந்தது அவரது தோட்டத்தில். மிளகாய்ச் செடி காய்த்துக் குலுங்கியது. கத்தரி, பயிற்றை, வெண்டி, தக்காளி என எல்லாம் பயன் தரும் நிலையில் இருந்தன. அருகிலே ஒரு சிறிய கோழிப் பண்ணை, மாட்டுக் கொட்டில் எனப் பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது.

''எனக்கு கஸ்ரமில்ல. யாரை நம்பியும் நான் இருக்கேல்ல. என்னுடைய ஓயாத உழைப்பாலும், தன்நம்பிக்கையாலும் நான் தலைநிமிர்ந்து நிக்கிறன். இப்ப என்ர இலக்கு பிள்ளைகளைப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டு வருவதுதான்'' பெருமையோடு அவர் சொன்னார்.

இப்படி எத்தனையோ விதவைகள் நம்மத்தியில் இருக்கின்றனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைச் சொந்த இடமாகக் கொண்ட 23 இளவயது விதவையான நர்மதாவைச் சந்திக்க முடிந்தது . இவருக்கு 3 வயதில் ஒரு குழந்தை. திருமணம் செய்து ஒரே மாதத்தில் கணவனை ஷெல்லுக்குப் பறிகொடுத்து விட்டார். வயிற்றில் குழந்தையோடு பல இடப்பெயர்வுகளை சந்தித்து, இப்போது ஒரு மூதாட்டியின் தயவில் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டு, அங்கேயே ஓர் ஓலைக் குடிசையில் வசிக்கின்றார். இரவு பகலாய் கடைக்கு இடியப்பம் அவித்துக் கொடுத்து, அந்த வருமானத்தில் குழந்தையையும் தன்னையும் பாதுகாத்து வருகின்றார். தமது எதிர்காலத்துக்காக ஒரு தொகுதிப் பணத்தை சேமிப்புச் செய்து வரும் அந்தச் சின்னத் தாயின் கரங்களைத் தொட்டபோது உழைப்பின் வைரம் தெரிந்தது.

இப்படித்தான் அவர்கள் தம்மை வருத்தி உழைத்து, குடும்பச் சுமையைத் தூக்கி சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

ஆனால் இன்னும் ஒரு சிலரோ வறுமையைத் தம் முகவரியாக்கிக் கொண்டு பிள்ளைகளின் அன்றாட அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றுவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். தனித்து வாழ்வது ஒருபுறம், ஆணாதிக்க மனோபாவத்தோடு சமூகம் பார்க்கின்ற பார்வை ஒருபுறம், சமூகப் பாதுகாப்பின்றி பரிதவிக்கும் நிலைமை என வாய்விட்டுச் சொல்ல முடியாத துன்பியலை நாளாந்த வாழ்வியலில் இவர்கள் சந்திக்கின்றார்கள்.

இவர்கள் வாழ்வதற்கான வழியைக் கண்டுபிடிக்காது, வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான மூலங்களை அறிந்து கொள்ளாது, சமூகத்தின் போக்கோடு சேர்ந்து ஓட முடியாமல் தம்மை மாய்த்துக் கொள்வதற்காகத் தற்கொலை முடிவுக்குச் செல்வதும், சமூகத்தில் நெறி பிறழ்ந்த வாழ்வுக்குச் சென்று அவமானப்பட்டு நிற்பதையும் இன்று நாம் கண்ணூடாகக் காண்கிறோம்.

கணவனை இழந்த பெண்களின் துயரம் ஒருபுறமிருக்க, ஆள்கடத்தல், கைதுகளுக்குப்பின் காணாமல் போதல் எனக் கண்முன்னே கணவன்மாரைப் பறிகொடுத்துவிட்டு அவர்களைத் தேடித் தேடி கால்நடையாய் அலையும் பெண்கள் எத்தனை பேர்? கணவன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா எனத் தெரியாது அன்றாடம் கண்ணீரோடு தத்தளிக்கும் இளம் பெண்கள் பலர் எந்த முத்திரையும் இன்றி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்று உலகெங்கும் விதவைகள் தினம் கொண்டாடப்படுகின்றது. வெறும் தினங்களைக் கொண்டாடுவதோடு நின்றுவிடாமல் அவர்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான வழியைக் காட்டுவதற்கு சமூக ஆர்வலர்கள் அனைவரும் முன்வரவேண்டும். விதவைகள் மறுவாழ்வு, மறுமணம் என வெற்றுக் கோஷங்கள் இடாது சமூகப் பொறுப்போடு அவற்றை முன்னின்று செயல்படுத்த வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவையிலும் கல்வியிலும் உயர்ந்தவர் அமரர் சரவணபவன்



மண்ணில் பிறந்தவர் யாவருமே மாண்புடன் வாழ்தல் வேண்டும் என்று விரும்பினாலும், வாழ்தலினால் மகிமையடைபவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிறிய பட்டியலுக்குள் நின்றொளிரும் முல்லைத்தீவு வலயக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்று பல்வேறு சமூக சேவைகளையும் தொடர்ந்து ஆற்றி, அமரரான சரவணபவனை எந்தக் காலத்திலும், எந்த நிலையிலும் மறந்து விடுதல் இயலாததாகும்.

வாழுங் காலத்தில் வாழ்தலின் மதிப்புணர்ந்து வாழ்ந்த மகான். கல்வியால் உயர்ந்து, கற்பித்தலால் சிறந்து கடமைகளால் தனது ஆளுமையை இந்த மண்ணிற்கு வெளிப்படுத்தி வாழ்ந்தவர்.

### நீத்தார் நயப்புரை

உறவினர்களால், நண்பர்களால் மாத்திரமல்ல, தன் கடமைச் சீர்மையால் தனது சக அதிகாரிகளுடனும், அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலருடனும் இணங்கி, பணி புரிந்தவர். யாருடைய தேவைகளுக்கும் தயங்காது, தாமதிக்காது ஓடோடி வந்து உதவும் உத்தம சிந்தனையாளர். வரலாறு, அவரது கல்விப் பணியின் மேன்மைக்கு விளக்காக ஒளி தந்த பாடங்களில் முதன்மையானது. வரலாற்றைக் கற்றும் கற்பித்தும் தனது வழியில் பலரை முன்னேற வைத்தவர். அந்த வகையில் அவரிடம் கற்றவர் பலரும் முன்னணியில் திகழ்வதை இன்றும் நாம் காண்கின்றோம்.

நாடகம் , கூத்து , நகைச்சுவை ஆதியாம் இனியவை தேர்ந்து பயின்று பயிற்றி தன்னையும் ,தன்னைச் சார்ந்தோரையும் உன்னதராக்கியவர். தமிழ் பயிற்றும் சேவைக்காய் ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், ஹொலண்ட் , இத்தாலி, நோர்வே ஆகிய தேசங்களுக்குப் பயணம் செய்து அங்குள்ள தமிழர்களுக்கு அவர்களது தமிழ் கற்கும் ஆர்வத்தை மேலும் ஊக்கப்படுத்தியவர். அந்த நாள்களில் தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்கும் உயிர்ப்பூட்டிப் போஷித்தவர்.

செ.ரமேஸ்
ஓய்வு நிலைக் கல்வி உதவிப் பணிப்பாளர்

## அறிவென்பது அனைத்திலுமுண்டு

*இலக்கியங்கள்*
*கற்பியல் களவியலானாலும் கூட அன்பும்*
*இன்பமும் இரண்டறக் கலந்து இலக்கியங்கள்*
*அறிவு பூர்வமாய் அமைந்து விட்டால்*
*விட்டுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் நன்மை*
*அறிவு இல்லாத இன்பம் துன்பம் - அன்பு*
*இல்லாத இன்பம் கொடுமை, கடவுளைக்*
*கூட கனிந்து பாடும் பக்தி இலக்கியங்கள்*
*அன்பைத் தான் அடிப்படையாகக் கொண்டன!*
*பற்றற்றான் பற்றைக் கூட அறுப்பது*
*பரிநிர்வானம், பற்றறுப்பது தியாகமானால்*
*மேன்மை, பெறுப்பற்ற தன்மையானால்*
*கொடுமை, பல தாரங்களை மணந்தாலும்*
*சுயநலமல்ல நீதியிருந்தால் பொதுவுடமை!*
*இதிகாசங்கள்*
*ஆதியில் தோன்றிய சீர்திருத்த சிந்தனை*
*அனைத்துலகையும் கடந்து, மீண்டும்*
*பழமையுடன் பழமையாகி யிரண்டறக்*
*கலந்த போதும், புதுப்புது வடிவில் மீண்டும்*
*அவையும் வேதாளம் முருங்கை மரமேறியது*
*போல் பழமையுடன் பழமையாகிவிட*
*இந்த வரலாறுகளே இதிகாசங்கள்*
*ஆதியில் தோன்றியதை ஆவணப்படுத்த*
*வாழ்வியல் வழிபாட்டிலிருந்து வரலாற்றை*
*உய்த்துணர்ந்து கற்பனை (பொய்)யான*
*கதையையுருவாக்கி மிகையூட்டப்பட்ட*
*விஞ்ஞான மெய்யானத்துடன் கூட*
*புராணங்கள்*
*தோற்றங்கள் அனைத்தின் மூலம் எது*
*விடை தெரியாக் கேள்விக்கு விடை இறைவன்!*
*அந்த இறைவனைத் தோற்றியது எது*
*முடிவிலாக் கேள்வி, தோற்றங்களைக்*
*கொண்டே தோற்றிய இறைவன்*
*அறியப்படுகிறான், விருப்பு வெறுப்பு*
*இல்லாது விதியினூடாகவே தோற்றங்கள்*
*அனைத்தையும் இயக்குகிறான்,*
*தோற்றிடும் சக்திகளில் அசுர, தேவ*
*சக்திகளுருவாக, அவற்றினாற்றல்*
*களால் இறையாற்றலை வெல்ல*
*முடியாதென்பதை உணர்த்தி ஆட்கொண்*
*டருள்புரிவதே புராணங்கள்!*
*சாஸ்திரங்கள்*
*அக்கினியினாலேயே (சூரியன்) படைப்புக்*
*களனைத்தும் பஞ்ச பூதமும் தோன்ற*
*யாகங்களினால் (அக்கினி) தெய்வ சக்தி*
*களும் சாஸ்திர கணிப்பீட்டு வலைப்பின்னலாய்*
*உருவாகி - பிறப்பிலிருந்து*
*(மரபணு) இறப்புவரை திருமணப்*
*பொருத்தலடங்கலாக- தேவசக்திகள் -*
*இறைவனின் விதியை மீற முடியாதாயினும்*
*பிறப்பிலிருந்தே இறப்பு வரை - சாபங்கள்*
*உட்பட அனுகிரகங்களை கூட செய்யும்*
*ஆற்றல் களைக்கூட கூறும் சாஸ்திரம்*

இ.ஜெயபாலன்
தொட்டிலடி, சங்கானை.

## சத்தியமான சந்நியாசம்

ஊரில் உள்ள விலை மகளிர் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு மாநாடு நடத்தினார்கள். அதில் தலைமை தாங்கி தொடக்கி வைக்க யாரை அழைப்பது என்று யோசித்தார்கள். முடிவில் யாராவது ஓர் உத்தமமான சந்நியாசியை அழைப்பது என்று முடிவு செய்தனர்.

விலை மகளிர் ஒன்று சேர்ந்து சந்நியாசிகளிடம் போனதும் பயந்து போய் பலபேர் விழுந்தடித்துக் கொண்டு ஓடினர். சிலர் நடுநடுங்கி மூர்ச்சையாகி விட்டனர். ஒரே ஒரு சந்நியாசி மட்டும் அவர்களிடம் வெகு சகஜமாகப் பேசினார். மற்றச் சாது சந்நியாசிகளிடம் எப்படிப் பழகுவாரோ அப்படியே அவர்களிடமும் நடந்து கொண்டார். அவர்கள் அழைப்பை ஏற்று சர்வசமய மாநாட்டுக்குப் போகிற மாதிரியே சர்வ சாதாரணமாகப் போய் வந்தார்

அவர் சந்நியாசியா? விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்களே! அவர்கள் சந்நியாசியா? உண்மையில் விலைமகளிர் அழைப்பை ஏற்றவர்தான் உண்மையான சந்நியாசி. ஏன்?

எதனாலும் பாதிக்கப்படாதவனே உண்மைத் துறவி. இவர்கள் அழைப்பை ஏற்றால் நாம் எங்கே களங்கப்பட்டு விடுவோமோ என்று கருதுபவன் உண்மைச் சந்நியாசியாக இருக்கமுடியாது என்பதே என் தீர்மானம், முடிவு. விவேகானந்தர் சிந்தனையும் இதுதான்.

துறவறம் ஏற்ற புதிதில் தமது இருப்பிடத்தில் இருந்து வெளியே போய் திரும்பும் போது விவேகானந்தர் ஒரு மைல் இரண்டு மைல் சுற்றி வளைத்துப் போகும் பாதையிலேயே பயணம் செய்வார். தர்மத்தை நோக்கிய நடைப் பயணம் தொடங்கிய அவரது நடைப் பயணத்தின் பாதை சுற்றுப் பாதையாகிவிட்டது. ஏன் தெரியுமா? வழியில் இருந்த விலைமகளிர் தெரு வழியாக இயல்பாகப் பயணப்பட்ட விவேகானந்தர் சந்நியாசியான பின் அந்த வழியாகப் பயணம் செய்வது தம் சந்நியாச தர்மத்திற்கு ஆகாது என்று அஞ்சினார். சந்நியாசத்தின் சரியான அடையாளம் அது என்று கருதிய விவேகானந்தர் பின்னர் அது தவறு என்று அவரே புரிந்து கொண்டார். எப்படி?

ஓர் உண்மையான சந்நியாசிக்கு எல்லோர் வீடும் வீதியும்,இருப்பிடமும் ஒன்றே. எதுவுமே அவனிடம் ஒட்ட முடியாதபோது விலை மகளிரின் தெரு ஏன் விலக்கப்பட வேண்டியது ? விலை மகளிர் மீதான ஆகர்ஷணம் இல்லை என்பது சத்தியம் என்றால் அந்தத் தெரு வழி போவதில் என்ன சங்கடம் விளையப் போகிறது ? விவேகானந்தர் இதை உணர அவர் வாழ்வில் இன்னொரு வாய்ப்பு வந்தது. ஜெய்பூருக்கு அருகில் இருந்த ஒரு சமஸ்தானத்தில் விவேகானந்தர் விருந்தினராகத் தங்கியிருந்தார். அங்கு அவருக்கு ஒரு பெரிய வரவேற்பு விழா நடத்த ஏற்பாடு செய்திருந்தாள். விலை மகளிர் செய்தி அறிந்ததும் விவேகானந்தர் விழாவைப் புறக்கணித்து தமது அறையில் தங்கிவிட்டார் .

விலை மகளுக்கு மிகவும் வருத்தம். அவள் அழுது கொண்டே ஒரு கீதம் பாடினாள். அதன் பொருள் அருமையானது . விவேகானந்தரையே வெட்கப்படவைத்தது

நரசிம்ப மேத்தாவின் பஜனைப்பாடல் அது . இதன் பொருள் என்ன தெரியுமா?''பாரஸ் என்பது எந்த உலோகத்தையும் தொட்டவுடன் பொன்னாகும் ஒருவகை உயர்ந்த கல். அது உலோகங்களிடையே பேதம் பார்ப்பது கிடையாது. காரணம் அது உயர்ந்த கல்.

ஓர் உலோகத்துண்டு கசாப்புக் கடையில் அரிவாளாகக் கிடக்கிறது. மற்றோர் உலோகத் துண்டு பூஜையறையில் சிலையாகக் கிடக்கிறது . உலகம் இந்த உலோகங்களில் உயர்வு தாழ்வு பார்க்கிறது. ஆனால் பாரஸ் அப்படி இல்லை. காரணம் அது தொட்டதும் இரண்டு உலோகத் துண்டுமே பொன்னாகிவிடும் .

கோயிலில் உள்ள உலோகத்தை மட்டுமே பொன்னாக்க முடியும் என்று சொன்னால் அது உண்மையான பாரஸ் கல் அல்ல. போலிக்கல் 'இறைவா, என் மட்டமான இயல்பைப் பார்க்காதே. என்னையும் பொன்னாக்கு' என்ற பொருளுடைய பாடலை உணர்வுபூர்வமாகப் பாடினாள் .

விவேகானந்தரின் உயிர் நடுங்கியது. தமது இருப்பிடத்தை விட்டு ஓடினார்.



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## அற நெறிப் பாடசாலை இயங்க நடவடிக்கை எடுப்பார்களா?

அறநெறிப் பாடசாலையை நடத்துகின்றவர்கள் பல கஷ்டங்கள் மத்தியில் நடத்த வேண்டியுள்ளது. ஒவ்வொரு கிராமத்து மூலை முடுக்கெல்லாம் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. இதனால் மாணவர்கள் அறநெறிப் பாடசாலைக்கு வருவதில்லை: மாணவர்களுக்கு சமயக் கல்வியையும், அறநெறிக் கல்வியையும் ஒரே சமயத்தில் கற்பிப்பது அறநெறிப் பாடசாலை ஆகும். இன்று எமது கலை கலாசார பண்பாடுகளும், சமய விழுமியங்களும் குன்றிப் போய் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

அத்துடன் மாணவர்கள் தற்போது சமூகச் சீரழிவுக்குள் தள்ளப்படுகிறார்கள். பண்டைய காலத்தில் சமூகக் கட்டுப்பாட்டுடனும், சிறந்த ஒழுக்கத்துடனும் வாழ்ந்தனர். ஆனால் இன்று நாகரிகம் உச்சக்கட்டத்தில் வளர்ந்து சீரழிவை நோக்கிச் செல்லுகின்றது. அன்று பூட்டிய அறையில் நடந்த நிகழ்வுகள் எல்லாம் இன்று சில காட்சிகளை தவிர திரைகளில் ஓடுகின்றன. இதனால் மாணவர்களின் மனநிலை மாறுதலடைகிறது. இந்த நிலையை சீர் செய்வதற்கு அறநெறிக் கல்வி மிக முக்கியமானதாகும்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமைகளில் அங்குள்ள தனியார் க்ல்வி நிலையங்களின் ஒன்றியத்தினர் க.பொ.த. உயர்தர வகுப்புக்களை தவிர மற்றைய வகுப்புகளை காலை நேரத்தில் நடத்துவதை நிறுத்தி அறநெறிப் பாடசாலைகளில் இந்து சமய கலாசார திணைக்களத்தின் பாடத் திட்டத்திற்கேற்ப முழுநேர வகுப்புகளை நடத்த இணங்கியுள்ளனர் என பத்திரிகை வாயிலாக அறிந்தோம். இந்தச் செயற்பாடு போற்றுதற்குரியதும் பாராட்டுதற்குரியதும் ஆகும்.

அதேபோல யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிறு காலை வகுப்புக்களை நிறுத்தி அறநெறிப் பாடசாலைகளை முழுமையாக நடத்த ஒத்துழைப்பு வழங்குவார்களா? உங்களின் ஒத்துழைப்பின்றி அறநெறிப் பாடசாலைகளை சிறந்த முறையில் நடத்த முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் .

இந்து சமய கலாசார திணைக்களத்தினர் அறநெறிப் பாடசாலைக்கு பல விதமான உதவிகளை வழங்கிவருகிறார்கள் ஆனால் ஆசிரியர்களுக்கு எந்த விதமான வேதனமும் வழங்குவதில்லை. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு சமய விவகார அமைச்சருக்கும், பணிப்பாளருக்கும், அரச அதிபருக்கும் கடிதங்கள் கொடுத்துள்ளேன். இதற்கு அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

**வி.என்.இராசரத்தினம்**
**வட்டு. சிவன் இந்து சமய அபிவிருத்தி சங்கத்- தலைவர்.**

## வீதியைப் புனரமைப்பார்களா?

பருத்தித்துறை வீதியையும், நல்லூர் கோயில் வீதியையும் இணைக்கும் வீதிதான் சட்டநாதர் வீதி. இந்த வீதியால் தினமும் பல மக்கள் பயணம் செய்கிறார்கள். பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழகம் செல்லும் மாணவர்கள்; ஆலயங்களுக்கு செல்லும் அடியார்கள், அரச ஊழியர்கள் என பலர் தினமும் இந்த வீதியால் பயணம் செய்கிறார்கள்.

இந்த வீதி கடந்த இரண்டு வருடங்களாக எதுவித திருத்தமும் செய்யப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் இந்த வீதியால் பயணம் செய்யும் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதியைத் திருத்தி செப்பனிட இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் ஆவண செய்ய வேண்டும். இந்த வீதியை மாநகர சபையோ அல்லது நல்லூர் பிரதேச சபையோ கவனத்தில் எடுத்து புனரமைத்து தருவார்களா?

**சட்டநாதர் வீதி வாழ் மக்கள்.**

## ஏன் இந்தப் பாகுபாடு?

கடந்த 13.06.2012 புதன்கிழமை அன்று வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் 10 ஆம் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. பெருந்தொகைப் பணத்தினை செலவு செய்து மேளக் கச்சேரி, இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். இது ஒருபுறம் இருக்க 10 ஆம் திருவிழா உபயகாரர்களால் விழாவை ஒழுங்கமைப்பதற்கு நியமிக்கப்பட்ட பொலிஸும் யாழ். மாவட்ட வெகுஜன தேசிய சிவில் பாதுகாப்பு செயற்குழு உறுப்பினர்களும் நடந்து கொண்ட விதம் பக்தர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் கண்ணகை அம்மனை தரிசிக்க இர வில் கோயில் வாயிலுக்குச் செல்லும் ஆண் பக்தர்களைத் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பியுள்ளனர். அம்மனை தரிசிக்கச் செல்வதற்காக அனுமதிக்கும்படி கேட்டபோது கோயில் வாயிலில் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரியும், சிவில் பாதுகாப்பு செயற்குழு உறுப்பினர்களும் 10 ஆம் திருவிழா உபயகாரர்களால் ஆண்களை உள்ளே விட வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளதால் ஆண்களை உள்ளே விடமாட்டோம் என கடும் தொனியில் கூறி உட்செல்ல அனுமதி மறுத்தனர்.

காரணம் கேட்டபோது இசை நிகழ்ச்சி நடைபெறுவதால் கோவில் அருகில் பெண்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் ஆண்களை உட்செல்ல அனுமதிக்கவில்லை எனவும் தெரிவித்தனர். அம்மனை தரிசிக்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டு இவ்வாறான ஓர் இசை நிகழ்ச்சி தேவையா? என ஆண் பக்தர்கள் கேட்கின்றனர்.

மேலும் சிவில் பாதுகாப்பு செயற்குழுவினர் தங்களுக்குத் தெரிந்த ஆண்களை உள்ளே செல்ல அனுமதி கொடுத்துக் கொண்டிருந்ததையும் எல்லோரும் பார்க்கமுடிந்தது. இதுதான் இவர்களின் நேர்மையான பக்கச்சார்பற்ற செயற்பாடா? இதன்படி பார்த்தால் அவர்களுக்குத் தெரிந்த ஆண்கள் தவிர்ந்த ஏனைய ஆண்கள் எல்லோரும் குற்றம் புரிபவர்களா? நிகழ்ச்சிகளை நடத்துவதென்றால் பக்தர்களுக்கு இடையூறு இன்றி நடத்துங்கள். கோயில்கள் பக்தர்களுக்குத்தான். நிகழ்ச்சிகள் நடத்த பல மண்டபங்கள் உள்ளன.

**கனகராசா**
**ஜனசன் வீதி,கொடிகாமம்**

## மின்வெட்டுக்கு காரணம் கூறுவார்களா?

கோப்பாய் பகுதியில் தொடர்ச்சியாக மின்வெட்டு இருப்பதால் அப்பகுதி மக்கள் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒன்று விட்ட நாள் பகல் முழுவதும் மின்வெட்டு இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணியில் இருந்து இரவு 9 மணி வரையிலான நேரத்தில் மின்வெட்டு ஏற்படுகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள், இரவு நேரங்களில் வேலை முடிந்து வீடு நோக்கிச் செல்லும் பயணிகள் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக பலதடைவைகள் மின்சார சபைக்கு அறிவித்தல் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக வீதி அகலிப்பு வேலை காரணமாகவே இந்த மின்வெட்டு ஏற்படுவதாக மின்சார சபையினர் தெரிவிக்கின்றனர். இரவில் எதை அகலிக்கிறார்கள்?.

வீதி அகலிப்பு வேலைகள் பகலில் இடம் பெறுவதால் இரவில் ஏன் மின்வெட்டினை ஏற்படுத்துகிறார்கள் என்பது தெரியாமல் அப்பகுதி மக்கள் உள்ளனர். ஆகவே இது சம்பந்தமாக உரிய காரணத்தை பத்திரிகை ஊடாக அறியத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**கேதீஸ்வரன், கோப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஸ்க் மிக முக்கியம்



முகத்தை அழகாகவும், இளமையாகவும் வைத்திருக்க மாஸ்க் மிக முக்கியமானது. இது முகப் பொலிவைக் கொண்டு வருவதுடன் ஒரு வெளிப்படையான நிற மாறுதலையும் கொண்டு வரும்.

அது மட்டுமல்லாமல் உங்கள் முகத்தில் ஒரு மென்மையையும் புத்துயிரையும் கொடுக்கும். இதனைச் சரியாக மற்றும் பொருத்தமான அளவில் பயன்படுத்துவதால் முகத்தில் தெரியும் குறைகள் நீங்குகின்றன.

சந்தைகளில் ஏராள மாஸ்க் வகைகள் உள்ளன. உங்கள் முகத்தைப் பொறுத்து பொருத்தமான மாஸ்க்கை தேர்ந்தெடுத்து அதையே கடைசிவரை கடைப்பிடிக்கவும். நீங்கள் விரும்பினால் வீட்டிலுள்ள பொருள்களைக் கொண்டே மாஸ்க்கை தயாரிக்கலாம்.

**சொர சொரப்பான சருமத்துக்கு**

முட்டையின் மஞ்சள் கருவை பாதி தேக்கரண்டி தேனுடன் கலந்து அதனுடன் ஒரு தேக்கரண்டி பால் பவுடர் போட்டு கலந்து பேஸ்ட் மாதிரி உருவாக்கி முகத்தில் சீராகத் தடவவும். 20 நிமிடத்திற்கு பிறகு நீரால் முகத்தைக் கழுவிக் கொள்ளவும்.

**எண்ணெய் சருமத்துக்கு**

முட்டையின் வெள்ளைக் கருவை பாதி தேக்கரண்டி தேனுடன் கலந்து அதில் பாதி தேக்கரண்டி எலுமிச்சை சாறு கலந்து பேஸ்ட் மாதிரி செய்து கொண்டு முகத்தில் சீராகத் தடவவும். 20 நிமிடத்துக்குப் பிறகு முகத்தை நீரால் கழுவிக் கொள்ளவும்.

**ஆழமான துளைகள் கொண்ட சருமத்துக்கு**

சோள மாவுடன் பால் கலந்து அதில் சிறிது எலுமிச்சை சாறு கலந்து பேஸ்ட் செய்து அதை முகத்தில் உடனே தடவிக் கொள்ளவும்.

**கறுப்பு மறுக்களைக் கொண்ட சருமத்துக்கு**

முட்டையின் வெள்ளைக் கருவை சோள மாவுடன் கலந்து பேஸ்ட் ஆக்கி இதைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது அரை மணி நேரம் வரை தடவவும். பிறகு தூய்மையான நீரில் தேய்த்துக் கழுவவும்.

**எல்லாவித சருமத்துக்கும்**

வெள்ளரி பேஸ்ட்டை செய்து முழு முகத்திலும் தடவவும். வெள்ளரிசாறு கண்களின் ஓரங்களில் உள்ள கரு வளையங்களை நீக்க உதவும். இது பொலிவை ஊட்டுவதோடு குளிர்ச்சியையும் தருகிறது.

**மாஸ்க் தடவும் முறை**

முடியை கெட்டியாக முடிந்து கொள்ளவும். தூய்மையான நீரைக் கொண்டு நன்றாக முகத்தைக் கழுவிக் கொள்ளவும். அகன்ற பாத்திரம் மற்றும் மிருதுவான பிரஷ்ஷை உபயோகிக்கவும். மாஸ்க்கை முகத்தின் மென்மையான பாகங்களான கண்களின் ஓரம், இமைகள் மற்றும் உதடுகள் ஆகியவற்றில் தடவுவதை தவிர்க்கவும்.

மாஸ்க் தடவிய பிறகு குறைந்தது அரை மணி நேரம் காய வைக்கவும். மாஸ்கை அகற்றும் போது கவனத்துடன் அகற்றவும். மீண்டும் தூய்மையான நீரால் நன்றாக முகத்தைத் துடைத்துக் கழுவவும்

## கருவளையமா?

சிலருக்குக் கண்களுக்குக் கீழ், இரண்டு கன்னப் பகுதியிலும் கருமை படர்ந்து திட்டுத் திட்டாக இருக்கும். இது முக அழகை கெடுத்து விடும். அந்தக் கருமையை விரட்டியடிக்க ஒரு டிப்ஸ்...


வேப்பங்கொழுந்து சிறிதளவு, ஆரஞ்சு தோல் விழுது, கஸ்தூரி மஞ்சள் சம அளவு எடுத்து கலந்து எடுத்து எங்கெல்லாம் கருமை படர்ந்து உள்ளதோ அங்கெல்லாம் பூசி 5 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இரு முறை செய்து வர கருமை ஓடிவிடும்.

கரு வளையம் போக கண்களைச் சுற்றி பாதாம் எண்ணெய் தேய்த்தால் கரு வளையம் படிப்படியாக மறையும். வெதுவெதுப்பான நீரில் கால்களை பதினைந்து நிமிடம் வைக்கவும். இவ்வாறு செய்து வந்தால் பாதங்கள் பொலிவு பெறும்.






- ஒலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.
- பச்சை உருளைக்கிழங்கின் சாற்றை முகத்தில் தடவி வர சூரியக் கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.
- 2 கரண்டி முள்ளங்கி சாற்றுடன் 2 கரண்டி மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணிநேரம் கழித்து, சுடுநீரில் முகத்தைக் கழுவ வேண்டும். இதை தினசரி செய்து வர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளி மறையும்.
- பப்பாளி பழத்தை அரைத்து, முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.
- புளித்த மோரை முகத்தில் 15 நிமிடம் தடவி, மிதமான சுடுநீரில் கழுவ முகம் பொலிவு பெறும். இதை தொடர்ந்து 15 நாள்களுக்கு செய்துவர நல்ல பலன் கிடைக்கும்.
- முழங்கை கருப்பாகவும், சொர சொரப்பாகவும் இருந்தால், தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவி வர மிருதுவாக மாறும்.
- தேன் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்த கலவையை உதட்டின்மீது தொடர்ந்து தடவி வந்தால், தரம் குறைந்த லிப்ஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் கருமை நிறம் மறையும்.
- தயிருடன் கடலை மா கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும்.
- முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப் பூ இதழ்களை அரைத்து, அதோடு பால், பச்சைப் பயறு மா மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர சருமம் பளபளக்கும்.
- கரும்புள்ளி உள்ள இடத்தில், பச்சை பயருடன் தயிர் சேர்த்து தடவ வேண்டும். அது காய்ந்ததும் கைகளால் மேலும் கீழும் நன்கு தேய்த்து பின் முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும்.
- முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவி வர வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.
- பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்கத் தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாறு மற்றும் அரைக் கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் எடை படிப்படியாக குறையும்.
- நகங்களை வெட்டும் முன் நகத்தில் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.
- கூந்தலில் எண்ணெய்ப் பசை அதிகமாக இருந்தால், முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவி ஊற விடவும். பின் தலையை அலசினால் தலையில் உள்ள எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.
- தேனீர் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறு கலந்து தலையில் தேய்த்துக் குளித்தால், தலை முடி பளபளப்பாகும்.
- வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.
- ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.



# ஆண்களும் அழகில் கவனம் செலுத்த வேண்டும்

பெண்களைவிட ஆண்கள் அழகின் மீது அதிகமாகக் கவனம் செலுத்துவதில்லை. அது ஏன் என்றும் புரியவில்லை.

ஆனால் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் அதிகமாக வெளியுலக தொடர்பு உள்ளது. அவர்கள் தான் வெயில், மழை, தூசியிலும் செல்வார்கள். ஆனால் அவர்கள் அழகின் மீது அக்கறை காட்டமாட்டார்கள். ஆண்கள் ஆடைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் முகத்துக்குக் கொடுப்பதில்லை.

ஆண்களும் அழகுக்கு நேரம் ஒதுக்கி உடலை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வீட்டில் எதுவும் செய்ய முடியவில்லை என்றால் மாதம் ஒரு முறை ப்யூட்டி பார்லர் போகலாம்.

வீட்டிலே செய்யும் சில இலகுவான அழகுக் குறிப்புகள்.

**முக அழகுக்கு**

பொதுவாக ஆண்கள் வேலைநிமித்தமாக அதிகமாக வெயிலில் சுற்றித் திரிவார்கள். வீட்டுக்கு வந்தவுடன் முகத்தை நன்றாக குளிர்ந்த நீரில் அலசவும். இன்னும் கொஞ்சம் நேரம் ஐஸ் கட்டியை ஒரு துணியில் போட்டு முகத்தில் ஒத்தடம் கொடுக்கவும். இதனால் முகம் தெளிவடையும். இதனைத் தினமும் செய்யுங்கள்.

சில ஆண்களுக்கு முகம் உலர்ந்து சொரசொரப்பாக இருக்கும். அவர்கள் முட்டையின் மஞ்சள் கருவை எடுத்து அதில் பாலாடையும் பன்னீரையும் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் ஊறவிடவும். பின்னர் இளஞ்சூடான வெந்நீரில் அலசினால் சில நாள்களில் தோல் மிருதுவாக மாறிப் பளபளப்பாகி விடும். மாதம் இருமுறை இவ்வாறு செய்துவர முகம் பளபளப்பாக மாறும்.

முகத்தின் கரும்புள்ளிகள் மாற சிறிது எலுமிச்சை சாறுடன் தயிரை சமமாக கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் அலசவும். கருபுள்ளிகள் மாயமாக மறைந்து விடும்.

**உதடுக்கு**

சில ஆண்கள் சிகெரட் குடித்து உதடுகள் கருமையாக இருக்கும் அதனை போக்க பீட்ரூட் சாறு, அல்லது புதினா இலை சாறு, அல்லது மாதுளை சாறு எடுத்து உதடுகளில் பூசி வர உதடுகள் சிகப்பாக மாறிவிடும். (தொடர்ந்து சிகெரட் குடிப்பவர்களுக்கு இந்த டிப்ஸ் பயனில்லை)

**பற்களுக்கு**

எலுமிச்சை சாறுடன் உப்பு கலந்து அல்லது புதினா இலையை காய வைத்து அதனை தூளாக்கி இந்த தூளில் பல் தேய்த்தால் பற்கள் பளிச்சென்று இருக்கும்.

**தலைமுடிக்கு**

தலைமுடி நன்றாக கருகருவென்று வளர்வதற்கு நல்லெண்ணெய், விளக்கெண்னெய், தேங்காய் எண்ணெய் மூன்றும் சமமாக எடுத்து தலைக்கு தேய்த்து ஊறிய பின்பு குளிக்க வேண்டும்

வீட்டில் மருதாணி இலை, கறிவேப்பிலை சிறிது செம்பருத்தி பூ, இதனை காய வைத்து நன்றாக அரைத்து தேங்காய் எண்ணெயில் போட்டு தலைக்கு தேய்க்கலாம்.

உணவில் அதிகமாக கீரை, மற்றும் பச்சை காற்கறிகளை அதிகம் சேர்க்கவும்

இளம் நரை வந்தவர்கள் ஷாம்பு போடுவதை தவிர்க்கவும். கூந்தலை ட்ரையாக வைக்க வேண்டாம். சுத்தமான தேங்காய் [illegible] பின் வெள்ளை கருவை தலைக்கு தேய்த்து குளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org